DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1431 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 8, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue, Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333



# இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற யாழ்ப்பாணம் நல்லூரானின் சூர்யோற்சவம்!

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின் 19ஆவது நாள் திருவிழாவான சூர்யோற்சவம், இன்று 8ம் திகதி காலை நடைபெற்றது.
காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூஜைஜைத் தொடர்ந்து ஏழு குதிரைகள் பூட்டிய இரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான், உள் வீதி உலாவும், வெளி வீதியுலாவும் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாளை சனிக்கிழமை 9ம் திகதி

## ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள அற்புதமான நிகழ்ச்சி

# ‘பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி’




மறைந்தும் மறையாத மஹாகவி பாரதியாரை நேரில் கண்டது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் உரையாற்றக் கூடிய அற்புதப் படைப்பாளி இசைக் கவி ரமணன் அவர்களின் உரையையும் உணர்வைத் தரும் பாரதியாரின் பாடல்கள் சிலவற்றை இசையோடு கேட்கவும் இசை ரசிகர்கள் அழைக்கப்பெறுகின்றனர்.
தமிழ்நாட்டிலும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நன்கு அறியப்பெற்ற பேச்சாளர். பாடகர் மற்றும் நடிகர் இசைக் கவி ரமணன் உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கின்றார்.
கனடா கந்தசுவாமி கோவில் ஆலய மண்டபத்தில் இந்த விழா நடைபெறுகின்றது. புாரதியார் பாடல்களுக்கான இசையை பைரவி நுண்கலைக் கூடத்தினர் வழங்குகின்றனர். குறைந்த கட்டணமாக 15 டாலர்கள் மட்டுமே. மேலதிக விபரங்களுக்கு 647 762 9512 அல்லது 647 891 7725

**"ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா"**
**வெள்ளிக்கிழமை 8ம் திகதி அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பமாகின்றது**
**(மேலதிக விபரங்குளுக்கு பின் பக்கத்தைப் பார்க்கவும்)**

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Payroll Service
Bookkeeping Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG Billyard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX ACE
Bus:416 270 1111 Cell:416 801 3219
3-1286 Kennedy Road, Toronto, ON. M1P 2L5
வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ள (Appraisal Report)
24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K.Bales (Broker) MVA, (Market Value Appraiser) FRI, CRES. Email:skbales@hotmail.com


Latika Production
பெருமையுடன் வழங்கும்
பிரமாண்டமான உள்ளரங்க இசை நிகழ்ச்சி
Latika
Gold House
CANADA
பொங்கிவரும் இசை வெள்ளம்
தென் இந்திய கனடிய
கலைஞர்களின் சங்கமம்
Actor/ Singer
Chrish
Singer
Unni Menan
Anchor
B.H Abdhul Hameed
Singer
Sainthavi
Actress/ Singer
Rammiya Nambeesan
Music
Mathan Band
Singer
Aravinth
Singer
Srithar Sena
MC
KeeKee
Actor/ Singer / MC
Vijay
Music Director /Singer
A.R. Rehana
Singer
Chandraleka Anubama
Singer
Bob Shalini
Singer
Manashi
Singer
Anu Anand
Tickets
$40
$60
CANADA
Event Centre
Venue :
300 Water St, Whitby,
ON L1N 9B6, Canada
October
21
SATURDAY 4PM
Tickets
VIP $100
VVIP$200
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.
416 423 7555 - 416 625 5010

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# செனல் – 4 மீண்டும் வெளியிட்ட ஒரு உண்மைக் கலசம், கொலைகாரர்களின் நலன்களுக்காக நிச்சம் தன்னை தகர்க்கப் போகின்றது?

பிரித்தானிய ஒளிபரப்பு நிறுவனங்களில் தீவிரமாக செயற்பட்டு வரும் செனல் 4 இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடபில் கடந்த செவ்வாய்க்கிழமை 5ம் திகதி இரவு வெளியிட்ட மற்றுமொரு ஆவணப்படம் குற்றச் செயல்கள் அரங்கேற்றப்பட்ட இலங்கையிலும் யுத்தத்தின் கொடிதான பாதிப்பினால் நாட்டை விட்டு வெளியியேறியவர்கள் வாழும் வெளிநாட்டிலும் பரபரப்பையும் அதிர்வலைகளையும் எழுப்பியுள்ளது என்பதை நாம் பல ஆண்டுகளுக்கு முன்பே நாம் தெளிந்துணர்ந்துள்ளோம்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற இந்த பண்டிகைக் கால தாக்குதலுக்கு ராஜபக்ச குடும்பத்தினரே நேரடியாக பொறுப்பு என அந்த ஆவணப்படம் குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும் இந்த ஆவணப் படம் தொடர்பில், இலங்கை அரசிடமிருந்து நேர்மையான கருத்துக்கள் வெளியாகாமல் பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் மீண்டும் பாதிப்புக்களுக்காக்கிடும் வகையில் இலங்கையெங்கும் கருத்துக்கள் உடனடியாக பரவல் செய்யப்பட்டு இவை செய்தியாகவே வெளியாகியுள்ளன. அந்த தாக்குதல் தொடர்பில் புதிய அறிக்கை ஒன்றை நாடாளுமன்ற விசேட குழு ஒன்றிடம் சமர்ப்பிக்கப்படுமென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு' நாணயக்கார கூறினார். “சர்வதேச விசாரணை ஒன்று தேவைப்பட்டால் அதற்கான அனுசரணையளிப்பது குறித்தும் அமைச்சரவை விவாதித்தது” என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கைகளும் அறிவிப்புக்களும் தொடர்ச்சியான ஏமாற்று நாடகத்தின் இடைவேளைக்குரிய காட்சியாகவே வெளிப்படுகின்றது

ஆனால், அமைச்சரவை பேச்சாளரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சரான பந்துல குணவர்தன அமைச்சரவையில் இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கபப்டவில்லை என 6ம் திகி புதன்கிழமை ஊடக சந்திப்பில் தெரிவித்தார். இதற்கு காரணம் ஒருவிதமான அச்சமே என்பதும் அனைவருக்கும் புரியக் கூடிய ஒன்றாகும். ஏவ்வாறு இருப்பினும். கள்வர்கள் கூட்டத்திற்குள் கனவான்கள் எவரையும் காணமுடியாது என்பது போல இலங்கையின் ஆட்சி பீடத்தை கொள்ளயடித்து காலியாக்கியவர்கள் கொக்கரித்துக் கொண்டு தான் இருப்பார்கள் என்பது தெரிந்த ஒன்றே.

இவ்வாறு பல காட்சிகள் தெரிகின்ற வேளையில் தங்கள் சகாக்களை காப்பாற்றும் முயற்சியாக, “ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டம் நடைபெறும காலத்தை அண்மித்து செனல் 4 இவ்வாறான கானொளிகளை வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளது” என அரசாங்கத் தரப்பின் அமைச்சர்கள் அனைவரும் ஒரே குரலில் குற்றச்சாட்டை முன்வைக்கத் தொடங்கிவிட்டனர்.

அரசியல்வாதிகளுக்கு அப்பாற்பட்டு கத்தோலிக்க திருச்சபையும் இத்தாக்குதல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றை கோரியுள்ளது. கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் இந்த ஆவணப்படம் வெளியானதை அடுத்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றில், “அறிக்கை ஒன்றை மாத்திரம் தயாரிப்பது என்ற நோக்கத்துடன் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டால் அதன் மூலம் காத்திரமான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த முடிவுகள் ஏதும் வராது” என்ற ஆணித்தரமானக் கருத்தொன்றைக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்று- துணை இரணுவக் குழுவாக செயல்படுவதாக குற்றஞ்சாட்டப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பேச்சாளரான ஹச்னீர் ஆசாத் மௌலானாவின் வாக்குமூல ஆதாரத்தின் அடிப்படையில் அந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்ற நேரத்தில் ஆட்சி அதிகாரங்களை தங்கள் வசம் தொடர்ச்சியாக வைத்திருக்க விரும்பும் அனைத்து தரப்பினருக்கும் மத்தியில் நீதி நிர்மூலம் செய்யப்பட்டு நியாயங்கள் தோற்கடிக்கப்படும் என்பது இந்த மாங்கனித் தீவின் கறைபடிந்த கடந்த காலத்தின் சாட்சியங்களாக விளங்குகின்றன

அந்த தாக்குதல்கள் முழுவதும் கோட்டாபயவின் நேரடி உத்தரவுகளை அடுத்து, அரசின் புலனாய்வு சேவையின் தலைவராக இருந்தா துன் சுரேன் சாலே மூலம் நடத்தப்பட்டது என்பதற்கான ஆதாரம் காணப்படுவதாக அந்த ஆவணப்படம் மேலும் கூறுகிறது.
இதனையும் தாண்டி, அடையாளம் காணப்படாத உயர்மட்ட அரச அதிகாரி ஒரு-வரும் அந்த ஆவணப்படத்தில் பேசியுள்ளார். “கோட்டாபய சாலேயை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அதன் காரணமாகவே அவரால் விரைவாக பதவி உயர்வுகளை பெற முடிந்தது. இலங்கையில் பல பிரச்சினைகளுக்கு அவரையே அதிகம் குற்றஞ்சாட்ட வேண்டும்” என அந்த அதிகாரி கூறுகிறார்.
”குற்ற விசாரணைப் பிரிவு தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு சம்பந்தப்பட்டுள்ளது என்பதை நிச்சயம் கண்டறிந்திருப்பார்கள்” என பெயரிடப்படாமலும், அடையாளம் காணப்படாமலும் இருக்கும் அந்த அதிகாரி செனல் 4 ஆவணப்படத்தில் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுதாக்குதல்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை கோட்டாபய ராஜபக்ச வெளியிடவே இல்லை. ஆனால், அந்த அறிக்கையை தாங்கள் பார்த்துள்ளதாக கூறும் செனல் 4, முக்கிய குண்டுதாரியை தாக்குதலுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே புலனாய்வு பிரிவினர் அறிந்திருந்தனர் என தெரிவித்துள்ளது.

இந்த ஆவணப்படத்தில் குற்ற விசாரணைப் பிரிவு பிரிவின் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நி'ாந்த சில்வாவும் பேசியுள்ளார். ராஜபக்ச ஆட்சியில், நாட்டின் தெற்கு பகுதியில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை அவர் விசாரணை செய்து வந்தார், எனினும் கோட்டாபய ராஜபக்சவை குற்ற புலனாய்வு பிரிவிற்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை விடுத்த காரணத்தால் ஏற்பட்ட “உயிர் அச்சுறுத்தல்” காரணமாக அவர் தற்போது நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமசிங்கவின் படுகொலை பற்றிய விசாரணை தொடர்பிலேயே நிஷாந்த சில்வா கோட்டாபய ராஜபக்சவை விசாரணைக்கு அழைத்திருந்தார். லண்டனிலிருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை, இந்த ஆவணப்படம் தொடர்பில் வெளியிட்டுள்ள விமர்சனத்தில், அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் திடுக்கிடும் வகையில் உள்ளதாக கூறியுள்ளது.

இந்த குற்றசாட்டுகள் திடுக்கிடும் வகையில் இருந்தாலும், அவை நேரடியா-கவே உள்ளன: அதாவது ராஜபக்சக்களின் சகாக்கள் தேசிய தௌஹீத் ஜமாத்துடன் நேரடியாக தொடர்பில் இருந்தனர், மேலும், அவர்கள் அந்த குண்டு வெடிப்புகளுக்கு முன்னர் அந்த அமைப்பின் தலைவர்களை பொலிசார் கைது செய்வதற்கு தடையாக இருந்தனர் அல்லது படுகொலைகளுக்கு பிறகு முழுமையான விசாரணைகளை முன்னெடுக்க முட்டுக்கட்டை போட்டனர்” என்கிறது கார்டியன் விமர்சனம்.
இவ்வாறிருக்க. ஜனாதிபதிப் பதவியை ‘கோட்டை’ விட்டுள்ள கோட்டாபய ராஜபக்ச நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள மறுப்பறிக்கை ஒன்றில், இந்த ஆவணப்படம், ராஜபக்சக்களை குறிவைத்து எடுக்கப்பட்டுள்ளது, அது உண்மைக்கு புறம்பானது என்று கூறி அதை மறுத்துள்ளார். மேலும் சுரேன் சாலே மீதான குற்றச்சாட்டையும் மறுத்துள்ள அவர், தான் கத்தோலிக்க திருச்சபை மற்றும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை தான் பெரிதும் மதிப்பதாகவும் கூறியுள்ளார். இவ்வாறான அறிக்கைகளும் கருத்துக்களும் பகிரப்பட்டுக் கொண்டிருக்க சானல்- 4 இன் இந்த ஆவண ஆதாரமும் அழிக்கப்பட்டு பொய்கள் நடுத்தெருவிற்கு வந்து கோலோச்ச. உண்மைகள் மீண்டும் மௌனித்துப் போகும் சந்தர்ப்பங்களே அதிகம் உள்ளன.

NOTICE IS HEREBY GIVEN that on behalf of Dexter Seusahai application will be made to the Legislative Assembly of the Province of Ontario for an Act to revive Tribal Carnival Inc. The application may be considered by the Standing Committee on Procedure and House Affairs. Any person who has an interest in the application and who wishes to make submissions, for or against the application, to the Standing Committee on Procedure and House Affairs should notify, in writing, the Clerk of the Legislative Assembly, Legislative Building, Queen's Park, Toronto, Ontario, M7A 1A2. Dated at 4pm, this 30th day of September 2023.

Dexter Seusahai

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**HELP WANTED**

Help wanted for restaurant in Oshawa near Harmony and Taunton.

- Dishwasher
- Kitchen help
- Food delivery driver

Contact: 416-624-2224

**Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி**

**Canadian Citizenship Exam** க்கு உதவிகள் தேவையா? பரீட்சைக்கு தயார்படுத்தி **Canadian Citizenship Exam** எடுப்பதற்கு உதவி செய்து தரப்படும்.

பின்வரும் இலக்கத்தை அழைக்கவும்

**Ramneet** 437-771-5294

**BASEMENT FOR RENT**

**Scarborough** நகரில் **Neilson & Mclevin** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் ஒரு அறைகொண்ட **Basement** உடனடியாக வாடகைக்கு உண்டு.
செப்டம்பர் மாதம் தொடக்கம் வழங்கலாம்.
விபரங்களுக்கு 416-299-4904

# இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கோரி ஆனைவிழுந்தான் மக்கள் கவனிப்பு போராட்டம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்





கிளிநொச்சி அக்கறையான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில் வசிக்கும் மக்கள் சிலர் 01.09.2023 அன்று கிளிநொச்சியில் நகரப் பகுதியில் அமைந்துள்ள 55 ஆவது இராணுவ முகாமின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது பகுதியில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக்கூறி இந்த கவனயிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அவர்கள் தெரிவிக்கையில், தமது பகுதியில் அனைத்து விடயங்களிலும் இராணுவம் ஒத்தாசை புரிவதாகவும், தற்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சியான நிலைமையிலும் தங்களுக்கான குடிநீர் விநியோகத்தினை இராணுவத்தினரே மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

தமது பகுதிகளில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்வாயினும் இராணுவத்தினரின் உதவியே முதல் கிடைக்கப்பெறுவதாகவும் தமது பகுதியளில் நடைபெறும் மரண நிகழ்வுகளில் கூட இராணுவத்தின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளதாகவும் அத்துடன் தமது பகுதிகளில் சட்ட விரோத செயற்பாடுகள் அதிகரித்து காணப்படுவதன் காரணமா இதனை கட்டுப்படுத்துவதில் இராணுவத்தினரே முன்னிப்பதாகவும் தெரிவித்தனர்.



அத்துடன் இவ்விடயம் தொடர்பாக அக்கறையான் பெலிசாருக்கு பலமுறை தெரிவித்தாலும் அவர்கள் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை எனவும் எனவே இப்பகுதியில் உள்ள இராணுவ முகாமினை அகற்ற வேண்டாம் என வலியுறுத்தி கவனயீர்பு போராட்டத்தை மேற்கொண்டனர்.

# யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு



"தரமான கல்வியை உறுதி செய்து உரிமைகளை வென்றெடுப்போம்" எனும் தொனிப் பொருளில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு யாழில் இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த மாநாடு பெருமளவிலான அதிபர் ஆசிரியர்களின் பங்குபற்றலுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் மதத் தலைவர்கள் ஆசிரியர் சங்க தலைவர் செயலாளர் உள்ளிட்ட சங்கத்தின் பிரதிநிதிகள் உறுப்பினர்கள் எனப் பலரும் நாடு முழுவதிலும் இருந்து வந்து கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ உபதலைவர் ரசிக்கா அததாங்கொட இலங்கை அரசியல் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் இலங்கை நிறுவனத்தைந்து மாவட்டங்களின் சேர்ந்த ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர் இதன்போது நீண்ட காலமாக ஆசிரியர் சங்கத்திலிருந்து சேவையாற்றிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர் சங்கத்தின் பிரகடனமும் இதன்போது வெளியிடப்பட்டது.





# இலவச மருத்துவ சேவைக்கு சாவு மணி அடித்து வைத்தியத்துறையை தனியார் மயப்படுத்தும் முயற்சி — அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு!

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக நாங்கள், இந்த நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களின் தட்டுப்பாடு தொடர்பாக சொல்லிக் கொண்டு வருகின்றோம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (01) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அதன் அடிப்படையில் நாங்கள் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளை உத்தியோகபூர்வமாக சந்திக்கும் பொழுது நிறைய முன்மொழிவுகளை கொடுத்திருந்தோம். அந்த சந்திப்புகளில் சாதகமாக பரிசீலிப்பதாக கூறியிருந்த போதிலும் இன்று வரை அந்த மருந்துகளுக்கும், சத்திர சிகிச்சை உபகரணங்களுக்குமான தட்டுப்பாடுகள் சரிவர நிவர்த்தி செய்யப்படவில்லை.

மேலும் நாங்கள் கூறியிருந்தோம் அரச வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுகின்ற போது நோயாளிகள் மருந்துகளை தனியார் வைத்தியசாலைகளிலோ அல்லது தனியார் மருந்தகங்களிலோ வாங்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது.

இந்த நாட்டினுடைய பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகளின் விலைகள் அதிகரித்து இருந்தமையால் மக்கள் அதனை வாங்கி பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தார்கள். அதனால் உயிராபத்தான நிலையில் அதிக வைத்தியசாலை அனுமதிகள் ஏற்பட்டிருந்தன.

இப்போது அரசாங்கம் மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்ற போதிலும் நமது அவதானிப்புகளின் அடிப்படையில் உதாரணமாக ஐந்து ரூபாய்க்கு குறைவாகவே விலை குறைப்புகள் இருந்துள்ளன. அதாவது விலைகள் பெரிய அளவில் குறைக்கப்படவில்லை.

எமது நாட்டின் அனைத்து துறைகளிலும் இருந்து நிபுணர்கள், புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். நாட்டில் உள்ள பொருளாதார பிரச்சினை காரணமாகவும், எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையீனம் காரணமாகவும் எமது நாட்டில் இருந்து புத்திஜீவிகள் வெளியேறிக் கொண்டு இருக்கின்றார்கள்.




எமது சுகாதாரத் துறையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நாங்கள் முற்கூட்டியே மக்களுக்கும், அரசாங்கத்துக்கும். தெளிவுபடுத்துவது வழமை. அதனடிப்படையில் நாங்கள் ஒரு வருடத்திற்கு முதலே இதை கூறத் தொடங்கியிருந்தோம். இன்று வரை சுகாதார அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிட்டத்தட்ட 850 வைத்தியர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள். அதில் 300 வைத்திய நிபுணர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட தர வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளார்கள்.

வைத்தியர்கள் மாத்திரமல்ல தாதியர்கள், துணை மருத்துவ உதவியாளர்கள் ஆகியோரும் இந்த நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறு வைத்தியத்துறை சார்ந்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறும்போது இலவச மருத்துவத்திற்கு மிகவும் பாரிய பின்னடைவு ஏற்படும்.

இலங்கையில் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் என்பது, நமது நாட்டில் உள்ள 95 வீதத்திற்கும் மேற்பட்ட வைத்தியர்களை கொண்ட சங்கமாகும். ஆகவே எமது அவதானிப்புகளின் அடிப்படையில், இவ்வாறு மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடுகளையோ, மருந்து தட்டுப்பாடுகளையோ நீக்காமல் இருப்பதும் மற்றும் வைத்தியர்கள் இந்த நாட்டை விட்டு செல்வதை தடுக்காமல் இருப்பது என்பது நாங்கள் ஏற்கனவே கூறியவாறு இந்த இலவச மருத்துவ சேவைக்கு சாவு மணி அடித்து சுகாதார சேவையை முற்றாக தனியார் மயப்படுத்துவதற்குரிய செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய மார்க்சிச லெனின் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் ஊடக சந்திப்பு

எதிர்வரும் காலத்தில் நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்பட உள்ளது. அண்மையில் பங்களாதேீடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனின் ஒரு பகுதி மீள வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

நிச்சயமாக நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்பட சாத்திசயம் உள்ளது. வரிசை ஏற்படும் அபாயம் தற்பொழுது தலைதூக்க வழி கோருகின்றது.

இவ்வாறு புதிய மார்க்சிச லெனின் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்தில்வேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்த ஆட்சியாளர்கள் மக்களிடம் கூறியது என்னவென்றால் 2.9 பில்லியன் அமெரிக்க டாலர் சர்வதேச நாணய நிதி கிடைத்தவுடன் நாங்கள் இலங்கையை சொர்க்க மாக்குவோம் என கூறியிருந்தனர்.

உண்மையில் அதுவல்ல பிரச்சனை. 2.9 பில்லியன் அமெரிக்க டொலரின் ஒரு பகுதியை தான் சர்வதேச நாணய நிதியம் வழங்கியிருந்தது.

முழுக் கடனையும் அடைப்பதற்கு அவர்கள் வழங்கி இருக்கவில்லை. இவர்கள் தொடங்கும் கடன் வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

வேறு வேறு நாடுகள் வேறு வேறு அமைப்புகள், ஊடாக கடன் வாங்குகின்றார்கள் தவிர கடன் கொடுப்பதாக இல்லை.

தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைதான் உள்நாட்டு கடனை மறுசீரமைக்கின்றோம் என்பது.

இந்த இடிஎ.்.ப் இ பி எ.்.ப் போன்ற மிகப்பெரிய நிதி இருக்கின்ற இடத்தில் கை வைத்துள்ளார்கள். அது எடுக்கப்பட்டால் இந்த மக்களுக்கு எதுவுமே இல்லை.

இந்த ஆட்சியாளர்கள் ஒரு கடனை அடைப்பதற்கு மேலும் பல கடன்களை பெறுகின்றார்கள். இந்த ஆட்சியாளர்கள் வாங்குகின்ற வேலையைத்தான் செய்கின்றார்கள்.

ஏன் என்றால் நாட்டினுடைய உற்பத்தி, இந்த மக்கள் இணைந்து உற்பத்தியை பெருக்கினால் மட்டுமே இவர்கள் இந்த கடனில் இருந்து தவற முடியும் என்பது நிதர்சனம். இதன் மூலம் தான் தேசிய பொருளாதாரத்தை படிப்படியாக கட்டி அமைக்க முடியும்.

கனடிய செய்திகள்
Canadian News

## Statement from Ontario's Education Minister Stephen Lecce

# ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்ஸேயின் அறிக்கை:

"As many kids go back to school we are going back to basics, focused on academic achievement and keeping kids in class.

We are excited for students to benefit from our renewed focus on reading, writing, math, STEM and skilled trades, supported by 2000 more educators and nearly $700 million more in public education for the 2023/24 school year.

We are determined for students to benefit from a normal, stable and enjoyable school year with extracurricular activity, sports and clubs.

To the students, parents and educators, we wish you a positive year ahead!"

“பல குழந்தைகள் மீண்டும் பாடகாலைகளுக்குச் செல்லும் இன்றைய நாளில், கல்வி சாதனை மற்றும் குழந்தைகளை வகுப்பில் வைத்திருப்பதில் நாங்கள் எமது கவனத்தைச் செலுத்தி நாங்கள் அவர்களின் அடிப்படைகத் தேவைகளை கவனிக்கும் வகையில் திரும்புகிறோம்.



2023/24 கல்வியாண்டில் 2000 கல்வியாளர்கள் மற்றும் பொதுக் கல்வியில் கிட்டத்தட்ட $700 மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டில் ஆதரவுடன் படித்தல், எழுதுதல், கணிதம், STEM மற்றும் திறமையான வர்த்தகங்கள் ஆகியவற்றில் எங்களின் புதுப்பிக்கப்பட்ட கவனம் மூலம் மாணவர்கள் பயனடையப்போகின்றார்கள் என்பதை அறிந்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

தங்கள் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளான, விளையாட்டு மற்றும் மாணவர்களின் அமைப்புக்கள் மூலம் மாணவர்கள் ஒரு சாதாரண, நிலையான மற்றும் மகிழ்ச்சியான பாடசாலை ஆண்டிலிருந்து பயனடைய வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

மேலும். மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு, எமது வாழ்த்துக்கள் இந்த ஆண்டு ஒரு நல்ல ஆண்டாக இருக்க வாழ்த்துகிறோம்!”

# இசையை முழு நேரத் தொழிலாகக் கொண்ட தாயகக் கலைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த புலம் பெயர் தமிழ் உறவுகள் ஆதரவு நல்க வேண்டும்

## கனடா ஸ்காபுறோ நகரில் இடம் பெற்ற பாராட்டு உபசார வைபவத்தில் தாயகப் பாடகர் சாந்தன் கோகுலன் உருக்கத்தோடு வேண்டுகோள்



“எமது தாயக மண்ணில் இசையை முழு நேரத் தொழிலாகக் கொண்ட தாயகக் கலைஞர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் உள்ளார்கள். அவ்வாறான கலைஞர்களுக்கு தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை. எனவே எமது தாயகக் கலைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த புலம் பெயர் தமிழ் உறவுகள் ஆதரவு நல்க வேண்டும். அவமர்களின் பலரை வெளிநாடுகளுக்கு அழைத்து சந்தர்ப்பங்கள் வழங்கவேண்டும். அத்துடன் நாம் தெனனிந்தியக் கலைஞர்களையும் மதிக்கின்றோம். அவர்களில் பலர் இசையே முழு நேரத் தொழிலாகச் செய்கின்றார்கள். எனவே அவர்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பங்களையும் எமது புலம் பெயர் உறவுகளும் அமைப்புக்களும் தொடர்ந்து செய்ய வேண்டும். மேலும் எனது தந்தையான பாடகரும் அமரருமான சாந்தன் அவர்களுக்கும் அவரது புதல்வரான எனக்கும் தாங்கள் வழங்கிய ஆதரவிற்கும் வாழ்த்துக்களுக்கும் நன்றியையும் தெரிவிக்கின்றேன்”.

இவ்வாறு கனடா ஸ்காபுறோ நகரில் “இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தினர்” நடத்திய பாராட்டு உபசார வைபவத்தில் தாயகப் பாடகர் சாந்தன் கோகுலன் உருக்கத்தோடு வேண்டுகோள் விடுத்தார்.

மேற்படி பாராட்டு உபசார வைபவத்திற்கு “இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் கேதா நடராசா அவர்கள் தலைமை வகித்தார்.







கென் கிருபா அவர்கள் தொகுத்து வழங்கினார்.

தொடர்ந்து அங்கு சமூகமளித்த நண்பர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் பாராட்டுரைகள் வழங்கினார்கள். “இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் சார்பில் பாடகர் சாந்தன் கோகுலன் அவர்களுக்கு தங்க மோதிரம் ஒன்றும் வழங்கப்பெற்றது.





# சிங்கப்பூர் ஜனாதிபதியாக யாழ்ப்பாண தமிழர்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியை பூர்வீகமாகக் கொண்ட தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் 70 வீதத்துக்கு மேலான வாக்குகளை பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் நாட்டின் நிதி அமைச்சராகவும் துணை பாதுகாப்பு அமைச்சராகவும் துணை பிரதமராகவும் பதவி வகித்த நிலையில் தற்போது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு போட்டியாக ஜனாதிபதி வேட்பாளராக இருவர் களமிறங்கிய நிலையில் இருவரும் 20 வீத வாக்குகளை கூட பெறாத நிலை காணப்பட்டது.

இவரது தாய் யாழ்ப்பாண ஊரெழுப் பகுதியை பூர்வீகமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வைத்தியசாலையிலிருந்து வெளிநாடு சென்ற 11 வைத்திய நிபுணர்கள்

## வவுனியா மாவட்ட அரச வைத்திய சங்க கிளை செயலாளர் வைத்தியர் அரங்கன் அறிவிப்பு

(2-09-2023)

வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் இருந்து 11 வைத்திய நிபுணர்களும், 08 வைத்தியர்களும் வெளிநாடு சென்றுள்ளதாக வவுனியா மாவட்ட அரச வைத்திய சங்க கிளை செயலாளர் வைத்தியர் அரங்கன் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் 01-09-2023 அன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் கடந்த வருடம் 6 ஆம் மாதத்தில் இருந்து இதுவரை ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளார்கள். அதன்படி வைத்தியர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சென்றுள்ளார்கள்.

விசேட வைத்திய நிபுணர்கள் 272 பேர் சென்றுள்ளனர். பொருளாதார நெருக்கடி, வேலை செய்வதற்கான பொருத்தமான வளங்கள் இன்மை, இடவசதிகள் போதாமை போன்றனவே இதற்கு காரணம்.

தற்போது பிரதான வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளுக்கு ஆட் பற்றாக்குறை ஏற்படுகிறது. வைத்தியர்களுக்கான மருந்துகள், விடுதிகள், பாதுகாப்பு பிரச்சினை என்பன இதற்கு காரணங்களாகும். வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் ஒரு வைத்திய நிபுணர் கூட இல்லை.

வவுனியாவிற்கு அண்மையில் உள்ளவர்களும் வவுனியா வைத்தியசாலைக்கே வருகிறார்கள். ஆட் பற்றாக்குறை வவுனியா வைத்தியசாலையிலும் ஏற்படுமாக இருந்தால் நிலைமை மோசமாக அமையும். வவுனியா வைத்தியசாலைக்கு அண்மையில் ஒரு வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அவருடைய நியமனக் கடிதத்தில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களையும் பார்க்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு வைத்திய நிபுணர் எவ்வாறு 4 மாவட்டங்களை பார்க்க முடியும். அவ்வளவு தூரம் எங்களிடம் வைத்திய நிபுணர்கள் இல்லை. வைத்தியர்களுக்கான வேலை செய்யக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் இன்னும் பல வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லக் கூடிய நிலை ஏற்படும்.




இன்னும் 5000 இற்கு மேற்பட்டோர் செல்வதற்கு தயாரான நிலையில் உள்ளனர். இதனை தடுக்க வேண்டுமானால் அவர்களது பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும்.

அவர்கள் விருப்பத்துடன் வேலை செய்யக் கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும் வவுனியா மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான காலப்பகுதி வரை வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து 11 வைத்திய நிபுணர்களும், 05 சாதாரண வைத்தியர்களும், வவுனியா மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து 03 சாதாரண வைத்தியர்களும் வெளிநாட்டிற்கு சென்றுள்ளனர்.

இந்த நிலை தொடருமாக இருந்தால் மக்களுக்கு பாதிப்பே. இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு எமது சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முன் வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

# வவுனியா மடுக்குளம் பகுதியில் உழவியந்திரம் குடைசாய்ந்ததில் 15 வயது சிறுவன் பலி!

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடுக்குளம் பகுதியில் உழவியந்திரம் குடை சாய்ந்ததில் 15 வயது சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில், மடுக்குளம் பகுதியில் உள்ள குளத்தின் அணைக்கட்டில் மண் ஏற்றியவாறு உழவியந்திரம் ஒன்று பயணித்துள்ளது.

இதன்போது திடீர் என கட்டுப்பாட்டை இழந்த உழவியந்திரம் முற்றாக குடைசாய்ந்து விபத்திற்குள்ளாகியது.

இதனால் உழவியந்திரத்தின் பின்பகுதியில் அமர்ந்திருந்த சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு பூவரசங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும் முன்னமே அவர் மரணித்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த 14 வயதான ச.சதுசன் என்ற





சிறுவன் மரணமடைந்ததுடன், மற்றொரு சிறுவன் காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கையிலிருந்துவெளியேறவுள்ள சுமார் 5000 வைத்தியர்கள் – வைத்தியர் வி.தர்ஷன்

சுமார் 5000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சியில் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வைத்தியர் விஜயரத்தினசிங்கம் தர்ஷன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இருக்கும் வைத்தியர்களில் 95 வீகிதத்துக்கு மேற்பட்டவர்கள் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். இலங்கை பொருத்தவரையில் வைத்தியத்துறை சம்பந்தப்பட்ட பெரும்பான்மையினை நாங்கள் பிரதிபலிக்கின்றோம், இவ்வாறான ஒரு தொழிற்சங்கமாக இருக்கின்ற படிவால் நாங்கள் சுகாதாரத்துறை சம்பந்தமான பிரச்சினைகளில் அக்கறை செலுத்துவதும் அதில் ஏற்படுகின்ற சாதக பாதக நிலமைகள் பற்றி ஆராய்வதிலும் அக்கறை செலுத்தி வருகின்றோம். அவ்வாறே இந்த மருந்து தட்டுப்பாடு சம்பந்தமாகவும், புத்திஜீவிகள் வெளியேற்றம் முக்கியமாக வைத்தியர்களுடைய வெளியேற்றம் தொடர்பாக கடந்த காலங்களில் நாங்கள் சுகாதாரத் துறைக்கும் அரசாங்கத்துக்கும் எங்களுடைய முன்மொழிவுகளை வழங்கி இருந்தோம்.

அது உத்தியோகபூர்வமான கூட்டங்களில் பரிசிலிக்கப்படுவதாக கூறப்பட்ட போதும் எந்தவிதமான முன்னேற்றமும் வெட்டப்படவில்லை, முதலாவதாக மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் தட்டுப்பாட்டினை உற்று நோக்குவமாக இருந்தால் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இது நிலவி வருகின்றது.

அதுமட்டுமில்லாமல் தற்போது மருந்தின் தரம் இன்மை தன்மையும் ஆங்காங்கே நிலவி வருகின்றது, அடுத்து புத்துஜீவிகள் இந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பிரதானமான நிலைமை நாட்டின் பொருளாதார நிலமையும், அதனால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவினமும், மற்றும் எதிர்கால சந்ததியினரது ஸ்த்திரத்தன்மை என்பதும் இதில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. கிட்டத்தட்ட சுகாதார அமைச்சர் தெரிவித்ததின்படி 850 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள் மேலும் ஐயாயிரம் வரையிலான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக முயற்சிகளில் இருக்கின்ற மையும் எங்களுக்கு தெரிய வந்திருக்கின்றது. இவ்வாறு வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்ற போது ஒரு ஆளணி பற்றாக்குறை ஏற்படப் போகிறது. இவ்வாறு ஆளணி பற்றாக்குறை ஏற்படுகின்ற போது




ஒரு நோயாளிக்கு ஒரு நிமிடத்திள்குள் மட்டுப்படுத்த வேண்டிய நேரிடும். இவ்வாறு மட்டுப்படுத்துவதினால் சேவையை நாடிவரும் நோயாளிகள் அனைவருக்கும் சேவையினை வழங்க முடியாத நிலையும் ஏற்படலாம் இதனால் நோயாளிகள் நாட்கணக்கில் காத்திருக்க வேண்டிய தேவையும் ஏற்படலாம். இவ்வாறு குறுகிய நேரத்துக்கு நோயாளிகளை பார்வையிடுவதால் தரமான சிகிச்சையினை வழங்க முடியாமல் போகலாம். இவ்வாறான பிரச்சனைகள் எங்களுடைய பிரதேசங்களில் வெகுவாக அதிகரிக்க கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் என்ற ரீதியில் இவற்றை நாங்கள் முதலே ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அதன் முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கின்றோம். இந்த நிலை நீடிக்காமல் அரசாங்கம் விரைந்து செயல்பட்டு இலங்கையிலிருந்து வைத்தியர்கள் வெளியேறுவதை தடுப்பதற்குரிய வழிகளை மேற்கொண்டு எங்களுடைய வாழ்க்கைச் செலவை கொண்டு செல்லக்கூடிய வேதனை ஏற்றத்தை வழங்குவதன் மூலம் புத்திஜீபிகள் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுப்பதுடன் மருந்து தட்டுப்பாடு நீக்குவதற்குரிய முன்மொழிவுகளின் ஊடாக மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து பாமர மக்களுக்கும் பயன் பெற்று வைத்தியர்களும் நாட்டில் நிலை கொண்டிருக்க வேண்டும் என்பது எங்களுடைய பிரதான நோக்கமாகும் என தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# மாதாவின் கண்ணில் இருந்தும், 10 வயதுச் சிறுமியின் கண்ணில் இருந்தும் இரத்தம் வடியும் அதிசயம்!





யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, வதிரி பகுதியில் மாதாவின் உருவச் சிலையிலிருந்து இரத்தம் வடியும் அற்புதத்தை பலரும் பார்வையிட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் வசிக்கும் ஸ்ரீகரன் சாந்தகுமாரி என்பவரது வீட்டில் இருக்கும் மாதாவின் உருவச் சிலையில் இருந்தே இவ்வாறு இரத்தம் வழிகின்றது. கடந்த 6ம் திகதி முதல் இன்றுவரை இரத்தம் இடையிடையே வழிந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுகின்றது.

கடந்த 26ம் திகதி பிரான்ஸில் இருந்து இவர்களின் மகள் ஜெயசித்ரா அவர்களினால் குறித்த மாதாவின் உருவச் சிலை கொண்டு வரப்பட்டது.

குறித்த வீட்டில் தரம் 5 ல் கல்வி கற்கும் 10 வயதுடைய ஆர்த்தி எனும் சிறுமிக்கு, மாதா கொண்டு வருவதற்கு முன்னர் கண்ணில் இருந்து இரத்தம் வடிந்துள்ளது.

இதுதொடர்பாக வைத்திய உதவிய நாடிய போதிலும் எந்த விதமான பிரச்சனைகளும் இல்லை என குறிப்பிட்டுள்ளாக தெரிவிக்கின்றனர்.

தற்போதும் சிறுமியின் கண்ணில் இடையிடையே இரத்தம் வழிந்து வருகின்றது. குறித்த அற்புதத்தை பலரும் பார்வையிட்டு வருகின்றனர்.

# இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சிறுமிக்கு நீதியான விசாரணை வேண்டும் – நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சிறுமி வைசாலியின் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற்று குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவம் மன வேதனையை தருகிறது.

நான் நீதிபதியாக செயற்பட்டவன் என்ற நீதியில் விசாரணை முடிவுறாமல் இவர்கள் தான் குற்றவாளி எனக் கூற முடியாது.

தாதியர்களின் தவறே சிறுமியின் கை துண்டிக்க பிரதான காரணம் என செய்திகள் வெளியாகிய நிலையில் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

சிறுமி தனது கல்விக்காலம் திருமண வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் அரசாங்கம் மற்ற இழப்பீட்டை பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்மாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெறும் போராட்டத்தில் பதற்றம்!




யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் கை ஒன்று அகற்றப்பட்ட சம்பவத்திற்கு நீதி வேண்டி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டமொன்று இடம்பெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஒன்று கூடியவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



சம்பந்தப்பட்ட தாதியை பணி நீக்கம் செய், பணிப்பாளரே விசாரணைகளை மூடி மறைக்காதே உள்ளிட்ட கோஷங்கள் இதன்போது எழுப்பபட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜரொன்றை கையளிப்பதற்கு பொதுமக்களிடமும் கையெழுத்து சேகரிப்பு இடம்பெற்றுவருகிறது.

குறித்த போராட்டத்தில் சிறுமியின் உறவினர்களுடன் அரசியல் தரப்பினர், சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும் இணைந்துகொண்டுள்ளனர்.

இந் நிலையில் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியை மறித்து போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து போராட்டக்காரர்களை அப்புறப்படுத்த முயற்சித்து வருகின்றனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இந்தியா செய்திகள்
India News

# உலகத் தமிழர் பேரமைப்பின் 10ஆம் மாநாடு செப்டம்பர் 23, 24 ஆகிய நாட்களில் தஞ்சையில் சிறப்பாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பெறுகின்றன

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1924ஆம் ஆண்டு சிந்து சமவெளிப் பகுதியில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் மூலம் இந்தியாவின் மிகத் தொன்மையான நாகரிகம் சிந்துவெளி நாகரிகமே என்பதை பிரித்தானிய இந்திய அரசின் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராக இருந்த ஜான் மார்ஷல் கண்டறிந்து வெளிப்படுத்தினார்.

அதே நூற்றாண்டில் 1905ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் அகழாய்வு நடத்திய ஆங்கிலேயரான அலெக்சாண்டர் ரியா இந்தியாவின் மிகப்பழமையான நாகரிகம் அது என்பதை கண்டறிந்தார்.

“சிந்துவெளி அகழ்வாராய்ச்சியின் தடயங்களுக்கும், ஆதிச்சநல்லூர் அகழாய்வுத் தடயங்களுக்கும் இடையே வியக்கத்தக்க ஒற்றுமைகள் உள்ளன” என அறிஞர் சுனிதி குமார் சட்டர்ஜி அறிவித்தார்.

21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வைகை ஆற்றின் கரையில் கீழடியில் இந்தியத் தொல்லியல் துறையின் அதிகாரியான அமர்நாத் இராமகிருட்டிணா நடத்திய அகழாய்வின் மூலம் “சங்க இலக்கியக் குறிப்புகளும், கீழடியில் கிடைத்த தடயங்களும் ஒத்திருக்கின்றன” என்பதையும் தமிழரின் நகர்ப்புற நாகரிகத்தின் முதல் தடயம் கீழடி என்பதையும் கண்டறிந்து அறிவித்தார்.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சிந்துவெளி நாகரிகத்தின் கண்டுபிடிப்பு உலகையே வியப்பில் ஆழ்த்தியதைப் போலவே இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வைகை நாகரிகத்தின் கண்டுபிடிப்பு உலகையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.


தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர், கொடுமணல், பொருந்தல், அரிக்கமேடு, பூம்புகார், முசிறி (கேரளம்) போன்ற பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலம் உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் தமிழர் நாகரிகமே என்பது நிலை நிறுத்தப்பட்டுவிட்டது. நமது தொன்மையின் சிறப்பையும் பெருமையையும் உலகமே வியந்து பாராட்டுகிறது.

இத்தகைய தொன்மைக்கும் பெருமைக்கும் உரிய தமிழர்கள் எத்தனை பேர் இந்த உண்மையை அறிந்திருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகும். எனவே, அனைத்துத் தமிழர்களும் நமது வரலாற்றுத் தொன்மையை அறிந்துகொண்டு பெருமித உணர்வு பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் உலகத் தமிழர் பேரமைப்பு தனது 10ஆம் ஆண்டு மாநாட்டினை “தமிழர் தொன்மை வரலாற்றுச் சிறப்பு மாநாடாக” நடத்தவிருக்கிறது. 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 23 சனி, 24 ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் தஞ்சையில் இம்மாநாட்டினை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

சிந்துவெளி நாகரிகம், தமிழ்நாட்டில் தொல்லாய்வு நடைபெற்ற இடங்கள் ஆகியவற்றில் கண்டறியப்பட்ட தொல் தமிழர் நாகரிகத் தடயங்களின் படங்கள், அவற்றைப் பற்றிய குறிப்புகள் மற்றும் மறைந்துபோன நெல் வகைகள் போன்றவை இடம்பெறும் தமிழர் தொல் வரலாற்றுக் கண்காட்சி அமைக்கப்படவிருக்கிறது. தமிழர் கண்களுக்கும், கருத்திற்கும் விருந்தளிக்கும் அரியதொரு கண்காட்சி ஆகும்.

இரு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் தமிழறிஞர்களும், தொல்லாய்வு அறிஞர்களும் பங்கேற்று தமிழர்களின் தொன்மை வரலாற்றுச் சிறப்பினை எடுத்துரைக்கவிருக்கிறார்கள்.

முதல் மாநாட்டிற்கு முனைவர் வீ. அரசு தலைமை தாங்குகிறார். முதுமுனைவர் ஆ. சிவசுப்ரமணியம் தொடக்கவுரை ஆற்றுகிறார். இரண்டாம் நாள் கருத்தரங்கிற்கு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் கோ. பாலசுப்ரமணியம் தலைமை தாங்குகிறார். வழக்கறிஞர் த. பானுமதி தொடக்கவுரை ஆற்றுகிறார். பல்வேறு கருத்தரங்குகளில் பேரா. த. செயராமன், முனைவர் இரா. காமராசு, முனைவர் ஆ. பத்மாவதி, முனைவர் பெ. இரவிச்சந்திரன், முனைவர் வீ. செல்வகுமார், முனைவர் கோ. விசய வேணுகோபால், முனைவர் சு. இராசவேலு, முனைவர் க.த. காந்திராசன், கணியன் பாலன், முனைவர் தியாக சத்தியமூர்த்தி, முனைவர் நா. மார்க்சிய காந்தி, முனைவர் அமர்நாத் இராமகிருட்டிணா ஆகியோர் பேருரையாற்றுகிறார்கள்.


உலகத் தமிழர் பேரமைப்பு
World Tamil Confederation
தலைவர்: பழ. நெடுமாறன்
02-08-2023
அன்புள்ள நண்பருக்கு,
அன்புள்ள
பழ. நெடுமாறன்
தலைவர்

மிக சீரிய வகையில் தமிழுக்கு அயராது தொண்டாற்றி வரும் 10 அறிஞர்களுக்கு “உலகப் பெருந்தமிழர் விருது” வழங்கப்பெறவிருக்கிறது. முதல் நாள் நடைபெறும் விருதளிப்பு விழாவிற்கு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும், இரண்டாம் நாள் நடைபெறும் விருதளிப்பு விழாவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் அவர்களும் தலைமை தாங்குகிறார்கள்.

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் விருதுகளை வழங்கி நிறைவுரையாற்றுகிறார்.

மாநாட்டில் பங்கேற்கும் தமிழறிஞர்கள், தொல்லாய்வு அறிஞர்கள் ஆகியோர் ஆற்றும் உரைகள் எழுத்தாக்கம் செய்யப்பெற்று கட்டுரைகளாக மாநாட்டு மலரில் இடம்பெறுகின்றன. மற்றுமுள்ள தமிழறிஞர்களின் கட்டுரைகளும், தமிழகத் தொல்லாய்வுத் தடயங்கள் குறித்த ஏராளமான வண்ணப்படங்களும் மாநாட்டு மலருக்கு மணம் சேர்க்கின்றன.

ஒவ்வொரு தமிழரும் தங்கள் வீடுகளில் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கருத்துக் கருவூலமாக விளங்கும் இம்மலர், மாநாட்டில் வெளியிடப்படுகிறது.

கடந்த 2016ஆம் ஆண்டில் மறைமலை அடிகளார் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு விழாவினை மாபெரும் மாநாடாக தஞ்சையில் நாம் நடத்தினோம். அதற்குப் பின்னர் தீ நுண்மி தொற்று நோய் பரவி நாடே முடங்கியது. அதன் காரணமாகவும் மற்றும் சில காரணமாகவும் உலகத் தமிழர் பேரமைப்பின் 10ஆவது மாநாட்டினை நடத்த இயலாத நிலைக்கு ஆளானோம்.

இக்குறையை போக்கும் வகையில் உலகத் தமிழர் பேரமைப்பின் 10ஆம் மாநாட்டினை தமிழர் தொன்மை வரலாற்றுச் சிறப்பு மாநாடாக 2023, செப்டம்பர் 23, 24 ஆகிய நாட்களில் தஞ்சையில் மிகச் சிறப்பாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நமது வரலாற்றின் தொன்மைக் குறித்து அறிஞர்கள் ஆற்றும் உரைகளை கேட்டுப் பயன்பெறவும் நமது நாகரிகத் தொன்மை குறித்துப் பெருமிதம் கொள்ளவும், தமிழர்கள் குறிப்பாக, மாணவர்களும், இளைஞர்களும் இம்மாநாட்டில் திரளாகக் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் அனைவரையும் அழைக்கிறேன்.

# இஸ்ரோ விஞ்ஞானி வளர்மதி மறைவு

இஸ்ரோ விஞ்ஞானி வளர்மதி மறைவெய்திய செய்தி வருத்தமளிக்கிறது என கனிமொழி கூறியுள்ளார்.

ஸ்ரீஹரிகோட்டாவில் ராக்கெட் ஏவுவதற்கான கவுண்ட்டவுனுக்கு குரல் கொடுத்து வந்தவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த இஸ்ரோ விஞ்ஞானி ந.வளர்மதி (50). இவர் மாரடைப்பு காரணமாக நேற்றிரவு காலமானார். 2012ல் விண்ணில் ஏவப்பட்ட ரிசாட் 1 திட்ட இயக்குநராகவும் பணியாற்றினார். கடைசியாக சந்திரயான் 3 கவுண்டவுனுக்கும் வளர்மதி குரல் கொடுத்துள்ளார். இவரது மறைவு விஞ்ஞானிகள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. திமுக எம்.பி. கனிமொழி பதிவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த இஸ்ரோ விஞ்ஞானி வளர்மதி மறைவெய்திய செய்தி வருத்தமளிக்கிறது. ரிசார்ட் 1 விண்கல திட்ட இயக்குநராக, சந்திரயான்-3 உட்படப் பல ஏவுதலுக்கு வர்ணனையாளராக, நாற்பது ஆண்டுகளாக இஸ்ரோவில் அர்ப்பணிப்போடு பணியாற்றியவர். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என பதிவிட்டுள்ளார்.



உலக செய்திகள்
World News

# சிங்கப்பூரின் 9 – ஆவது ஜனாதிபதியான தர்மன் சண்முகரத்தினம் என்னும் தமிழர் தெரிவாகியுள்ளதைப் பாராட்டும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்


உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
செப் 2, 2023

தமிழர்கள் அதிகமாக வாழும் இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் இன்றைய சூழலில் தமிழர்கள் முக்கியமாக அரசியல் பொறுப்பு ஏதும் வகிக்காத சூழலில், மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதானது என்பதைப் போல சின்னஞ்சிறு தீவு நாடாக இருந்தாலும் உலக அளவில் பென்னம்பெரிய மாண்புடன் திகழும் சிங்கப்பூரின் 9-ஆவது ஜனாதிபதியாக உயர்திரு தர்மன் சண்முகரத்தினம் என்னும் தமிழர் தெரிவாகியுள்ளதை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் வாழ்த்தி பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

# பிரான்ஸ இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் நிதியுதவியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மின் அதிர்வு சிகிச்சை உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது

ஒரு கோடி பெறுமதியான மின் அதிர்வு சிகிச்சை உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் DR. M.M. றெமான்ஸ் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் பேராசிரியர் DR. S. சிவயோகன் பிரான்ஸ் இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் இராசையா சிறீதரன் உறுப்பினர்கள் வைத்தியசாலையின் வைத்தியர்கள் அதிகாரிகள் பணியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.





01/ DR. M.M. றெமான்ஸ்
வைத்திய அத்தியட்சகர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை

02/ இராசையா சிறீதரன்
தலைவர், இலங்கை இந்திய வர்த்தக சங்கம்

03/ பேராசிரியர் DR.S. சிவயோகன்
உள நல வைத்திய நிபுணர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை

கனடிய செய்திகள் Canadian News

# "கனடாவில் பல தரப்பினரிமிருந்து நான் செவிமடுத்த கருத்துக்களை தாயகத்திற்கு காவிச் செல்கின்றேன்"

## நண்பர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் விடைபெற்றபோது பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவிப்பு

- ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்





“கனடாவிற்கு நான் இந்தத் தடவை கனடிய தமிழர் பேரவையினால் நடத்தப்பெற்ற “தெருவிழா“ விற்காகவே அழைக்கப்பட்டேன். ஆனால் நான் இங்கு தங்கியிருந்த ஒரு வார காலத்தில் கனடாவில் உள்ள பல தரப்பினரிமிருந்தும் அமைப்புக்களிடமிருந்தும் நான் செவிமடுத்த கருத்துக்களை தாயகத்திற்கு காவிச் செல்கின்றேன். எனவே இலங்கையிலும் எனக்கு பொறுப்புக்களும் பணிகளும் அதிகரித்து விட்டன”.

இவ்வாறு சனிக்கிழமை (02-09-2023) மதியம் கனடாவிலிருந்து தாயகம் நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கும் முன்னர் மதிய போசம் ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அவர்கள் கனடாவில் தான் சந்தித்த நண்பர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் விடைபெற்றபோது தெரிவித்தார்.

கனடிய தமிழர் பேரவை நடத்திய “தமிழர் திருவிழா 2023” கட்ந்த வாரம் சனி ஞாயிறு ஆகிய தினங்களில் வெற்றிகரமாக நடைபெற்றது என்பதும் அதில் இலட்சக்கணக்கான பார்வையாளர் கலந்து கொண்டார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தாயகப் பாடகர் சாந்தன் கோகுலன் அவர்களுக்கான வரவேற்பு உபசாரத்தை வழங்கிய கனடா ஸ்காபுறோ "பைரவி" நுண்கலைக் கூடத்தினர்



கனடிய தமிழர் பேரவையின் அழைப்பை ஏற்று அவர்கள் நடத்திய “தெருவிழா” கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவென கனடாவிற்கு வந்திருக்கும் தாயகப் பாடகர் சாந்தன் கோகுலன் அவர்களுக்கான வரவேற்பு உபசாரத்தை ஸ்காபுறோ “பைரவி” நுண்கலைக் கூடத்தினர் அவர்களது கலைக் கூடத்தின் ஞாயிற்றுக்கிழமை (03-09-2023) இரவு நடத்தினர்.

மேற்படி நிகழ்வுககு “பைரவி” நுண்கலைக் கூடத்தின் நிறுவனர் ஜெயச்சந்திரன் மாஸ்டர் தலைமை தாங்கினார். கனடா உதயன் லோகேந்திரலிங்கம் அவர்ளும் அங்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.













மேற்படி நிகழ்ச்சியானது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்த ஒன்றாக நடைபெற்றது. அதற்கு காரணம் வன்னி மண்ணில் மறைந்த பாடகர் சாந்தன் அவர்கள் எமது விடுதலைப்போராட்டம் சார்ந்த பல பாடல்களை உணர்வோடு பாடியவர் என்ற வகையில் அவருக்கு விடுதலைப்புலிகளின் தலைமை அவர் மீது வைத்திருந்த அளவற்ற மரியாதை மதிப்பு போன்றவற்றை அவரது புதல்வர் விபரமாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மறைந்த பாடகர் சாந்தன் அவர்கள் உடல் குன்றியிருந்த காலத்தில் அவருக்கு உடனடி சிகிச்சை வழங்க வேண்டி பல அமைப்புக்கள் தனி நபர்கள் ஆகியோரிடம் உதவிகளை வேண்டி விடுக்கப்பெற்ற வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பெற்றுவிட. அதனைத் தொடர்ந்து ஸ்காபுறோ “பைரவி” நுண்கலைக் கூடத்தினர் வேறு சில அன்பர்களோடு இணைந்து நிதி சேகரிப்பு நிகழ்ச்சியொன்றை நடத்தி 22,000 கனடிய டாலர்களை சேகரித்து அனுப்பியமை மற்றும் அவருக்கு கடைசி நேரத்தில் போதியளவு கிடைத்திருந்தாலும் அவை கால தாமதமாக பாடகர் சாந்தன் அவர்கள் குடும்பத்தினர் கைகளுக்கு போய்ச் சேர காப்பாற்ற முடியாமல் போனது போன்ற விடயங்கள் அங்கு பகிரப்பெற்றன.

அங்கு பாடகர் கோகுலன் தனது மிகவும் உருக்கமான உரையொன்றை ஆற்றினார். அந்த உரையானது அங்கு கூடியிருந்த அனைவரதும் இதயங்களை ஊசிகளினால் குத்தியதைப் போன்ற உணர்வே ஏற்பட்டது.

அந்த உரையில் மறைந்த சாந்தன் அவர்களுக்கு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வழங்கப்பெற்ற சிகிச்சையின் பின்னர் அவர் குடும்பத்திடமிருந்து அறிவிடப்பட்ட அதிகளவு கட்டணம் தொடர்பாகவும் கோகுலன் அவர்கள் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்தார்.

இவ்வாறான தாய் மண்ணுக்காக உணர்வைத்தூண்டும் பாடல்களை தனது உரத்த குரலால் பற்று வைத்தும் பாடியும அவர்கள் வன்னி மண்ணில் கழித்த நாட்கள் அங்கு நினைவு கூறப்பட்டன என்றால் அது மிகையாகாது.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் அங்கு மேலும் பலரும் உரையாற்றினார்கள்.

Ontario's Municipal Affairs and Housing Minister Steve Clark Resigns After Facing Pushback from Political Opponents and Residents

# கனடாவின் ஒன்றாறியோ மாநகர விவகாரங்சகள் மற்றும் வீட்டுவசதிகள் துறை அமைச்சர் ஸ்டீவ் கிளார்க், தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்



கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தின் மாநகர விவகாரங்சகள் மற்றும் வீட்டுவசதிகள் துறை அமைச்சர் ஸ்டீவ் கிளார்க், அரச காணிகள் மற்றும் கிரீன்பெல்ட் நில மாற்றத்தை அவரது துறை கையாண்டது குறித்து பல குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக எதிர்கட்சிகளின் விமர்சகர்கள் மற்றும் குடியிருப்பாளர்களிடமிருந்து பல வாரங்களாக எதிர்கொண்ட நிலையில் தான் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பானது ஒன்றாரியோ அரசாங்கத்திற்கும் அதன் முதல்வர் டக் போர்ட் அவர்களுக்கும் மிகுந்த சவால்களை ஏற்படுத்தியுள்ளது என்று அறியப்படுகின்றது.

ஒன்றாறியோவின் நீதித்துறை ஆணையர் அமைச்சரின் நடத்தையை விசாரித்து கிளார்க்கை கண்டிக்கும் வகையில் பரிந்துரைத்ததை அடுத்து அமைச்சர் தனது ராஜினாமா பற்றி அறிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர், ஒன்றாரியோ மாகாணத்தின் கணக்காய்வுதுறை நாயகம், வீட்டுவசதி மேம்பாட்டிற்காக எந்தெந்த நிலங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கும் தற்போதைய செயல்முறையானது, பில்லியன் கணக்கான டாலர்களை ஈட்டக்கூடிய வீடுகள் கட்டும் தொழில் ஈடுபட்டுள்ள ஒரு சிறிய குழுவால் மாகாணத்தின் வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து அது தொடர்பாக அறிவித்திருந்தார்.

இதேவேளை இன்று 4ம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்றாறியோ மாகாணத்தின் முதல்வர் டக் ∴போர்டுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அமைச்சர் கிளார்க், ஒன்றாறியோ மக்களுக்காக “அதிக வீடுகளைக் கட்டுவதற்கான ஆணையை நிறைவேற்ற முயற்சிப்பதாக” குறிப்பிட்டிருந்தார்.

“இந்தத் தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்க நான் எனது அமைச்சர் பதவியில் தொடர்ந்து இருக்க முடியும் என்றும் சரியான செயல்முறையை உருவாக்க முடியும் என்று எனது ஆரம்ப எண்ணம் இருந்தபோதிலும், எனது பதவி மூலம் செய்யப்பட வேண்டிய முக்கியமான வேலைகளில் இருந்து மேலும் கவனச்சிதறலை மட்டுமே ஏற்படுத்தும் என்பதை நான் உணர்கிறேன். என்ன நடந்தது என்பதற்கு நான் பொறுப்பேற்க வேண்டும்” என்று அமைச்சர் கிளார்க் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தின் மாநகர விவகாரங்சகள் மற்றும் வீட்டுவசதிகள் துறை அமைச்சர் ஸ்டீவ் கிளாரபதவியில் இருந்து தனது ராஜினாமாவை முதல்வர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எவ்வாறாயினும் லீட்ஸ்-கிரென்வில்லே - ஆயிரம் தீவுகள் மற்றும் ரைடோ ஏரிகளுக்கான தொகுதிக்கான மாகாண பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து எனது தொகுதிமக்களுக்கு தொடர்ந்து சேவை செய்வேன்.” என்றும் அறிவித்துள்ளார்.

# சனல் நாலு ஒளிபரப்பிய காணொளியின் விளைவுகள்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**ச**னல் நாலு தொலைக்காட்சி மீண்டும் ஒரு காணொளியை வெளியிட்டிருக்கிறது. அது இலங்கை அரச புலனாய்வுத் துறையின் தலைவருக்கும் ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக சந்தேகங்களை அதிகப்படுத்தியுள்ளது. மேலும் கிழக்கு மாகாணத்தில் ராஜபக்சக்களின் விசுவாசியாகக் காணப்படும் பிள்ளையானுக்கும் அதில் சம்பந்தம் இருப்பதாக அக்காணொளியில் கூறப்படுகிறது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னணியில் அரசியல் உள்நோக்கம் கொண்ட சக்திகள் இருப்பதாக கொழும்பில் உள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித் அடிக்கடி கூறி வருகிறார். குண்டு வெடிப்பு தொடர்பாக அனைத்துலக விசாரணை தேவை என்றும் அவர் ஏற்கனவே தெரிவித்துவிட்டார். இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் அனைத்துலக விசாரணை வேண்டும் என்று கேட்கிறார். அதாவது இச்சிறிய தீவில் தமிழர்களும் அனைத்துலக விசாரணையைக் கேட்கிறார்கள். சிங்களவர்களும் கேட்கிறார்கள். இந்நிலையில் சனல் நாலு வெளியிட்ட புதிய வீடியோ எவ்வாறான தாக்கங்களை இலங்கை அரசியலில் ஏற்படுத்தப் போகின்றது?

அந்த வீடியோ கூற வரும் விடயத்தை ஏற்கனவே கர்தினால் மல்கம் ரஞ்சித் மறைமுகமாகத் தெரிவித்துவிட்டார். தொடர்ச்சியாக அரசியல் கட்டுரைகளை வாசிப்பவர்களுக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் என்ன கூற வருகிறார் என்பது விளங்கும். அசாத் மௌலானா தெரிவிக்கும் தகவல்கள் ஏற்கனவே வெளித் தெரிய வந்தவைதான். எனவே இந்த விடயத்தில் சனல் நாலு புதிதாக எதையும் கூறவில்லை. ஆனால் ஓர் அனைத்துலக ஊடகத்தில் இந்த விடயம் பகிரங்கமாக வெளிவந்திருப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக ராஜபக்சங்களுக்கு எதிராக அமையும். ராஜபக்சக்கள் உள்நாட்டில் முஸ்லிம் மக்களின் ஆதரவுத் தளத்தை பெருமளவுக்கு இழக்க நேரிடும். அதே சமயம் அனைத்துலக அளவிலும் அவர்களுடைய பெயர் மேலும் கெடும்.

ஏற்கனவே அவர்களுடைய பெயர் கெட்டுத்தான் உள்ளது.கடந்த ஆண்டு நடந்த சிங்கள மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களின் போது ராஜபக்சக்கள் ஆட்சி அதிகாரங்களில் இருந்து துரத்தப்பட்டார்கள். அப்பொழுது உள்நாட்டில் அவர்களுடைய பெயர் மோசமாகக் கெட்டுவிட்டது. கனடா இரண்டு மூத்த ராஜபக்சக்களுக்கு எதிராக தடைகளை விதித்திருந்தது. ஏறக்குறைய அதே காலப்பகுதியில் அமெரிக்கா நிறைவேற்றிய ஒரு சட்டத்தின் பிரகாரம் போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கக்கூடிய நிலைமைகள் முன்னரை விட அதிகரித்துள்ளன. இதன் விளைவாக மூத்த ராஜபக்சக்களுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தொடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் மேலும் பிரகாசமாகியுள்ளன.

இவை தவிர ஐநாவின் தீர்மானம் ஒன்றின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ள சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் தொடர்ந்து இயங்குகின்றது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் ராஜபக்சக்களுக்கு எதிரானவர்களாகவே காணப்படும். எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால், ராஜபக்சக்கள் அனைத்துலக அளவில் ஏற்கனவே அப கீர்த்திக்கு உள்ளாகியிருக்கிறார்கள். குறிப்பாக அமெரிக்கக் கண்டத்தில் இரண்டு மூத்த ராஜபக்சங்களுக்கு நெருக்கடியும் ஆபத்தும் அதிகரித்து வருகின்றன.

ராஜபக்சகளின் பெயர் ஏற்கனவே வெளியுலகில் கெட்டுப் போய்விட்டது. உள்நாட்டிலும் கெட்டுப் போய்விட்டது. இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை சனல் நாலு வெளியிடப்பட்ட வீடியோ ராஜபக்சக்களின் பெயரை மேலும் கெடுக்கக் கூடியது. அதன் விளைவு எவ்வாறு அமையும்?

ராஜபக்சக்கள் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமது குடும்பத்தைச் சேர்ந்த யாரையாவது களமிறக்குவதற்கு மேலும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்படும். ஏற்கனவே அவர்கள் அதுகுறித்துச் சிந்தித்திருப்பதாகத் தெரிகிறது. பெரும்பாலும் ரணில் விக்கிரமசிங்கவைத்தான் அவர்கள் பின்னிருந்து ஆதரிக்கலாம் போல் தெரிகிறது. சனல் நாலு வீடியோவானது ராஜபக்சக்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து அவர்களை மேலும் பின்வாங்க வைக்கக் கூடியது.

ராஜபக்சக்களின் அடுத்த வாரிசாக நாமல் ராஜபக்ச வளர்க்கப்படுகிறார். அவர் பெரும்பாலும் எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடக் கூடும். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அநேகமாக ராஜபக்சக்கள் போட்டியிட மாட்டார்கள் என்பது ஏற்கனவே ஊகிக்கப்பட்ட ஒன்று. நாமல் ராஜபக்ஷ அதற்கு பின் வரக்கூடிய தேர்தல்களைத்தான் குறி வைப்பார். ஆதனால் நாமல் ராஜபக்சவைப் பலப்படுத்தும் வரையிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ராஜபக்ச குடும்பத்துக்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தியை நீக்கும் வரையிலும், அல்லது அந்த அபகீர்த்தி காலப்போக்கில் படிப்படியாக நீங்கும் வரையிலும், அல்லது சிங்கள மக்கள் கடந்த ஆண்டு நடந்தவற்றை மறக்கும் வரையிலும், இடைப்பட்ட காலத்துக்கு ராஜபக்சக்களின் பினாமியாக ரணிலை வைத்திருப்பதற்கு அவர்கள் ஏற்கனவே திட்டமிட்டு விட்டார்கள். ரணிலைத் தவிர வேறு பொருத்தமான ஆள் அவர்களுக்குக் கிடையாது. எனவே சனல் நாலு வீடியோவின் உடனடி விளைவு என்பது ராஜபக்சக்கள் ரணிலுக்கு இடைஞ்சலாக செயற்படுவதைத் தடுக்கும் என்பதுதான். அதாவது அதை அதன் தர்க்கபூர்வ விளைவைக் கருதிக் கூறின், அது ரணிலுக்குச் சாதகமாக அமையும். ரணில் ராஜபக்சக்களைக் குறித்த பயமின்றி அடுத்த தேர்தலில் போட்டியிடலாம்.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைக்கும் மேற்கத்திய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் ஒன்று அங்கு உண்டா என்ற சந்தேகம் உண்டு. ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை ரணிலை தொடர்ந்தும் பதவியில் வைத்திருக்கவே மேற்கு நாடுகள் விரும்புகின்றன. பன்னாட்டு நாணய நிதியமும் விரும்புகின்றது. எனவே ரணிலுக்கு ராஜபக்சக்கள் இடைஞ்சலாக எழுவதை சனல் நாலு வீடியோ ஓரளவுக்குத் தடுக்கும். மேலும் ராஜபக்ஷர்களுக்கு அனைத்துலக அளவில் உள்ள வரையறைகளையும் அது உணர்த்தும்.

ஆனால் அது நீண்ட கால நோக்கில் ராஜபக்சக்களின் எழுச்சியை நிரந்தரமாகத் தடுக்காது. ஏனெனில் ரணில் அடுத்த ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவாராக இருந்தால், அல்லது யார் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும், அதில் வென்ற கட்சியானது அடுத்த ஆண்டு பெரும்பாலும் தேர்தல்களை வைக்கும். அதன் மூலம் தனது வெற்றியைப் பலப்படுத்த எத்தனிக்கும். ஆயின், ராஜபக்சக்களின் பதிலியாக போட்டியிட்டு ரணில் வென்றால் அது ராஜபக்சக்களின் வெற்றியுந்தானே?

சனல் நாலு வீடியோவானது முஸ்லிம்களை ராஜபக்சங்களுக்கு எதிராகத் திருப்பக்கூடும். ஆனால் அது மேற்கு நாடுகள் மற்றும் மேற்கில் பலமாக காணப்படும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் போன்றவற்றின் நாட்டுக்கு எதிரான சதி வேலையாக, அல்லது யுத்த வெற்றிக்கு எதிரான ஒரு நகர்வாகத்தான் சிங்கள மக்கள் மத்தியில் காட்டப்படும். எனவே அது அதன் தக்கபூர்வ விளைவாக உள்நாட்டில் ராஜபக்சகளின் மீது அனுதாபத்தை ஏற்படுத்தவும் கூடும். அந்த அனுதாபம் அடுத்தடுத்த ஆண்டு வரக்கூடிய தேர்தல்களில் எதிரொலிக்கலாம்.

எனவே இப்போதுள்ள நிலைமைகளின்படி சனல் நாலு வீடியோவின் விளைவு என்பது உலக அளவில் ராஜபக்சக்களைப் பலவீனப்படுத்தும். அதன் விளைவாக ரணில் விக்கிரமசிங்க தன்னைத் தற்காத்துக் கொள்ளத் தேவையான வாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும். அதாவது அனைத்துலக அளவில் ராஜபக்சக்கள் மேலும் பலவீனமடைவார்கள். ஆனால் அவர்கள் ரணிலின் பின் பதுங்கிக் கொண்டு தம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும் கடந்த ஆண்டு அதுதான் நடந்தது. கடந்த ஆண்டு இனவாதம் ஒப்பீட்டளவில் பதுங்கிய ஓராண்டு எனலாம். ஆனால் இந்த ஆண்டு ஒப்பீட்டளவில் அவர்கள் தற்காப்பு நிலைக்கு வந்து விட்டார்கள். ரணிலின் மறைவில் தம்மைப் பலப்படுத்திக் கொண்ட பின் ராஜபக்சக்கள் மீண்டும் மேலெழ முடியும். அவர்கள் அவ்வாறு மேலும் முன்னேறுவதைத் தடுப்பது சனல் நாலு வீடியோவின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கலாம்.

அதாவது ராஜபக்சக்களுக்குப் பாதகமாக இருப்பது ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக இருக்கின்றது. ஆனால் ராஜபக்சக்களின் பினாமியாகத்தான் அவர் அடுத்த ஆண்டு தேர்தலில் நிற்கக் கூடும். எப்படியிருக்கிறது இலங்கையின் அரசியல் சமன்பாடு? அதனால்தான் மகிந்த இலங்கைத் தீவை ஆசியாவின் அதிசயம் என்று அழைக்க முற்பட்டவரா?

## வீணாவின் கவிக்கணை



அடுத்தவரை அழவைத்து
ரசிப்பவன், எதைப்பற்றியும்
யோசிக்க போவதில்லை,
தான் நினைத்தது
சரி என்று எண்ணியும்,
தான் பேசுவது தரமான
பேச்சென்றும் என்னுபவன்,
அப்படி கீழ்தரமாக
பேசுபவர் என்று தெறிந்தும்,
அவர் சொல் நினைத்து
கவலைகொண்டு,
தன்னைத்தானே
தாழ்த்திக்கொள்வது
முட்டாள்தனம்,
அதைவிடுத்து உன்
செயலை திறன்பட
செய்வது சிறப்பு!!!!!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கு தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதன் அங்குரார்ப்பண நிகழ்வு

**பு. கஜிந்தன்**

வடக்கு தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதன் அங்குரார்ப்பண நிகழ்வும், சர்வதேச தென்னை விழாவும், தென்னை வளர்ப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மாதிரி தென்னை தோட்டம் பகுதியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் ராமேஸ் பத்திரன, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லொஹான் ரத்வத்த, நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், தெங்கு அபிவிருத்தி சபை அதிகாரிகள், தென்னை உற்ப்பத்தியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







இதன்போது, தென்னை செய்கையாளர்களுக்கு ஒரு ஏக்கர் தென்னை செய்கைக்கான தென்னங்கன்றுகளும், உள்ளீடுகளும் வழங்கப்பட்டது.

இதன் பொது அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவிக்கையில், இன்று இரண்டு வருடங்களில் 3.5 மில்லியன் தென்னைகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தரர்.

இதன் மூலம் வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப்படும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்னை செய்கையில் சிறப்பாக மேற்கொண்ட செய்கையாளர்களிற்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் சிறந்த தென்னைச் செய்கையாளர்களுக்கு ரூபா இரண்டு லச்சம் காசோலைகளும் வழங்கப்படது.

தொடர்ந்து இன்றைய நாளின் நினைவாக அமச்சரின் கரங்களால் தென்ங்கன்றும் நாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சனிக்கிழமை (02) யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாம்





மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சனிக்கிழமை (02) யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இதில் பெருமளவானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினார்கள்.

பிரகாஸினுடைய நண்பர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்படதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலை கல்வியை இடைநிறுத்திக்கொண்டார்.

அந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடக துறையில் தனக்கொன்று ஒரு இடத்தினை தக்க வைத்திருந்தவர்.

சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார். அந்நிலையில் கடந்த 2021 செப்டம்பர் 2ம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்.

# படகு மூலம் இந்தியா சென்று தமிழ்நாட்டு முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடவுள்ள யாழ்ப்பாண மீனவர்கள்!



இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப் போவதாக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்தனர்.

இந்தியாவின் தமிழகத்துக்கு, 14 பேர் கொண்ட வடபகுதி மீனவர்கள் கடல் வழியாக படகு மூலம் சென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பாஜக தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரை சந்தித்து பேச தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ், கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றை கையளித்தோம்.

குறித்த மகஜர் கையளித்து 14 நாட்களுக்குள் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் காத்திரமான நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்த நிலையிலேயே குறித்த முடிவை எட்டியதாக தெரிவித்தார்.

14 நாட்களுக்குள் தீர்வு காணப்படாவிடில் அடுத்து வரும் நாட்களில் குறித்த பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# மருத்துவ தவறால் இடது கையை இழந்த சிறுமி – மூவரடங்கிய விசாரணை குழு நியமிப்பு



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட எட்டு வயது சிறுமி ஒருவருக்கு ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்க வேண்டிய துப்பாக்கிய சூழல் ஏற்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், காய்ச்சல் காரணமாக குறித்த சிறுமி அனுமதிக்கப்பட்ட நிலையில் நோய் எதிர்ப்புக்காக ஊசி மூலம் மருந்து ஏற்றப்பட்டது.

ஊசி ஏற்றப்பட்ட மறுநாள் இரவு சிறுமி வலியினால் அவதிப்பட்ட நிலையில் குறித்த விடுதியில் கடமையில் இருந்த தாதியர்களிடம் சிறுமியின் நோய்நிலை தொடர்பில் தாயார் கூறிய போது ஊசி ஏற்றப்பட்டால் நோய் இருக்கும் என விடுதியின் தாதியர்கள் பொறுப்பற்ற விதத்தில் பதில் அளித்ததாக பெற்றோர் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.




இந்நிலையில் குறித்த சிறுமியின் கை நரம்பு பாதிக்கப்பட்டமை உணர்ந்த வைத்தியர்கள் அதனை அகற்ற வேண்டும் எனத் தெரிவித்த நிலையில் சனிக்கிழமை காலை சத்திர சிகிச்சை மூலம் குறித்த சிறுமியின் மணிக்கட்டுக்குட்பட்ட பகுதி அகற்றப்பட்டது.

சிறுமி அனுமதிக்கப்பட்ட விடுதியின் பொறுப்பு வைத்தியர் குறித்த தினத்தில் கடமையில் இருந்தாரா என்பது தொடர்பில் சந்தேகங்கள் எழும் நிலையில் விடுதியில் இருந்த தாதியர்களின் அலட்சியப் போக்கும் சிறுமியின் கை அகற்றப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளது என்ற குற்றச்சாட்டு வலுவாக முன்வைக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியை தொடர்பு கொண்டு கேட்டபோது, இடம்பெற்ற சம்பவம் மனவேதனையை உண்டு பண்ணும் ஒரு சம்பவமாக பார்க்கிறேன்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய மூவர் அடங்கிய விசாரணை குழுவை நியமித்த நிலையில் மத்திய சுகாதார அமைச்சுக்கும் குறித்த விடயம் தொடர்பாக அறிவித்துள்ளேன்.

விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பாரபட்சமின்றி எடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொக்குவில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஏற்பாடு செய்த ஊடகங்கவியலாளர் சந்திப்பு

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணம் கொக்குவில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் ஊடகங்கவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் போது இந்திய பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டமை குறித்தும் மற்றும் சீனாவின் ஆக்கிரமிப்பு மற்றும் சிறிலங்காவில் முன்னெடுக்கப்படும் இனவாத பிரச்சாரங்கள் மற்றும் இனவாத நடவடிக்கைகள் என்பன தொடர்பிலும் கருத்து வெளியிட்டார்.

# கனடா க.தில்லைநாதன் அவர்களது நிதி அனுசரணையில், சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையால் பல்வேறு உதவித் திட்டங்கள்!



03-09-2023 அன்று கனடாவில் வசிக்கும் க. தில்லைநாதன் அவர்களது





நிதி அனுசரணையில், சித்தன்கேணி ஆன்மீக அறக்கட்டளை ஊடாக உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

60 பல்வேறு வட்டுக்கோட்டையில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் 60 பேருக்கு இவ்வாறு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் விசேட தேவையுடைய 3 மாணவருக்கு தலா 5000/ மாதாந்த உதவி தொகை கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

மேலும், பொன்னாலை கிருஷ்ணன் கோயிலில் வைத்து, 12 விசேட தேவை உடைய குடும்பங்களுக்கு 3000 ரூபா பெறுமதியான பொருட்களும், 2000 ரூபா பணமும் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை கனடா வாழ் தர்மசிறிராஜன் சுகந்தி அவர்கள் வழங்கினார்.

# மன்னார் தோட்டவெளி புனித வேத சாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் உள்ள இரு உண்டியல்கள் உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபாய் பணம் திருட்டு



- மன்னார் நிருபர் (04-09-2023)

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் எருக்கலம்பிட்டி போலீஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டவெளி புனித வேத சாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் உள்ள இரு உண்டியல்கள் உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபாய் பணம் திருடப் பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை 3ம் திகதி இரவு இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



குறித்த ஆலயம் 1544 ஆண்டு வரலாற்றுச் சிறப்பை கொண்ட ஆலயமாகும். குறித்த காலம் தொட்டு இன்று வரை தோட்டவெளி வேத சாட்சிகளின் இராக்கினி ஆலயம் சிறிய ஒரு ஆலயமாகவே காண பாட்டு வருகிறது.

குறித்த ஆலயத்திற்கு நாடளாவிய ரீதியில் யாத்திரிகர்கள் பல்லாயிரக்கணக்கானோர் வந்து போவதையும் அவர்கள் ஆலய வளாக பிரதான பகுதியில் உள்ள மணல் மற்றும் எடுக்கப்படும் மனித எலும்புத் துண்டுகளையும் எடுத்து சென்று தமது வேண்டுதல்களை நிறைவேற்றும் புதுமை மிகு ஆலயமாக திகழ்கிறது.

இவ்வாறான சிறப்பை கொண்ட குறித்த ஆலயத்தின் பிரதான உண்டியல்கள் 03-09-2023 இரவு இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.

குறித்த உண்டியலில் உள்ள பணம் ஆலய தேவைக்காக கடந்த இரண்டு வருடங்களாக எடுக்காமல் விட்டு வைத்திருந்த நிலையில் குறித்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இரண்டு உண்டியல்களுக்குள்ளும் பல லட்சம் ரூபாய் பணம் இருக்கலாம் என குறித்த ஆலய காப்பாளர் மற்றும் கிராமத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டு எருக்கலம்பிட்டி போலீசார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

திருட்டு சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கு கிழக்கில் சட்டவிரோத விகாரைகளை அமைக்கலாம் என எந்த சட்டத்தில் உள்ளது? — சபா குகதாஸ்



தொல்லியல் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அவர்களது கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் அவர்கள் ஒரு ஊடக அறிக்கை ஒன்றை 03-09-2023 அன்று வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கில் விகாரைகள் அமைக்கக் கூடாது என எந்த சட்டத்தில் இருக்கிறது? என்ற கேள்வியை தொல்லியல் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஊடகங்களில் முன் வைத்துள்ளார் அத்துடன் இலங்கை முழுவதும் இந்து ஆலயங்கள் இருக்குமாயின் ஏன் வடக்கு கிழக்கில் விகாரைகள் அமைக்க முடியாது என்ற கேள்வியையும் கேட்டுள்ளார்.

பௌத்த விகாரை தேவநம்பியதீசனால் இலங்கையில் அமைக்கப்படுவதற்கு முன்னர் இலங்கையின் ஐந்து திசைகளிலும் பஞ்ச ஈச்சரங்கள் அமைந்திருந்ததுடன், அனுராதபுரம் பொலநறுவை கதிர்காமம் போன்ற அனைத்து இடங்களிலும் சைவ ஆலயங்கள் அமைந்திருந்தன.

அத்துடன் இலங்கையின் சகல பாகத்திலும் அமைந்துள்ள இந்து ஆலயங்கள் சட்டரீதியாகவே அமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் சட்டத்துக்கு முரணாகவோ அல்லது நீதிமன்ற கட்டளைகளை அவமதித்தோ கட்டப்படவில்லை என்பதை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிற்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

வடக்கு கிழக்கில் சட்டவிரோத விகாரைகள் அமைப்பதை நிறுத்துமாறும், தொல்லியல் என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக அடையாளங்களை சிங்கள பௌத்த அடையாளங்களாக மாற்றுவதை நிறுத்துமாறும் தமிழ் அரசியல்வாதிகள் மாத்திரமல்ல ஒவ்வொரு பிரதேச மக்களும் எதிர்க்கின்றனர். அத்துடன் அதனை ஒரு அநீதியாக பார்க்கின்றனர் என்பதை அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளுக்கும் ஆன தொல்லியல் திணைக்களத்தை இனவாத ரீதியாக ஒருதலைப் பட்சமாக வழி நடாத்துவதை ஜனநாயகம் என்ற பெயரில் நடைபெறும் அராஜயகமாகத் தான் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பார்க்கின்றனர்.

சட்டம் பற்றி பேசும் அமைச்சரே குருந்தூரில் நடந்தது சட்டமா? இந்த நாட்டின் நீதிமன்றம் சட்டவிரோத கட்டடம் என கட்டளை வழங்கிய பின்னரும் அதனை கையில் எடுத்து உங்கள் அமைச்சு கட்டி முடித்து என்ன? சட்டரீதியான செயற்பாடா? சட்டத்தை பாதுகாக்க வேண்டிய உங்கள் அமைச்சும் திணைக்களமும் நீதிமன்ற கட்டளையை அவமதித்தமை தொடர்பில் நீங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும் - என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பௌத்த விகாரை நிர்மாணிப்பது தொடர்பான பிக்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தீர்மானத்தை மீண்டும் ஏற்க மறுத்துள்ளார்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பௌத்த விகாரை நிர்மாணிப்பது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்க மறுத்துள்ள நிலையில், நேற்று கூட்டமொன்றில் நுழைந்த பிக்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மறுப்பு தெரிவித்துள்ளார்.

கிழக்கில் எந்தவொரு சட்ட விரோதமான தடைகளையும் ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை எனவும், உரிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் எனவும் தொண்டமான் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட ஆலோசனைக் குழு கூட்டத்தை முற்றுகையிட்ட பிக்குகள் குழுவிடம், அவர்கள் மோசமான முன்னுதாரணத்தை காட்டுவதாகவும் நேரடியாகக் கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பௌத்த பிக்குகளிடம் ஆளுநர் கூறுகையில், ஆர்ப்பாட்டம் மற்றும் கூட்டத்தை முற்றுகையிட்டதன் மூலம் அவர்கள் நாட்டின்



பிற பகுதிகளிலும் இதைச் செய்ய பிற மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு செய்தி அனுப்புகிறார்கள் என்று தெரிவித்த போது பிக்குகள் தங்கள் கோரிக்கைகளுக்கு அடிபணிய மறுத்தால் ஆளுநரின் கழுத்தை அமுக்கி விடுவதாகவும் மிரட்டியுள்ளனர்.




எவ்வாறாயினும், பௌத்த விகாரையை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் பெறப்படாத நிலையில், தனது நிலைப்பாட்டில் இருந்து விலகப் போவதில்லை என ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். இலுப்பைக்குளம் பகுதியில் உள்ள தமிழ் கிராமம் ஒன்றில் பௌத்த விகாரை நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துமாறு தொண்டமான் அண்மையில் உத்தரவிட்டிருந்தார்.

தொண்டமான் தலைமையில் திருகோணமலை மாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தை முற்றுகையிடுவதற்கு முன்னர் ஆளுநரின் தீர்மானத்திற்கு எதிராக திருகோணமலையில் பிக்குகள் தலைமையில் வீதி மறியல் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி பௌத்த பிக்குகள் சிரேஸ்ட காவல்துறை அதிகாரியின் சீருடைக் காலரைப் பிடித்துக்கொண்டு வாகன ஓட்டிகளை வார்த்தைகளால் திட்டியதையும் காணமுடிந்தது என்றும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்

பின்னர் பிக்குகள் மற்றும் அதிகாரிகளுடன் ஆளுநர் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியதுடன், இவ்விடயம் தொடர்பாக தனது நிலைப்பாட்டை முழுயாக விளக்கினார் என்றும் அறியப்படுகின்றது.

# சனல் 4 அலைவரிசையின் உண்மைகள் உயிர் பெறுமா?



**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

• "லசந்த குறித்து கோதாபய மௌனம்.

சனல் 4 மீண்டும் ஒரு அதிர்வலையை உருவாக்கியுள்ளது.

உறுதிப்படுத்தப்படாத நிலையில் நம்பகத் தன்மையுடன் கூடியவகையில் உலாவந்த கதைகள் தற்போது சனல் 4 அலைவரிசையால் உயிர்ப்புப் பெற்றுள்ளன. அந்தவகையில் சனல் 4 அலைவரிசையின் அண்மை செய்தி இலங்கை அரசியலிலும் பொதுவெளியிலும் சர்வதேச அரங்கிலும் பேசு பொருளாகியுள்ளது.

• கத்தோலிக்க சமூகம்.

1919 ஈஸ்டர் தாக்குதலகள்குறித்த சனல் 4 அலைவரிசையின் செய்திப் பெட்டகம் கத்தோலிக்க சமூகத்தினதும் மற்றும் பாதிக்கப்பட்டநிலையில் நீதி கோரி நிற்கும் உறவுகளினதும் குரலை உரத்து ஓங்கி ஒலிக்க வழிவகுத்துள்ளது. தமக்கான நீதி செத்துவிடவில்லை என்பதை கத்தோலிக்க உலகத்திற்கும் நீதி கோரி நிற்போருக்கும் தமது பயணத்தை மேலும் தொடர்வதற்கான சக்தியையும் தெம்பையும் கொடுத்துள்ளது. குறிப்பாக கத்தோலிக்க சமூகத்துக்கான நீதி நோக்கிய பயணத்தில் தலைமையேற்று அந்த சமூகத்தினரை வழி நடத்தி வருகின்ற கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்களுக்கு நீதி கோரிய பயணத்தை அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்ல அல்லது முன் நகர்த்த சனல் 4 அலைவரிசையின் செய்திப் பெட்டகம் உறுதுணையாக அமைந்துள்ளது.

அதேவேளையில் ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தை அடுத்து ஈஸ்டர் தாக்குதல் அரசியல் நலன்களை அடைந்து கொள்ள அரங்கேற்றப்பட்ட அரசியல் சதி நாடகம் என கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்களும் கத்தோலிக்க சமூகமும் கொண்டிருந்த எண்ணப்பாட்டை உறுதிப்படுத்துவதாகவும் சனல் 4 செய்திப் பெட்டகம் அமைந்துள்ளது.

• முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மறுப்பு.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சனல் 4 இன் சமீபத்திய ஆவணப்படத்தின் உள்ளடக்கங்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

மேலும் இந்த ஆவணப்படம் 2005 ஆம் ஆண்டு முதல் ராஜபக்சவின் பாரம்பரியத்தை கருமையாக்கும் நோக்கில் பெரும்பாலும் ராஜபக்சவுக்கு எதிரான போராட்டம் எனவும் தெரிவித்துள்ளார்.

• பொய்களால் நிரப்பப்பட்ட படம்.

முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில், இதே சனல் ஒளிபரப்பிய முந்தைய படங்களைப் போலவே இந்தப் படமும் பொய்களால் நிரப்பப்பட்டுள்ளது என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

• லசந்த குறித்து அறிக்கை பேசவில்லை.

ஆனால் இந்த அறிக்கையில் சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப் பெட்டகத்தில் இடம்பெற்றுள்ள சன்டே லீடர் ஆசிரியர் லசந்த கொலைகுறித்த பதிவுகளுக்கு பதில் அளிக்கப்படவில்லை. ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கத்தோலிக்க உலகத்திற்கு தான் மேற்கொண்ட பணிகள்குறித்து விலாவாரியாக முன்னாள் ஜனாதிபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

• வழமைபோல் பேச்சுப் போர்.

நாடாளுமன்றிலும் வெளியிலும் வழமைபோல் சனல்4 அலைவரிசை துகில் உரியப்பட்டு நிற்கின்றது. முள்ளிவாய்க்கால் செய்திப் பெட்டகத்தைப்போன்று ஈஸ்டர் குண்டு வெடிப்பு பெட்டகமும் காரசாரமான விவாதத்திற்குள் சிக்குண்டுள்ளது.

• சர்வதேச விசாரணை கோரும் தென்னிலங்கை.

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் குறித்த சனல் 4 அலைவரிசையின் ஆவணப் பெட்டகத்தை மறுதளிக்கும் தென்னிலங்கை அரசியல் களம் தமிழர்கள் கோருகின்ற சர்வதேச நீதி விசாரணையையும் மறுதளித்து நிற்கின்றனர்.

ஆனால் அதே அணியில் உள்ள ஒரு சாரார் ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பான தற்போதைய சனல் 4 அலைவரிசையின் ஆவணப் பெட்டகத்தில் அடங்கியுள்ள தகவல்களின் அடிப்படையில் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றனர்.

• பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சனல் 4 குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமாகும். அதேவேளை தெரிவுக் குழுக்கள் எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றில் தெரிவித்தள்ளார்.

"சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களில் சுரேஷ் சாலி ஈடுபட்டுள்ளார் என நான் நம்புகிறேன். அவர் ராஜபக்ஷக்களின் கழிவறைகளை கழுவியவர். 2019 ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதல்களிலும் ஈடுபட்டார்" எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

• எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

இதே நிலைப்பாட்டினையே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

• சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.

2009 ஆம் ஆண்டு எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். ஆடைகள் களையப்பட்டு இளைஞர்கள் நீர்த் தடாகத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் இசைப்பிரியாவும் அமர்ந்திருந்தார். இதனை சனல் 4 அலைவரிசை ஒளிபரப்பு செய்திருந்தது. இதுகுறித்து விசாரணை நடத்துவீர்களா என்று நாடாளுமன்றில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

• எதிர்க் கட்சித் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்குறித்து உள்ளக விசாரணையிலோ அல்லது தெரிவிக்குழுவிலோ தமக்கு நம்பிக்கை இல்லை. இவர்களால் உண்மைகளைக் கண்டறிய முடியாது. எனவே சர்வதேச விசாரணையே வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் கோரிக்கைவிடுத்துள்ளார். முள்ளிவாய்க்கால் மற்றும் குருந்தூர் விவகாரங்களில் எதிர்க் கட்சித் தலைவரின் நிலைப்பாடு என்ன என்பதை எதிர்க் கட்சித் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் சார்ள்ஸ் நிர்மலனாதன் எம். பி கோரிக்கைவிடுத்தார்.

• பிளவுண்டுள்ள தென்னிலங்கை.

நாடாளுமன்றில் ஆளும் எதிர்க்கட்சி என ஈஸ்டர் குண்டு வெடிப்பு விவகாரத்தில் பிளவுண்டு இரு அணிகளாக நிற்பது போன்று பொதுவெளியிலும் குண்டு வெடிப்புக்கு நீதி கோரி ஒருபகுதியினரும் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக அதாவது சனல் 4 அலைவரிசைக்கு எதிராக மற்றொரு பகுதியினரும் களத்தில் இறங்கியுள்ளனர்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைப்பு சனல் 4 அலைவரிசைக்கு எதிராக பிரித்தாணிய தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

• தமிழ் முஸ்லிம் பொது மகன்களின் பார்வையில்.

சனல் 4 அலைவரிசையின் ஈஸ்டர் குண்டு வெடிப்பு பெட்டகம் குறித்து அமைதியாக அலசிக் கொண்டிருந்த தமிழ் முஸ்லிம் பொது மகன்களின் கருத்துக்கள் இவ்வாறு இருந்தன.

•தமிழ் மகன்

சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்பான ஈஸ்டர் குண்டு வெடிப்பு பெட்டகம் பொய்மையின் விம்பம் என்று கூறி கிடப்பில் போட்டுவிடுவர். முள்ளிவாய்க்கால் கொலைக் களத்தையே இன்றுவரை மறுதளித்து வருபவர்கள் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் ஆவணப் பெட்டகத்தை ஏற்று சர்வதேச விசாரணைக்குப் போகும் நிலையில் தென்னிலங்கையின் மனநிலை இல்லை. போரினை வெற்றி கொண்டவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த தென்னிலங்கை முன் வராது என்பதே தமிழ் மகனின் உள்ளக் குமுறலாக இருந்தது.

• முஸ்லிம் பொது மகன்.

"முஸ்லிம் சமூகத்தையே பலிக்கடாவாக்கிவிட்டார்களே. சனல் 4 அலைவரிசை உண்மையைப்போட்டு உடைத்துள்ளது. தென்னிலங்கை இப்பொழுதாவது கண் திறக்குமா?"

• தமிழ் பொது மகன்.

"எங்கே கண் திறக்கும். சனல் 4 அலைவரிசைக்கு எதிராக வீதியில் இறங்கிவிட்டார்கள். இனி புலம்பெயர் தமிழர்கள் சனல் 4 அலைவரிசைக்குப் பணம் கொடுத்து ராஜபக்ஷக்களுக்கும் நாட்டுக்கும் எதிராக சதி செய்கின்றார்கள் என்று குற்றம்சாட்டுவார்கள். கடைசியில் ஏதும் நடக்க வாய்ப்பிருக்காது."

• முஸ்லிம் பொது மகன்.

"ஆப்படி என்றால் எல்லோரும் சேர்ந்து படம் காட்டுகின்றார்களா?" என்று வினவினார்.

• தமிழ் பொது மகன்.

"அப்படித்தான் நடக்கின்றது". "நடக்கப் போகின்றது".

நாட்டு நடப்பையும் இன்றைய யதார்த்தத்தையும் தமிழ் மற்றும் முஸ்லிம் பொது மக்கள் நன்றாகவே கணித்து வைத்துள்ளனர் என்பதையே இந்த உரையாடல்கள் உணர்த்துகின்றன.

மொத்தத்தில் மீண்டும் ஒரு உண்மை அரசியல் நலன்களுக்காக சாகடிக்கப்பட் போகின்றது.

Email : vathevaraj@gmail.com
9th September 2023

# கற்றுக்கொள்

## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

தூக்கணாங் குருவியின் தொழில்திறன் கற்றுக்கொள்
காக்கையின் ஒற்றுமை கண்டு தெளிந்திடு
ஓடும் மான்போல் ஓடத் தெரிந்துகொள்
பாடும் குயில்போல் பாடப் பழகிக்கொள்
பல்லி போலப் பதுங்கப் பாரத்திடு
வல்லியம் போலொரு வலிமையை வளர்த்திடு
மீன்களைப் பார்த்து நீந்த முயற்சிசெய்
தேனவண்டின் தளர்விலா உழைப்பை அறிந்துகொள்
வலைபின்னும் வித்தையைச் சிலந்தியிடம்
கேட்டுக்கொள்
சிலைபோல் புற்றமைக்க சிதலையை உற்றுப்பார்
நன்றியை அறிய நாயுடன் பழகு
பன்றியுடன் சேர்ந்தால் பாழாய்ப் போவாய்
பறவை பறப்பதை பார்த்து நீயும்
பறந்து திரிந்து பணத்தைத் தேடடு
எறும்பு போகும் ஒழுங்கை எண்ணிப்பார்
கறுத்தப் பசுவின் காருணியக் குணம்பார்
அன்னம் அசைந்து நடக்கும் அழகைப்பார்
சின்ன மயிலின் சிறந்த நடனம்பார்
ஆறறிவு இல்லா விலங்கின் அறிவைப்பார்
தேறவேண்டுமா? வாழ்வில் தெளிவாய்க் கற்போமே!
வல்லியம் – – – புலி சிதலை – – – கறையான்

---

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சி – முகமாலையில் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நபர் உயிரிழப்பு!

பு. கஜிந்தன்

கடந்த ஆவணி மாதம் 31ஆம் திகதி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஆணொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த யதீஸ்குமார் (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து இரு சந்தேகபர்கள் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் முகமாலை பகுதியையும் மற்றையவர் யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இது ஒரு கொலை என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகபர்களை கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை புரட்டாதி மாதம் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# முரசமோட்டை பகுதியில்வேகக்கட்டுப்பாட்டை இழந்து உழவு இயந்திரம் விபத்து – சாரதி படுகாயம்!



கிளநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முரசமோட்டை பகுதியில் 03.09.2023 அன்று இரவு ஏழு முப்பது மணி அளவில் கிளிநொச்சி பகுதியில் இருந்து முரசுமோட்டை நோக்கி பயணித்த உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

அவர் தனது வீட்டுக்கு நோக்கி உழவு இயந்திரத்தில் பயணித்த பொழுது வேகக்கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் அருகில் இருந்த கால்வாயில் பாய்ந்ததில் விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியா மாவட்டத்தில் க.பொ.த உயர் தரப் பரீட்சைப் பெறுகள். கலைப் பிரிவில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மாணவி முதலிடம்

வவுனியா மாவட்டத்தில் கலைப் பிரிவில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மாணவி ராம்குமார் கவிப்பிரியா முதலாமிடம் பெற்றுள்ளார்.

கடந்த 2022 (2023) ஆண்டுக்கான க.பொ.த உயர் தரப் பரீட்சைப் பெறுகள் (04.09-2023) மாலை வெளியாகின.

குறித்த பெறுபேற்றின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த புதுக்குளம் மகாவித்தியாலய மாணவி செல்வி ராம்குமார் கவிப்பிரியா தமிழ், விவசாய விஞ்ஞானம், புவியியல் ஆகிய பாடங்களில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 194 ஆவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

# க.பொ.த உயர் தரப் பரீட்சைப் பெறுகள் – யாழ்ப்பாணம் இந்து கல்லூ ரியின் சிறந்த பெறுபேறுகள்

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதம் (பௌதிகவியல்) மற்றும் உயிரியல் பிரிவுகளில் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மாணவர்கள் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

பௌதிக பிரிவில் 6 மாணவர்களும், உயிரியல் பிரிவில் 5 மாணவர்களும் யாழ்ப்பாணம் மாவட்ட மட்ட தர நிலையில் இடம்பிடித்துள்ளனர்.


மாணவர்களின் விவரம் வருமாறு,

உயிரியல் பிரிவு (அனைவரும் 3ஏ சித்திகள்)

ஆனந்தஜோதி வித்யாசேகர் முதல்நிலை, கண்ணன் பவித்திரன் இரண்டாவது நிலை, நாகனேசன் சாரங்கன் மூன்றாவது நிலை, தர்மலிங்கம் அமலென் நான்காவது நிலை, ரகுகாந்தன் தனுசன் ஐந்தாவது நிலை, சிவசோதிநாதன் துவாரகன் பத்தாவது நிலை, சுதாகரன் ரமணன் 52வது நிலை, சிவகோணேசன் கோபிராம் 70வது நிலை, சிவபாலகிருஷ்ணன் சியாமலன் 72வது நிலை, லக்ஸ்மன் லவன் 101 வது நிலை.

கணிதப்பிரிவு (அனைவரும் 3ஏ)

சிறிபாந்தகரன் ஸ்னேகன் முதல் நிலை, லெஸ்லி பாஸ்கரதேவன் அபிஷேக் 2வது நிலை, சந்திரசேகரம் அபிஷேகன் 3வது நிலை, பகீரதன் தீபக் 4வது நிலை, மெஹமெட் நிஷ்பர் மெஹமெட் இஷாத் 5வது நிலை, விமலேஷ்வரன் கிஷாளன் 06வது நிலை, சிதம்பரநாதன் பார்வின் 14வது நிலை, ரமேஷ்நேசன் ஹர்ஷன் 19வது நிலை, பேரானந்தராஜா யுதிஸ்திரன் 21வது நிலை, பேரின்பநாதன் கஜதீபன் 27வது நிலை, சுவேந்திரன் ஆகேஷன் 26வது நிலை, அருள்நேசன் தேனுஜன் 28வது நிலை, அரவிந்தகுருக்கள் அரர்திகசர்மா 36வது நிலை, சந்திரகுமார் அபிராம் 37வது நிலை, கேசவரூபன் மதுலன் 39வது நிலை, வைகுந்தநாதன் பிரஷாந் 42வது நிலை, ஜூலியன் நிமல்ராஜ் இஷாக் 51வது நிலை, சிறிகுமரன் சசிவர்ணன் 53 வது நிலை, பாஸ்கரன் ரணுஜன் 55வது நிலை, குகதாசன் தனலக்சன் 58வது நிலை, சுரேந்திரன் ஆதித்தன் 78வது நிலை.



Jaffna Hindu College

2022 (2023) A/L Results

3A

Physical Science

| | | |
|---|---|---|
| 01. Sribandakaran Snekan | 01 | (Physical Science) |
| 02. LesleyBaskaradevan Abishek | 02 | (Physical Science) |
| 03. Santhirasegaram Apishegan | 03 | (Physical Science) |
| 04. Bakeerathan Theepak | 04 | (Physical Science) |
| 05. Mohamed Nisfer Mohamed Izzath | 05 | (Physical Science) |
| 06. Vimaleswaran Kishalan | 06 | (Physical Science) |
| 07. Sithamparanathan Barwin | 14 | (Physical Science) |
| 08. Rameshnesan Harshan | 19 | (Physical Science) |
| 09. Peranantharajah Yuthisthiran | 21 | (Physical Science) |
| 10. Perinpanathan Kajatheepan | 27 | (Physical Science) |
| 11. Suventhiran Aakeson | 26 | (Physical Science) |
| 12. Arulnesan Thenujan | 28 | (Physical Science) |
| 13. Aravinthakurukkal Ararthikasarma | 36 | (Physical Science) |
| 14. Chandrakumar Abiram | 37 | (Physical Science) |
| 15. Kesavaruban Mathulan | 39 | (Physical Science) |
| 16. Vaigunthanathan Pirasanth | 42 | (Physical Science) |
| 17. Julian Nirmalaraj Ishak | 51 | (Physical Science) |
| 18. Srikumaran Sasivarnan | 53 | (Physical Science) |
| 19. Baskaran Ranujan | 55 | (Physical Science) |
| 20. Kugathasan Thanalakshan | 58 | (Physical Science) |
| 21. Surendran Aathiththan | 78 | (Physical Science) |

Bio Science

| | | |
|---|---|---|
| 01. Anandajothy Vithyashakar | 01 | (Bio Science) |
| 02. Kannan Bavithran | 02 | (Bio Science) |
| 03. Nagasenan Sarangan | 03 | (Bio Science) |
| 04. Tharmalingam Amalen | 04 | (Bio Science) |
| 05. Ragukanthan Thanushan | 05 | (Bio Science) |
| 06. Sivasothynathan Thuvaragan | 10 | (Bio Science) |
| 07. Suthakaran Ramanan | 52 | (Bio Science) |
| 08. Sivakonesan Gobiram | 70 | (Bio Science) |
| 09. Sivabalakrishnan Siyamalan | 72 | (Bio Science) |
| 10. Lakshman Lavan | 101 | (Bio Science) |

# மீற்றர் வட்டி கொடுமையால் யாழ்ப்பாணம் – ஓட்டுமடத்தில் இளம் குடும்பப் பெண் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

மீற்றர் வட்டிக்கு பணம் பெற்று கடனில் சிக்கிய இளம் குடும்பப் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இச்சம்பவமானது 04-09-2023 அன்று யாழ்ப்பாணம் - ஓட்டுமடத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் மீற்றர் வட்டிக்கு பணத்தினை பெற்றுள்ளார். இந்நிலையில் மீற்றர் வட்டியினது அதிகரித்தபடியால், வட்டிக்கு பணம் கொடுத்த தரப்பினரால் வீடு, லொறி, வாகனம், மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பன பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் மிகுதி வட்டிப்பணம் செலுத்தாததன் காரணமாக வட்டிக்கு பணத்தினை கொடுத்தவர்கள் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் தன்னால் இனி உயிர்வாழ முடியாது என்றும் உயிரை மாய்க்கப் போவதாகவும் கணவனிடம் கூறியுள்ளார்.. அதற்கு கணவன், பத்து மாதத்தில் கைக் குழந்தை உள்ளது எனவே இவ்வாறு தவறான முடிவு எடுக்க வேண்டாம் என கூறிவிட்டு கோவிலுக்கு சென்றுள்ளார்.

கோவிலில் இருந்து இன்று மதியம் வீடு திரும்பியவேளை வீடானது பூட்டப்பட்டிருந்தது. கதவினை திறந்து உள்ளே சென்று பார்த்தவேளை குறித்த பெண் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார். தூக்கில் தொங்கும் தாயாரது கால்களை பிடித்தவாறு 10 மாதங்களே நிரம்பிய குழந்தை அழுதவாறு காணப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.. பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலமானது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஓட்டுமடம் - யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த ஜெயராசா அருள்பாலினி (வயது 34) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிர்மாய்த்துள்ளார்.

# 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் – முல்லைத்தீவு உடையார்கட்டு மஹா வித்தியாலய மாணவி மாவட்ட ரீதியில் முதலிடம்!



வெளியாகிய கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் கலை பிரிவில் முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவி மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, க.பொ.த உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் 04-09-2023 அன்று மாலை வெளியான நிலையில் அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவி கலை பிரிவில் 3ஏ சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தினை பெற்றுள்ளார்.

இவ் மாணவி தமிழ், புவியியல், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 3ஏ சித்தியினையும் ஆங்கிலம் பாடத்தில் எஸ் பெறுபேற்றையும் பெற்று மாவட்ட ரீதியில் முதலாவது இடத்தினையும் தேசிய மட்டத்தில் 283 வது இடத்தினையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

# கொக்குதொடுவாய் மனித புதைகுழியில் எலும்புக்கூடுகளுடன் துப்பாக்கி சன்னங்களும் காணப்படுவதாக தெரிவிப்பு

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியில் இரண்டாவது நாளாகவும் வியாழக்கிழமை (7) அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

அப்போது மனித எலும்புக்கூடுகளுடன் துப்பாக்கி சன்னங்களும் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

இரண்டாவது நாள் அகழ்வுப் பணி முடிவடைந்த பிறகு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே சட்ட வைத்திய அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்:

இரண்டாவது நாளாகவும் வியாழன் (7) கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடைபெற்றிருந்து. இதன்போது மேலதிகமான மனித எலும்பகூடுகள் இரண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வெள்ளிக்கிழமையன்றும் அகழ்ந்தெடுக்கப்படும் பணி இடம்பெறவுள்ளது. அகழ்வின்போது வேறு சில முக்கியமான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதில் முக்கியமாக துப்பாக்கி சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோக துண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. முக்கியமான ஆதாரங்களில் இதுவும் ஒன்று. அது தவிர கண்டெடுக்கப்பட்ட ஆதாரங்கள் பகுப்பாய்வின் பிற்பாடே அறியத்தரப்படும் என்றார் அவர்.

மனித எச்சங்கள் முழுவதுமாக இன்னும் எடுக்கப்படவில்லை பகுதியளவிலேயே எடுக்கப்பட்டுள்ளது. உடுப்புக்களில் சில தடயம் இருக்கின்றது இதனை விரிவாக ஆராய்ந்ததன் பின்னர் தான் இது தொடர்பாக கூறமுடியும் என மேலும் தெரிவித்தார்.

அங்கு காணப்படும் மனித எச்சங்கள் தொடர்பில் கூறும் போது, ஒன்று அல்லது இரண்டு தான் என்று நாம் எண்ணிக்கையை சரியாக கூறமுடியாது ஏனெனில் முழுவதுமாக எடுத்ததன் பின்னர் தான் எத்தனை என கூறமுடியும் என்றார்.

மனித புதைகுழிக்குள் இருந்து தான் துப்பாக்கி சன்னம் எடுக்கப்பட்டது. இரண்டு உலோக துண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவை துப்பாக்கி சன்னம் என்றே சந்தேகிக்கப்படுகின்றது. அடையாளங்களும் இருக்கின்றன அது பகுப்பாய்வு செய்ததன் பின்னர் தான் இது தொடர்பான சரியான கருத்து தெரிவிக்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

குறித்த சம்பவ இடத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஸ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், தடயவியல் பொலிஸார், விஷேட அதிரடி படையினர் ஆகியோர் முன்னிலையில் அகழ்வு பணி நடைபெற்றிருந்தது.

குறித்த அகழ்வு பணியின் போது முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

# யாழ்ப்பாணத்தில் தவறான சிகிச்சை காரணமாக பாதிக்கப்பட்ட சிறுமி தொடர்பிலான ஆலோசனையை நீதிமன்றுக்கு அளிக்குமாறு பணிப்புரை

- நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 8 வயது சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள தகுதி வாய்ந்த மருத்துவர்கள் குழு சார்பில் மருத்துவ வல்லுநரின் ஆலோசனையை நீதிமன்றுக்கு முன்வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இந்த கட்டளையை வியாழக்கிழமை (7) அன்று வழங்கினார்.

காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 8 வயதுச் சிறுமி பிறகு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட ஊசி மருந்தை ஏற்றும் "கானுலா" தவறாக பொருத்தப்பட்டதால், சிறுமியின் இடது கை பாதிப்புக்கு உள்ளான நிலையில் இடது கை மணிக்கட்டுடன், அகற்றப்பட்டது என்று மருத்துவ அறிக்கை தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தின் போது தவறு இடம்பெற்றமை தொடர்பில் உரிய விசாரணைகள் சுகாதார அமைச்சின் பணிப்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தகுதிவாய்ந்த மருத்துவர்கள் குழுவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸாரினால் வியாழனன்று நீதிவான் நீதிமன்றில் "பி" அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையின் வாக்குமூலம் "பி" அறிக்கையில் விபரிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி திருமதி சர்மினி விக்னேஸ்வரன் நீண்ட சமர்ப்பணத்தை மன்றில் முன்வைத்தார்.

அதனை ஆராய்ந்த நீதிமன்று, சிறுமியின் கை அகற்றப்படுவதற்கான காரணம் மற்றும் அதற்கான தவறிழைப்பு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் மூவரடங்கிய தகுதிவாய்ந்த மருத்துவர்கள் குழுவைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர் ஒருவரினால் மன்றுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குமாறு பணித்தது.

வழக்கில் பெயர் குறிப்பிடப்பட்ட தாதிய உத்தியோகத்தர் வெளிநாடு செல்வதற்கான தடைக் கட்டளை விண்ணப்பம் வழக்குத் தொடுநரான பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டது. அதற்கு அனுமதியளித்து நீதிமன்று கட்டளை வழங்கியது.

பொலிஸாரின் மேலதிக விசாரணை அறிக்கைக்காக வழக்கு செப்ரெம்பர் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# வடமாகாண மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு ஐ நா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அறிவிப்பு

- நடராசா லோகதயாளன்

வடமாகாண மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கும், உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் பூரண ஆதரவை வழங்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிட இணைப்பாளர் திரு மார்க் அன்றூ பிரான்ச் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் அன்றாட செயற்பாடுகள் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், மக்களின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்புகளை ஒழுங்கமைக்க ஐக்கிய நாடுகள் சபை பூரண ஆதரவை வழங்கும் எனவும் திரு மார்க் அன்றூ பிரான்ச் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். திருமதி. சார்ள்ஸ் அவர்களை 05.06.2023 மாலை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தின் சமூக, பொருளாதார மற்றும் நல்வாழ்வு தொடர்பில் திருப்திகரமான போக்கு காணப்படுவதாகவும், எதிர்காலத்தில் இந்த செயற்பாடுகளின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதே ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிகழ்வுகள் குறித்து அவருக்கு விளக்கமளித்ததுடன், முப்பது வருடகால யுத்தத்தினால் பாதிப்புக்கு உள்ளாகி வாழ்ந்த வடபகுதி மக்கள் தற்போது சாதகமான நிலையை அடைந்து வருவதாகவும் இக்கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. வளர்ச்சியின் இலக்குகளை நோக்கி, அந்த அடித்தளத்தை வலுப்படுத்த எதிர்காலத்தில் சிறந்த ஆதரவை வழங்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் திரு.சமன் பந்துல உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்றூ பிரான்ச் அவர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களுக்கும் இடையிலான யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பான விரிவான கலந்துரையாடல் 05.09.2023 காலை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




ॐ

OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM L3S 3T8 CANADA**

**Mobile & WhatsApp: 001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு, புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில், ராஜபக்சகளுக்கு நெருக்கமான தொடர்பு' சனல் 4 ஆவணப்படம் கூறுவதாக 'த டைம்ஸ்' செய்தி

இலங்கையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் 275க்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் ராஜபக்சக்களுக்கு விசுவாசமாக செயற்பட்டவர்கள், இருந்ததாக நாளை தினம் (செப்டெம்பர் 05) பிரித்தானியாவின் சனல் 4 வெளியிடவுள்ள ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளதாக "தி டைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

"டிஸ்பாட்சஸ்" என்ற தலைப்பிலான ஆவணப்படங்களின் தொடரில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான புலனாய்வு விசாரணையின் அடிப்படையில் குறித்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளதாக "தி டைம்ஸ்" தெரிவிக்கின்றது.

ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக, இஸ்லாமிய அரசு அமைப்புடன் தொடர்புடைய குண்டுதாரிகளுடனான ஒரு சந்திப்பை சிரேஷ்ட இராணுவ புலனாய்வு அதிகாரி சுரேஷ் சாலேவுடன், தான் ஏற்பாடு செய்ததாக, அந்த ஆவணப்படத்தில் உள்ளக தகவல்களை அறிந்ததாக கூறும் உயர் மட்டத்தில் உள்ள ஒருவர் கூறியுள்ளதாக "தி டைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த தாக்குதலில் பிரித்தானிய சுற்றுலா பயணிகள் 8 பேர் உட்பட 275க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

கூட்டம் நிறைவடைந்தவுடன் சுரேஷ் சாலே என்னிடம் வந்து, கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக வருவதற்கு இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல் ஒன்று தேவைப்படுகிறது, அவர் வெற்றிபெற அது ஒன்றே வழியாகும்" என அந்த உள்ளக தகவலை வெளியிட்டதாக கூறப்படும் ஹன்சீர் அசாத் மௌலானா கூறியதாக "தி டைம்ஸ்" கூறுகிறது.

அது மாத்திரமன்றி "அந்த தாக்குதல் திட்டம் ஒன்றிரண்டு நாட்களில் உருவாக்கப்படவில்லை, அது இரண்டு, மூன்று வருடங்களாக திட்டமிடப்பட்டது" எனவும் அவர் கூறியுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவான பின்னர், சாலே இராணுவ புலனாய்வுப் பிரிவின் தலைவராக பதவி உயர்வுப் பெற்றார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர் நாட்டில் ஆறு மாதங்களில் மீண்டும் பாதுகாப்பை தான் உறுதி செய்வேன் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் கோட்டாபய ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார்.

அந்த தாக்குதல்களில் சக்தி வாய்ந்த ராஜபக்சக்களின் குடும்பம் ஈடுபட்டிருந்ததாக இலங்கையில் நீண்டகாலமாக பேச்சுக்கள் இருந்தன. எனினும் செனல்-4 ஆசிரியர் பென் டி பெர்"இன் (Ben de Pear) பேஸ்மெண்ட் பிலிம்ஸ் (Basement Films) தயாரிப்பில் உருவாகியிருக்கும் இந்த ஆவணப்படத்தில், முதல் முறையாக இந்த தாக்குதலில் உயர்மட்டத்திலிருந்தவர்களின் ஈடுபாடு இருந்தது என்பதை உள்ளக தகவலறிந்தவர்கள் கூறியுள்ளதாக "தி டைம்ஸ்" தெரிவிக்கின்றது.

மௌலானா கடந்த வருடம் இலங்கையிலிருந்து வெளியேறி தனது வாக்குமூலத்தை ஐரோப்பிய புலனாய்வு அமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் தெரிவித்தார்.

அவர் கூறியது நம்பகத்தன்மை வாய்ந்து மற்றும் புலனாய்வு செய்ய உகந்தது என அவர்கள் கருதுகின்றனர்.

இதேபோன்று பெயரிடப்படாத சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவரும் குண்டுதாரிகளுக்கும் சாலேவிற்கும் தொடர்பு இருந்ததாக மௌலானா கூறுவதில் உண்மை இருப்பதாக கூறியுள்ளார். அதுமாத்திரமன்றி அந்த தாக்குதல்களுக்கு முன்னரும் பின்னரும் பொலிஸ் விசாரணைகளை இராணுவப் புலனாய்வு அமைப்பினர் தடுத்ததாகவும், அந்த இரண்டாவது நபர் கூறியுள்ளதாகவும் "தி டைம்ஸ்" செய்தியில் கூறப்பட்டுள்ளது.

"2019ஆம் ஆண்டு இந்த கட்சி பதவிக்கு வந்தவுடன், அந்த விசாரணை தொடர்புடைய அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர், புலனாய்வு முற்றாக சதி செய்து முறியடிக்கபட்டது" என அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அது மாத்திரமன்றி, ஐ.எஸ் வலையமைப்புடன் இருக்கும் தொடர்புகள் குறித்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளை இராணுவ புலனாய்வு அமைப்பினர், போலியான பல தகவல்களை, திசைத் திருப்ப முயன்றதாக தெரிவதாக, செனல் 4 ஆவணங்கள் காட்டுவதாக அமைந்துள்ளதாக "தி டைம்ஸ்" செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்திய புலனாய்வு அமைப்பு அந்த குண்டு தாக்குதல்களுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே இலங்கையை எச்சரித்ததாக, இதர ஆவணங்கள் காட்டுவதாக, அந்த ஆவணப்படம் குறிப்பிடுவதாக, "தி டைம்ஸ்" செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு அந்த குண்டு தாக்குதல்கள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றின் அறிக்கையை அந்த சமயத்தில் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ச வெளியிட மறுத்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சுயாதீன விசாரணை ஒன்று தேவையென, பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, கடந்த ஆண்டு, பாப்பரசரிடம் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருந்தார். குண்டுதாரிகளுடன் சாலே தொடர்புபட்டிருந்தார் எனக் கூறும் மௌலானாவின் வாக்குமூலம் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

மௌலானா பல ஆண்டுகள் ராஜபச்சக்களின் விசுவாசியாக இருக்கும் பிள்ளையானுக்குழு உதவியாளராக பல ஆண்டுகள் இருந்துள்ளதாகவும், தனது அரசியல் எதிரிகளை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிறையில் இருந்த போது பிள்ளையான் குண்டுதாரிகளை சந்தித்துள்ளதாகவும், "தி டைம்ஸ்" செய்தி கூறுகிறது.

கொலைகளில் மாத்திரமே, ஆர்வம் கொண்டிருந்த பயங்கரவாதிகளை பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை பிள்ளையான் உடனடியாக கண்டதாக, மௌலானா கூறியதாக, அந்த ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக, "தி டைம்ஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

"அவர்களுக்கு இந்த உலகில் எதிலும் ஆர்வம் இல்லை, அவர்களை நாம் பயன்படுத்தி கொள்ளலாம்" என பிள்ளையான் கூறியதாக மௌலானா தெரிவித்துள்ளார். அவர்களை சிறையிலிருந்து விடுவிக்க பிள்ளையானும் சாலேயும் வழி செய்தனர், பின்னர் அவர்களை சாலே சந்திப்பதற்கு அவர் ஏற்பாடு செய்தார் என மௌலான கூறியுள்ளதாக "தி டைம்ஸ்" குறிப்பிட்டுள்ளது.

குண்டு வெடிப்புகள் இடம்பெற்ற தினம், காலை சாலேயிடமிருந்து தனக்கு ஒரு அழைப்பு வந்ததாகவும், அதில் கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்குச் சென்று அவர்களில் ஒருவரை அழைத்துவரும்படி கூறியதாகவும் மௌலானா கூறியுள்ளார். ஆனால் அவரால் அதை செய்ய முடியவில்லை. குண்டுதாரி ஒருவர் அந்த ஹோட்டலில் இருந்த போது தொலைபேசி அழைப்பு ஒன்றை பெற்றமை, சிசிடிவி காட்சிகளில் தெரிகிறது. அவர் உடனடியாக அங்கிருந்து வெளியேறி, சில மணி நேரங்களுக்குப் பின்னர் கொழும்பிலுள்ள சிறிய ஹோட்டல் ஒன்றில் குண்டுவெடிப்பை நடத்தியுள்ளார்.

இதேவேளை, செனல் 4ற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இந்த குற்றச்சாட்டுகள் "முற்றிலும் ஆதாரமற்றவை" எனவும் அந்த ஆவணப்படத்தில் பேசியுள்ளவர்களுடன் தனக்கு எந்த தொடர்பும் இருக்கவில்லை எனவும் சாலே மறுத்துள்ளார். குண்டுதாரிகளுடன் தொடர்பு ஏற்பட்டதாக கூறப்படும் நாளில் தான் இலங்கையில் இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். "உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை" என அந்த கடிதத்தில் சாலே மேலும் கூறியுள்ளார்.

இந்த ஆவணப்படம் தொடர்பில் செனல் 4 பிள்ளையான் மற்றும் ராஜபக்ச குடும்பத்தாரின் கருத்துக்களை கோரியபோதும் அதற்கு பதில் கிடைக்கவில்லை என அந்த தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால், நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை, போர் குற்றங்கள், மனித இனத்துக்கெதிரான குற்றங்களை உள்ளடக்கிய, இலங்கையின் கொலைக்களம் (Sri Lanka's Killing Fields) என்ற ஆவணப்படம், கடந்த 2011ஆம் ஆண்டு ஜுன் 14ஆம் திகதி செனல் 4 வெளியிட்டிருந்தது. எவ்வாறெனினும், இலங்கை பாதுகாப்புப் படையினர் மீதும், அரசாங்கத்தின் மீதும் குறித்த ஆவணப்படத்தின் ஊடாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தது.

இந்த ஆவணப் படத்தின் இரண்டாவது பகுதி "இலங்கையின் கொலைக்களம்: தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள்" (Sri Lanka's Killing Fields: War Crimes Unpunished) என்ற தலைப்பில் 2012, மார்ச் 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

# வைத்தியசாலை அஜாக்கிரதை காரணமாக கை துண்டிக்கப்பட்ட யாழ் சிறுமி

- எமது யாழ்ப்பாண செய்தியாளர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 8 வயது சிறுமியொருவருக்கு இடது கையில் மணிக்கட்டிற்கு கீழ் அகற்றப்பட்ட அவலம் இடம்பெற்றுள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி ஒருவருக்கு ஊசி மருந்து செலுத்துவதற்காக பொருத்தப்பட்ட கனுலாவினால் (cannula) இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவிக்கையில், இப்படியொரு சம்பவம் நடந்ததை உறுதி செய்த்தோடு முதல் கட்ட உரிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் "கனுலா பொருத்திய போது அல்லது மருந்து செலுத்தும் போது, அருகில் இருந்த நாடி சேதமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இதனால் கையின் கீழ் பகுதிக்கு இரத்தம் செல்ல முடியாமல், கை செயலிழந்துள்ளது. இதனால் கையை மணிக்கட்டிற்கு கீழே அகற்ற வேண்டியேற்பட்டுள்ளது. அது தொடர்பான பூரண விசாரணை நடந்து கொண்டிருக்கிறது" என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் மல்லாகத்தைச் சேர்ந்த சிறுமி கடந்த ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி இரவு மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அனுமதிக்கப்பட்ட சிறுமிக்கு 26 ஆம் திகதி கனுலா போடப்பட்டுள்ளது. 27 ஆம் திகதி 3 நேர மருத்து ஏற்றப்பட்டுள்ளது. 27 ஆம் திகதி இரவு பிள்ளை முறையிட்டுள்ளதோடு தாயாரும் முறையிட்டுள்ளார். 28 ஆம் திகதி காலை கனுலா கழற்றப்பட்டுள்ளது. அப்போதே கை வீக்கம் காணப்பட்டுள்ளது. கையிற்கு குருதி ஓட்டம் இல்லை எனக் கண்டுபிடித்து மாலை சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எடுத்துச் சென்று சிகிச்சைக்கு அளிக்கப்பட்டுள்ளது. பின்னர் செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி இடது கை மணிக் கட்டுடன் அகற்றும் அவலம் ஏற்பட்டு விட்டது.

காய்ச்சல் காரணமாக திருநெல்வேலி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு கூறிய வைத்தியரின் அலோசனையை அடுத்து அந்த சிறுமி போதனா வைத்தியசாலையின் 12ஆம் இலக்க விடுதியில் அனுமதித்துள்ளனர். தனியார் வைத்தியசாலையில் இருந்து பின்பு போதனா வைத்தியசாலையில் பொருத்திய ஊசியின் கையே மணிக்கட்டிற்கு கீழே அகற்றப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ஞாயிற்றுகிழமை (3) இரு வைத்திய நிபுணர்கள் தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப் பட்டுள்ளது. அந்த விசாரணைக்காக வைத்திய நிபுணர்களா பிறேமகிருஸ்னா மற்றும் அருள்மொழி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதோடு மத்திய சுகாதார அமைச்சிற்கும் முறையிடப்பட்டுள்ளது.

# இந்திய தரப்புடன் நேரடியாக பேசப்போவதாக யாழ்ப்பாண மீனவர்கள் அறிவிப்பு

- நடராசா லோகதயாளன்

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்தனர்.

இந்தியாவின் தமிழகத்துக்கு 14 பேர் கொண்ட வடபகுதி மீனவர்கள் கடல் வழியாக படகு மூலம் சென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பாஜக தலைவர் கு. அண்ணாமலை ஆகியோரை சந்தித்து பேச தீர்மானித்துள்ளனர்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் திங்கட்கிழமை (4) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ், கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றை கையளித்தோம்.

குறித்த மகஜர் கையளித்து 14 நாட்களுக்குள் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் காத்திரமான நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்த நிலையிலேயே குறித்த முடிவை எட்டியதாக தெரிவித்தார்.

14 நாட்களுக்குள் தீர்வு காணப்படாவிடில் அடுத்து வரும் நாட்களில் குறித்த பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: ’ராஜபக்சக்களின் திட்டமே’ என்கிறது செனல் 4

- சிவா பரமேஸ்வரன்

**பி**ரித்தானிய ஒளிபரப்பு நிறுவனமான செனல் 4 இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடபில் கடந்த செவ்வாய்க்கிழமை (5) இரவு வெளியிட்ட ஆவணப்படம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரபரப்பையும் அதிர்வலைகளையும் எழுப்பியுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற இந்த தாக்குதலுக்கு ராஜபக்ச குடும்பத்தினரே நேரடியாக பொறுப்பு என அந்த ஆவணப்படம் குற்றஞ்சாட்டுகிறது.

எனினும் இந்த ஆவணப் படம் தொடர்பில், இலங்கை அரசிடமிருந்து மாறுபட்ட கருத்துக்கள் வெளியாகியுள்ளன. அந்த தாக்குதல் தொடர்பில் புதிய அறிக்கை ஒன்றை நாடாளுமன்ற விசேட குழு ஒன்றிடம் சமர்ப்பிக்கப்படுமென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்தில் கூறினார். “சர்வதேச விசாரணை ஒன்று தேவைப்பட்டால் அதற்கான அனுசரணையளிப்பது குறித்தும் அமைச்சரவை விவாதித்தது” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அமைச்சரவை பேச்சாளரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சரான பந்துல குணவர்தன அமைச்சரவையில் இதுத் தொடர்பில் விவாதிக்கபட்டவில்லை என புதன்கிழமை (6) ஊடக சந்திப்பில் தெரிவித்தார். “அமைச்சரவை இதை நேற்று (5) விவாதிக்கவில்லை, ஆனால் உறுப்பினர் ஒருவர் இதுத் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்”.

பாதுகாப்புதுறை இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் “ஒரு குழுவை நியமிக்க” ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

எனினும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டம் நடைபெறும காலத்தை அண்மித்து செனல் 4 இவ்வாறான கானொளிகளை வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளதாக, அரசாங்கத் தரப்பின் அமைச்சர்கள் அனைவரும் ஒரே குரலில் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இதனிடையே எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்த ஆவணப்படம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். சர்வதேச ஊடகங்கள் சர்வதேச விசாரணை ஒன்று தேவை எனக் கோருவது தொடர்பில், நாடு அவமானப்பட வேண்டும் என நாடாளுமன்ற விவாதத்தின்போது அவர் சுட்டிக்காட்டினார்.

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து அரசு வெட்கப்பட வேண்டும். அவர்களுக்கு முன்பாக அரசு இதை வெளியிட்டிருக்க வேண்டும். எனவே, செனல் 4 வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து சர்வதேச மட்டத்திலான விசாரணை ஒன்று தேவை”.

அரசியல்வாதிகளுக்கு அப்பாற்பட்டு கத்தோலிக்க திருச்சபையும் இத்தாக்குதல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றை கோரியுள்ளது. கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் இந்த ஆவணப்படம் வெளியானதை அடுத்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றில், “அறிக்கை ஒன்றை மாத்திரம் தயாரிப்பது என்ற நோக்கத்துடன் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டால் அதன் மூலம் காத்திரமான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த முடிவுகள் ஏதும் வராது” எனக் கூறியுள்ளார்.

சுயாதீன விசாரணைக் குழுவொன்றின் மூலமே அந்த விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என பேராயர் வலியுறுத்துகிறார்.

“சுயாதீனமான, பாரபட்சமற்ற, நீதியான, வெளிப்படைத்தன்மையுடன் கூட பரந்துபட்ட விசாரணை ஒன்று இடம்பெற வேண்டும். மிகவும் துக்ககரமான அந்த நிகழ்வு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அந்த சதித்திட்டம் பற்றி அனைத்து உண்மைகளும் ஆராயப்பட்டு, அதில் கூறப்பட்டிருக்கும் நபர்கள் குறித்து அதிலும் குறிப்பாக, இடம்பெற்ற கூட்டு படுகொலைகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும்” என கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் பேராயர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. எப்படியான விசாரணை இடம்பெற்றாலும், பொலிஸாரும் புலனாய்வு அதிகாரிகளும் தம்மிடமுள்ள சாட்சியங்களை பகிர்ந்துகொள்ள வேண்டுமென பேராயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பிலான தனது புலனாய்வு தொடரான “டிஸ்பாட்சஸ்” என்ற தலைப்பில் ஒளிபரப்பான அந்த ஆவணப்படத்தில், இந்த தாக்குதல்கள் தீவிரவாத இஸ்லாமிய அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத், கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டுவர நடத்திய தாக்குதலாகும் என கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்று - துணை இரணுவக் குழுவாக செயல்படுவதாக குற்றஞ்சாட்டப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பேச்சாளரான ஹச்னீர் ஆசாத் மௌலானாவின் வாக்குமூல ஆதாரத்தின் அடிப்படையில் அந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

“குற்றவாளிகள் யார், அதை யாரின் உத்தரவின் பேரில் யார் ஏற்பாடு செய்தார்கள் என்ற உண்மை எனக்குத் தெரியும்” என ஆசாத் மௌலானா அந்த ஆவணப்படத்தில் நேர்முகமாக கூறியுள்ளார்.

அந்த தாக்குதல்கள் முழுவதும் கோட்டாபயவின் நேரடி உத்தரவுகளை அடுத்து, அரசின் புலனாய்வு சேவையின் தலைவராக இருந்தா துன் சுரேஷ் சாலே மூலம் நடத்தப்பட்டது என்பதற்கான ஆதாரம் காணப்படுவதாக அந்த ஆவணப்படம் மேலும் கூறுகிறது.

அதன் நிர்வாகத் தயாரிப்பாளர் பென் டெ பியர் சமூக ஊடகத்தின் மூலம், “ஒரு குடும்ப ஆட்சியை மீண்டும் கொண்டுவர 269 பேர் படுகொலை செய்யப்பட்டார்களா?” என கேள்வி எழுப்பியுள்ளார். எனினும், இந்த குற்றச்சாட்டுகளை மேஜர் ஜெனரல் சாலே மறுத்துள்ளார்.

தமக்கு தகவல்களை அளித்த ஆசாத் மௌலானாவும் அவரது தலைவரும் - தற்போது இராஜாங்க அமைச்சராகவும் உள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் என்கிற பிள்ளையானும் கோட்டாபய ராஜபக்ச கூட்டிய கூட்டம் ஒன்றில் இருந்தனர், அந்த கூட்டத்தில் “ட்ரிபோலி ப்ளட்டூன்” என்ற கொலைக்குழுவை துணை இராணுவப்படை மூலம் அமைக்கவும் கூறினார் என செனல் 4 ஆவணப்படம் குறிப்பிட்டுள்ளது.

“அந்த டிரிபோலி ப்ளட்டூன் கோட்டாபயவின் நேரடி கட்டளையின் கீழ் செயற்பட்டது” என மௌலானா தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளர். அது ஒளிப்பதிவாக அந்த ஆவணப்படத்தில் காட்டப்படுகிறது.

கொலை குற்றச்சாட்டுகளின் கீழ் மட்டக்களப்பு சிறையில் இருந்த பிள்ளையான் தன்னை அழைத்து சிறைக்கு வந்து தன்னுடன் இருக்கும் சில முஸ்லிம் தீவிரவாதிகளை சந்திக்கும்படி கூறியதாகவும் மௌலானா மேலும் கூறுகிறார். அங்கு சென்ற போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய குற்றவாளியான சஹ்ரானின் சகோதரர் சைனி மௌலவியை சந்தித்ததாகவும் தெரிவித்த ஆசாத் மௌலானா, பின்னர் அவர்களை சிறையிலிருந்து பிணையில் விடுவிக்க ஏற்பாடுகளை செய்ததாகவும் அந்த ஆவணப்படம் கூறுகிறது.

“கடந்த 2018இல் அந்த நபர்கள் மற்றும் சுரேஷ் சலேயுடன் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யும்படி பிள்ளையான் என்னிடம் கூறினார்” என அந்த ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளது.

பிள்ளையானின் வேண்டுகோளுக்கு அமைய அந்த நபர்களுக்கும் சுரேஷ் சலேவிற்கும் இடையே ஒரு கூட்டத்தை தான் ஏற்பாடு செய்ததாகவும், அவர்களை சிறையிலிருந்து விடுவிக்க அவர் உதவியதாகவும் மௌலான ஐ நா விசாரணையாளர்களிடம் கூறியதாக செனல் 4 இன் ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தான் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து அந்த குழுவை அங்கு வருமாறு கூறியதாக தெரிவிக்கும் மௌலானா, ஆதலால் “எனக்கு அனைத்தும் தெரியும்” என்கிறார். மௌலானா தனது வாக்குமூலத்தில் அந்த கூட்டத்திற்கு சைனி மௌலவி தனது சகோதரர் சஹ்ரான் மற்றும் இதர நால்வருடன் வந்தார், “அவர்களை நான் சுரேஷ் சலேவிற்கு அறிமுகப்படுத்தினேன்” எனக் கூறியுள்ளார்.

ஐ.நா விசாரணையாளர்களிடம் பேசிய மௌலானா, அந்த கூட்டம் மூன்று மணி நேரம் இடம்பெற்றது எனவும், தன்னை வெளியே இருக்குமாறு கூறினார்கள் எனவும், கூறியதாக அந்த ஆவணப்படம் கூறுகிறது.

“அந்த கூட்டம் முடிவடைந்தவுடன், சுரேஷ் சாலே என்னிடம், ராஜபக்சக்களுக்கு இலங்கையில் பாதுகாப்பாற்ற ஒரு சூழல் தேவைப்படுகிறது. அது ஒன்றே கோட்டாபய ஜனாதிபதியாவதற்கான வழி. இதுவே அந்த தீவிரவாதிகளுக்கும் சுரேஷ் சாலேவிற்கும் இடையே நடைபெற்ற கூட்டம்” என அவர் அந்த ஆவணப்படத்தில் கூறியுள்ளார்.

இதனையும் தாண்டி, அடையாளம் காணப்படாத உயர்மட்ட அரச அதிகாரி ஒருவரும் அந்த ஆவணப்படத்தில் பேசியுள்ளார். “கோட்டாபய சுரேஷ் சாலேயை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அதன் காரணமாகவே அவரால் விரைவாக பதவி உயர்வுகளை பெற முடிந்தது. இலங்கையில் பல பிரச்சினைகளுக்கு அவரையே அதிகம் குற்றஞ்சாட்ட வேண்டும்” என அந்த அதிகாரி கூறுகிறார்.

“குற்ற விசாரணைப் பிரிவு தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு சம்பந்தப்பட்டுள்ளது என்பதை நிச்சயம் கண்டறிந்திருப்பார்கள்” என பெயரிடப்படாமலும், அடையாளம் காணப்படாமலும் இருக்கும் அந்த அதிகாரி செனல் 4 ஆவணப்படத்தில் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுதாக்குதல்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை கோட்டாபய ராஜபக்ச வெளியிடவே இல்லை. ஆனால், அந்த அறிக்கையை தாங்கள் பார்த்துள்ளதாக கூறும் செனல் 4, முக்கிய குண்டுதாரியை தாக்குதலுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே புலனாய்வு பிரிவினர் அறிந்திருந்தனர் என தெரிவித்துள்ளது.

இந்த ஆவணப்படத்தில் குற்ற விசாரணைப் பிரிவு பிரிவின் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிஷாந்த சில்வாவும் பேசியுள்ளார். ராஜபக்ச ஆட்சியில், நாட்டின் தெற்கு பகுதியில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை அவர் விசாரணை செய்து வந்தார், எனினும் கோட்டாபய ராஜபக்சவை குற்ற புலனாய்வு பிரிவிற்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை விடுத்த காரணத்தால் ஏற்பட்ட “உயிர் அச்சுறுத்தல்” காரணமாக அவர் தற்போது நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமசிங்கவின் படுகொலை பற்றிய விசாரணை தொடர்பிலேயே நிஷாந்த சில்வா கோட்டாபய ராஜபக்சவை விசாரணைக்கு அழைத்திருந்தார்.

லண்டனிலிருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை, இந்த ஆவணப்படம் தொடர்பில் வெளியிட்டுள்ள விமர்சனத்தில், அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் திடுக்கிடும் வகையில் உள்ளதாக கூறியுள்ளது.

“டிஸ்பாட்சஸ்” விசாரணை தொடரின் புதிய ஆவணப்படமான-இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள்-சாட்சியம் அளித்தவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் பாரிய புதிய குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த குற்றசாட்டுகள் திடுக்கிடும் வகையில் இருந்தாலும், அவை நேரடியாகவே உள்ளன: அதாவது ராஜபக்சக்களின் சகாக்கள் தேசிய தௌஹீத் ஜமாத்துடன் நேரடியாக தொடர்பில் இருந்தனர், மேலும், அவர்கள் அந்த குண்டு வெடிப்புகளுக்கு முன்னர் அந்த அமைப்பின் தலைவர்களை பொலிசார் கைது செய்வதற்கு தடையாக இருந்தனர் அல்லது படுகொலைகளுக்கு பிறகு முழுமையான விசாரணைகளை முன்னெடுக்க முட்டுக்கட்டை போட்டனர்” என்கிறது கார்டியன் விமர்சனம்.

இந்த ஆவணப்படத்தின் நிர்வாகத் தயாரிப்பாளர் பென் டெ பியர் இதற்கு முன்னர் செனல் 4 தொலைக்காட்சியில், கெலம் மெரேயின் நோ ஃபயர் சோன்: இலங்கையில் கொலைக்களங்கள் என்ற ஆவணப்படம் வெளியான போது அதன் இயக்குநராக இருந்தவர். அந்த ஆவணப்படத்தில் 2009இல் இடம்பெற்ற இறுதிகட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் இடம்பெற்றிருந்தன.

அந்த கண்டுபிடிப்புகள் நம்பகத்தன்மை வாய்ந்தவை என 2011ஆம் ஆண்டி இடம்பெற்ற ஐ.நா விசாரணை ஒன்று கண்டறிந்தது.

செனல் 4 ஆவணப்படமான நோ ஃபயர் சோனில் காட்டப்பட்ட கணொளிக் காட்சிகளில் கைதிகள் நிர்வாணமாக, கண்கள் கட்டப்பட்டு, கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்படுவது உண்மையா என்பதை கண்டறிய இலங்கை அரசால் 2015ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு அது உண்மையே என கண்டறிந்தது.

இந்த நிலையில், குறித்த காணொளியில் நேரடியாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சரும், பிள்ளையான் என அழைக்கப்படுபவருமான, சிவநேசதுரை சந்திரகாந்தன் தன்மீதான குற்றச்சாட்டுகளை பொய் என்று கூறி அதை வன்மையாக கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

“2015 - 2020 வரை சிறையில் இருந்த என்னால் இதனை எப்படி செய்ய முடியும்? இந்த தாக்குதல்களில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கும் என் மீது பழி போடுவதை வன்மையாக கண்டிக்கின்றேன்”.

“மதத்திற்காக மரணிப்போம் என சத்தியபிரமானம் செய்த பலர் இன்று சிறைகளிலும், வெளியேயும் இருக்கின்றார்கள். அதேபோல் இவர்கள் மதத்தின் பெயராலும், மரணிப்பதற்கு ஊக்குவித்த சில மத நிறுவனங்கள் இருக்கின்றன. இதன் பின்னால் சில அரசியல் சக்திகளும் சர்வதேச சக்திகளும் இருக்கின்றன. இதை காப்பாற்றுவதற்காக ஆசாத் மௌலானா எடுக்கின்ற முயற்சியா இது?” என அவர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ச வியாழக்கிழமை வெளியிட்டுள்ள மறுப்பறிக்கை ஒன்றில், இந்த ஆவணப்படம், ராஜபக்சக்களை குறிவைத்து எடுக்கப்பட்டுள்ளது, அது உண்மைக்கு புறம்பானது என்று கூறி அதை மறுத்துள்ளார். மேலும் சுரேஷ் சாலே மீதான குற்றச்சாட்டையும் மறுத்துள்ள அவர், தான் கத்தோலிக்க திருச்சபை மற்றும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை தான் பெரிதும் மதிப்பதாகவும் கூறியுள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன



- மன்னார் நிருபர் (04-09-2023)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வு 04-09-2023 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பயனாளிகளுக்கு தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொக்குத்தொடுவாய் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு, அளம்பில் தெற்கு, வடக்கு, செம்மலை கிழக்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த பயனாளிகளுக்கு குறித்த கடற்றொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் கண்காணிப்பு அலுவலர் சூ.செ.ஜான்சன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.குணபாலன், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





மேலும் குறித்த திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 172 பயனாளிகளுக்கு குறித்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை பெறுபேற்றில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் முதலிடம்

வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை பெறுபேற்றில் கணிதம் மற்றும் விஞ்ஞான பிரிவில் வவுனியா மாவட்ட மட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் முதலிடங்களை பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் கணித பிரிவில் நிசாந்தன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும், விஞ்ஞான பிரிவில் விதுவர்சன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளதுடன், வர்த்தக பிரிவில் நான்கு மாணவர்கள் 3 பாடங்களில் ஏ சித்தியை பெற்றுள்ளனர்.

இதேவேளை வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மாணவி கவிபிரியா ராம்குமார் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.



# 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் – விவசாயியின் மகன் முல்லைத்தீவில் முதலிடம்!

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின.

அந்தவகையில் முல்லைத்தீவு - மல்லாவி மத்திய கல்லூரியில் கல்வி கற்ற மாணவன் விஜயகுமார் மிதுசன் உயிரியல் பிரிவில் பரீட்சைக்கு தோற்றி மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்று சாதனை புரிந்துள்ளார்.

வெற்றியீட்டிய மாணவன் கருத்து தெரிவிக்கையில், எனது அப்பா விஜயகுமார். அம்மா சூரியகுமாரி. எனக்கு 5 சகோதரர்கள். எனது அப்பா ஒரு விவசாயி. வறுமையின் மத்தியில் மிகவும் கஷ்டப்பட்டு என்னை உயர்கல்வி கற்க வழிவகுத்தார்.

எனது இந்த வெற்றிக்கு எனது சகோதரர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர் என அனைவரும் உதவிபுரிந்தார்கள். முன்பள்ளியில் இருந்து என்னை கற்பித்த அனைவருக்கும் எனது நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

கடந்தகால வினாத்தாள்களையாம், மாதிரி வினாத்தாள்களையும் அதிகம் படித்து வெற்றியீட்டியுள்ளேன். நீண்டநேரம் கண்விழித்து படிப்பதை விட கடந்தகால வினாத்தாள்தளை கற்றே இலகுவாக வெற்றியீட்டினேன்.

எதிர்காலத்தில் நான் ஒரு சிறந்த மருத்துவராகி இந்த மல்லாவி பகுதி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என ஆசைபாபடுகின்றேன் என குறிப்பிட்டார். 27

# 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் – கணிதப் பிரிவில் முதலிடம் பிடித்து பெற்றோருக்கு பெருமை தேடித்தந்த சினேகன்!



வெளியாகிய கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பெறுபேற்றில் கணிதப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பிடித்து ஸ்ரீபண்டாகரன் சினேகன் சாதனை படைத்து பெற்றோருக்கும் கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்துள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கினை சேர்ந்த, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவனான சிநேகனே மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் கல்லூரியின் மேசைப்பந்து அணிவீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் பாதிக்கு மேற்பட்டோர் வறுமை வாடுகின்றனர்:

## ஐ.நா அபிவிருத்தி நிகழ்ச்சி நிகழ்ச்சித் திட்டம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

05-09-2023

இலங்கையில் 55.7% மக்கள் பல் பரிமாண குறியீட்டளவிற்கு அமைய வறுமையில் பலவீனமான நிலையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) இலங்கை தொடர்பிலான தனது ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

நாட்டில் அன்னளவாக பத்தில் ஆறுபேர் ஏதோ ஒரு வகையில் வறுமையின் பிடியில் இருப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது. 12 காரணிகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட இந்த ஆய்விற்கு அமைய, அவர்கள் குறைந்தது மூன்று அம்சங்களில் பலவீனமாக பின்னடைந்த நிலையில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் 12.34 மில்லியன் தனிநபர்களில் கணிசமான அளவில், அதாவது 10.13 மில்லியன் மக்கள் கிராமப்புறங்களில் வாழ்வதாக கூறும் அந்த அறிக்கை, அதிலும் குறிப்பாக அவர்கள் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் வாழ்வவதாக தரவுகளுடன் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக மலையக பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அதிகளவான பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிராமங்களில் காணப்படும் இந்த பல பரிமாண குறியீட்டிற்கு அமைய வறுமை அல்லது பாதிப்புகளுக்கு அடிப்படை காரணிகளாக கடன் சுமை, இயற்கை பேரழிவுகளை தாக்குபிடிக்க முடியாத நிலை மற்றும் நீராதாரங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஆகியவை காணப்படுகின்றன.

தேசிய அளவில் கடன் பிரச்சினை, இயற்கை பேரழிவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாத சூழலிற்கு அப்பால், பாடசாலைக்கு செல்லும் நாட்கள் ஆகியவை முக்கியமான காரணிகளாக காணப்படுவதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், அனைத்திலும் பார்க்க வீட்டுக்கடனே மிகப்பெரும் பலவீனம் அல்லது பாதிப்பாக உள்ளது.

நாட்டிலுள்ள மூவரில் ஒருவர் (33.4%) உணவு, வைத்திய பராமரிப்பு, கல்வி ஆகியவைகளுக்காக தம்மிடமிருக்கும் நகைகளை அடகு வைப்பது அல்லது விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதன் மூலம் அவர்கள் மேலும் பாதிப்படைந்து பலவீனமான நிலைக்குச் செல்கின்றனர் என்கிறது அந்த அறிக்கை.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடன் சுமைகள் மேலும் மோசமடைந்து வறுமை நிலை அதிகரித்துள்ளதாகவும், கடன்சுமை காரணிகளுக்கான தரவுகள் எடுத்துக்காட்டுவதாகவும் ஐ நா அறிக்கை கூறுகிறது.

இலங்கையில் சுமார் அரைவாசி மக்கள் இயற்கை பேரழிவை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் இல்லை. பருவநிலை மாற்றம் காரணமாக அவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகள் மிகவும் அதிகரித்துள்ளன. அவ்வகையில் இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்ள மக்கள் தயார் நிலையில் இல்லாததால், அது அவர்களை மேலும் பலவீனமானவர்களாக காட்டுகிறது.

ஆண், பெண் இருபாலர்களின் பாடசாலை ஆண்டுகளும் இந்த பல பரிமாண பாதிப்புக்கு மூன்றாவது முக்கிய காரணியாக உள்ளது. எனவே இருபாலர்களின் கல்வி மட்டங்கள் மேம்பட உடனடியாக முக்கியமான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகிறது எனவும் அந்த ஆய்வறிக்கையின் பரிந்துரையில் கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று அன்றாட பயன்பாட்டிற்கான நீரைப் பெற்றுக்கொள்வதில் 35.6மூ சிரமப்படுகின்றனர், எனவே அது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தப்பட்டு பரந்துபட்டளவில் மக்களுக்கு சிரமமின்றி நீர் ஆதாரங்கள் கிடைப்பதற்கு வழி செய்யப்பட வேண்டும் என்வும் பரிதுரைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, நுவரெலியா, புத்தளம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் மூவரில் இருவர் அல்லது மூன்றில் இரண்டு பங்கு மக்கள் இந்த பல பரிமாண குறியீட்டளவின்படி வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்படியான நெருக்கடிகளிலிருந்து அந்த மக்களை மீட்டெடுக்கவும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி அமைப்பு சில பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளது. மேலும் அரசாங்கத்தால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் நீண்டகால அடிப்படையில் நிலைத்திருக்க கூடியவைகளாக இருக்க வேண்டும் எனவும் அந்த பரிந்துரைகள் வலியுறுத்துகின்றன.

இலங்கை எதிர்காலத்தில் மேலும் பாதுகாப்பாகவும் நீடித்திருக்கும் ஸ்திரத்தன்மையும் கொண்ட நாடாக இருக்க வேண்டுமாயின், இந்த பிரச்சினையின் பன்முகத்தன்மை, அதிலுள்ள சிக்கல்கள் ஆகியவற்றை புரிந்துகொண்டு, அது தொடர்புடையவர்கள் மற்றும் பன்னாட்டு பங்குதாரர்கள் ஆகியவர்களுடன் இணைந்து செயற்பட்டு இலக்கு வைத்த வகையில் திட்டங்களும் உத்திகளும் வகுக்கப்படுவது அவசியமாகிறது என பரிந்துரைக்கும் அந்த அறிக்கை, அதன் மூலம் ஆபத்துக்களை குறைத்து, உறுதிப்பாட்டை அதிகரிக்க கூட்டு முயற்சி அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளது.


இசைச் செல்விகள் அமிர்தா முரளிதரன், ஆர்த்தி முரளிதரன்
வாய்ப்பாட்டு அரங்கேற்றம்
திரு. திருமதி முரளிதரன் தம்பதியின் அன்புச் செல்விகளும்
'கானாமிர்தம்' இசைக் கல்வி கூடத்தின் அதிபரும் குருவுமாகிய
ஸ்ரீமதி ஆதிரை சிவபாலன்-றொஷான்
அவர்களின் மாணவிகளுமான இசைச் செல்விகள்
அமிர்தா முரளிதரன், ஆர்த்தி முரளிதரன்
ஆகியோரின் இசையரங்கேற்றம்.
இடம்:
Richmond Hill Centre for the Performing Arts
10268 Yonge Street, Richmond Hill. Ont. L4C 3B7
காலம்:
09-09-2023 சனிக்கிழமை
மாலை 4.00 மணிக்கு
அன்பர்கள், நண்பர்கள், இசை ரசிகர்கள், ஆசிரியப் பெருந்தகைகள்
மற்றும் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
Refreshments from 4:00 PM to 5:00 PM.
Program commences at 5:00 PM.


www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
UTHAYAN CULTURAL SHOW - 2023
and 27th Year Celebration
tasty தமிழா
Presents
உதயன் பல்சுவைக் கலைவிழாவும்
விருது வழங்கலும்-2023
DATE: 15-10-2023 Sunday
TIME: 6:00 PM
VENUE:
Thamil Isai Kalaamanram of Ontario
1120 Tapscott Road #3
Scarborough, ON M1X 1E8
TICKETS
VIP $15
கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
வழங்கும் மெல்லிசை
இவ்வருடத்தின் சிறப்புப் பாடகராக
"பொன்னியின் செல்வன்" புகழ்
வி. எம். மகாலிங்கம் அவர்களும்
கனடியப் பாடக பாடகிகளும் மேடையை அலங்கரிப்பார்கள்
For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512

உங்கள் வீட்டை
புதுப்பிக்க
வேண்டுமா?

Coverall Group Inc

- Painting
- Bathrooms
- Kitchens
- Decks
- Flooring
- Basements
- Pot lights
- Accent Walls

Contact us 416.706.8160



Generously Sponsored by CN



செப்டம்பர் மாதம்
பிராம்ப்டன் மரங்களுக்கான மாதமாகும்!

பிராம்ப்டன் மரங்களைப் போற்றிக் கொண்டாட கீழ்கண்டவாறு எங்களுடன் இணையுங்கள்:

- மரங்கள் வளர்ப்பதற்கான முன்னெடுப்புக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றி அறிந்து கொள்ளுதல்
- நாள் குறிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளில் பங்கேற்றல்
- குடியிருப்பாளர்களுக்கு மரக்கன்று கொடுத்தல் நிகழ்வின் ஒரு அங்கமாக மரக்கன்று ஒன்றைப் பெறுதல்
- புகைப்படப் போட்டியில் பங்கேற்றல் (ஒரு பரிசினை வெல்வதற்கான வாய்ப்பு பெற)

உங்களுக்குப் பிடித்தமான ஒரு மரத்தைப் புகைப்படம் எடுத்து **#BramptonTrees** மூலமாக சமூக ஊடகங்களில் பகிருங்கள்

**www.brampton.ca/treemonth**
இல் மேலும் அறிந்துகொள்ளுங்கள்

BRAMPTON



ARABI PRODUCTIONS
RAGEEF SUBRAMANIAM PRESENTS
FINDER

Bhairavi MUSIC ACADEMY

ஆரபி படைப்பகம் ஆதரவில்
தமிழ்நாடு "இசைக் கவி" ரமணன் வழங்கும்
இசையும் உரையும் கலந்த

'பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி'

சொற்பொழிவு



இடம்:

கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபம்
733 Birchmount Rd., Scarborough, ON M1K 1R5

காலம்:

09-09-2023 சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு



கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான பைரவி குழுவினர் வழங்கும்
பின்னணி இசையில் பாடக பாடகிகள் இனிதான்
பாரதியார் பாடல்களை மேடையில் வழங்குவார்கள்.
அதனைத் தொடர்ந்து இசைக்கவி ரமணன் அவர்களின் உரை இடம்பெறும்.

மேலதிக விபரங்களுக்கு:

(647) 762-9512 அல்லது (647) 891-7725

ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

TICKETS
VIP
$15

Hindu Temple Society of Canada

# விநாயகர் சதுர்த்தி பெருவிழா விஞ்ஞாபனம்

**18.09.2023**
**திங்கட்கிழமை**



**1008 சங்காபிஷேகம்**
**காலை 7:00 மணி**

மெய்யடியார்களே!

எல்லாம் வல்ல றிச்மண்ட்ஹில் விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் புரட்டாதி 2ம் நாள் (18.09.2023) திங்கட்கிழமை அன்று விநாயகர் சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு காலை 7:00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

காலை 7:00 மணி - சங்காபிஷேகம் ஆரம்பம்

காலை 10:00 மணி - மூலவர் பூஜை, பஞ்சமுக அர்ச்சனை

மாலை 5:00 மணி - நவகலச அபிஷேகம்

மாலை 7:00 மணி - மூலவர் பூஜை

மாலை 8:00 மணி - வசந்தமண்டப பூஜை, பஞ்சமுக விநாயகர் உள், வெளி வீதி உலா.

| | |
|---|---|
| பால் அபிஷேகம் } மோதகப் பூஜை | - $ 101.00 |
| பஞ்சமுக அர்ச்சனை | - $ 25.00 |
| அறுகம்புல் அர்ச்சனை | - $ 25.00 |
| பால் அபிஷேகம் | - $ 61.00 |
| பால் குடம் | - $ 25.00 |

மேற்படி நிகழ்வுகளில் பங்குபெற விரும்புவோர் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்யவும்

- சுபம் -

ஆலய நிர்வாகம்

10865 Bayview Avenue, Richmond Hill, Ontario L4S 1M1 Canada
**Tel: 905 883 9109 Fax: 905 883 9834**
www.rhht.ca e-mail:service@rhht.ca

குவாலிற்றி பிறின்ரிங் 416.281.6554

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்:
12 - 08 - 1924

ஆண்டவன் அடியில்:
11 - 08 - 2023

## திருமதி. கந்தசாமி செல்லம்மா

அவர்கள்

(வாதரவத்தை, புத்தூர்) ~ (திதி : ஏகாதசி)

எமது குடும்பத்தின் பாசத்தலைவியாய்
திகழ்ந்த எங்கள் அன்புத்தெய்வமே

எங்களின் வழிகாட்டியாய் வாழ்ந்து
அன்பையும் அரவணைப்பையும் தந்து
எம் ஆளாக்கிய எங்கள் அன்னையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை வேண்டி நிற்கின்றோம்

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில்
நேரில் வந்தும், தொலைபேசியூடகவும், மின்னஞ்சல்,
முகநூல்,RIP BOOK மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும்,
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
மலர் வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும், உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்

ஊழிற் பெருவலி யாவுள மற்று ஒன்று
சூழினுந் தான்முந் துறும்

விதியைப் போல் வலிவுள்ள ஒரு பொருள் உலகில் வேறு இல்லை.
அவ்விதி மனிதனுடைய முயற்சிகளையெல்லாம் அழித்து தான் ஒன்றே முடிவில் வெல்கிறது

இங்ஙனம்:
குடும்பத்தினர்



YOU ARE INVITED TO
Grand
OPENING
Ceremony of
Latika Gold House
20TH OCTOBER - 2023
Unit 37-35 Karachi Drive, (New Delhi Plaza) Markham, ON
(Markham Costco விற்கு அருகாமையில்)

Majestic City யில் அமைந்துள்ள Latika Gold House இன் Anniversary ஐ முன்னிட்டு $5000 க்கு மேல் தங்கநகை வாங்குபவர்கள் 21 & 22 ம் திகதி நடக்கவிருக்கும் இசை வெள்ளம் நிகழ்ச்சிக்கான VIP Ticket ஒன்றினை பெற்றுக் கொள்ளலாம்.

www.latikagoldhouse.ca Tel:- 416 423 7555 Cell:- 647 996 5922

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வசாவிளான் சுதந்திரபுரம் பகுதியில் மின் கசிவினால் வீடு முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது

பு. கஜிந்தன்



தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வசாவிளான் சுதந்திரபுரம் பகுதியில் வீடொன்று மின் கசிவினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் இருந்த இளம் குடும்பப் பெண்ணுக்கு கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆண் குழந்தை ஒன்று கிடைத்துள்ளது.

இதனால் அயல் வீட்டில் இருந்து வயர் ஊடாக மின்சார இணைப்பினை பெற்றுள்ளனர்.





வீட்டில் யாரும் இல்லாத நேரம் திடீர் மின்கசிவு ஏற்பட்டுள்ளது. அயலவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்த பொழுதும் வீடு முற்றாக எரிந்து நாசமாகி உள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மின் கசிவு தொடர்பான தடயவியல் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

# சீன நாட்டு முதலீட்டாளர்களுக்கும் அமைச்சர் டக்ளஸூக்கும் இடையே சந்திப்பு!



சீன நாட்டு முதலீட்டாளர்கள் குழுவினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை சந்தித்து தாம் கடற்றொழில் துறையில் முதலீடுகளைச் செய்வதற்கும், தமது படகுகளைக் கொண்டு பிடிக்கும் மீன்களை தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு விரும்புவதாகவும் தெரிவித்தனர்.

தமக்கான அனுமதிகளை கடற்றொழில் அமைச்சு வழங்குமாக இருந்தால் இத்துறையில் பாரிய முதலீடுகளை செய்வதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தமது திட்டவரைபை தமக்கு கிடைக்கச்செய்தால் அதுதொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த மற்றும் அமைச்சின் செயலாளரும் கலந்து கொண்டனர்.



# இலங்கை மூன்றாவது தேசிய படையணியின் ஸ்ரார் சார்ஜன் பீ.பீ.ரத்ன உலக சாதனை ஒன்றை நிகழ்த்துவதற்காகடை பயணம்!

இலங்கை மூன்றாவது தேசிய படையணியின் ஸ்ரார் சார்ஜன் பீ.பீ.ரத்ன உலக சாதனை ஒன்றை நிகழத்துவதற்காகவும், நாட்டிற்காக அற்பணித்த அனைத்து நல்லுள்ளங்களை நினைவு கூருவதற்காகவும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை சக்கோட்டை முனையிலிருந்து தெய்வேந்திரம் முனை வரை நடை பயணம் ஒன்று ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக மத அனுஸ்டானங்கள் இடம் பெற்றதை தொடர்ந்து 52 வது படை பிரிவு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யகம்பத் ஆரம்பித்துவைத்தார்.

தினமும் 60 km வரை நடைபயணத்தில் ஈடபடவுள்ளார்.





# ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்



ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் (Marc-André Franche) யாழ்ப்பாண மாவட்டத்திற்கு திங்கட்கிழமை விஜயம் செய்ததுடன் செவ்வாய்க்கிழமை பல்வேறுபட்ட சந்திப்பில் ஈடுபட்டார்.

ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதிக்கும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரனுக்கும் இடையிலான யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பான விரிவான கலந்துரையாடல் 05-09-2023 அன்று காலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.





இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவை சந்தித்தார்.

யாழ்ப்பாணப் கோட்டைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அங்கிருந்து யாழ்ப்பாண நகரத்தின் அழகை பார்வையிட்டார்.

# உலகப்புகழ்பெற்ற FAST FOOD வர்த்தக உணவகங்களில் பணி புரிவதற்கான பயிற்சிகள் யாழ்ப்பாணம் காரைநகரில் ஆரம்பம்




உலகப்புகழ்பெற்ற FAST FOOD விரைவுச் சேவை வர்த்தக உணவகங்களில் பணிக்கு அமர்த்தக்கூடிய வகையில் மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக கற்கைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காரைநகரில் இயங்கிவரும் தொழில்பயிற்சி நிலையத்தில் இதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன், பயிற்சியை மேற்கொள்ளத் தேவையான முழுமையான சமயலறை வசதிகள் பீட்சா ஹட் நிறுவனத்தின் அனுசரணையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



இதன் அங்குரார்ப்பண வைபவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில், தொழில் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பீட்சா ஹட், யு-லீட் மற்றும் சேவாலங்கா ஆகியவற்றின் பிரதிநிதிகள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

காரைநகர் தொழில் பயிற்சி நிலையத்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கைநெறி முழு அளவில் இடம்பெறுவதுடன், அதனுடன் இணைந்ததாக விரைவு சேவை உணவக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இங்கு பயின்ற பலர் யாழில் முன்னணி ஹோட்டல்கள் உட்பட பல உணவகங்களில் வேலை செய்கின்றனர். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விரைவு சேவை உணவக பயிற்சிகள் மேலும் பலருக்கு ஹோட்டல் முகாமைத்துவ துறையில் வேலைவாய்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

16 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் இந்த கற்கைநெறியைத் தொடர விரும்பின் காரைநகரில் அமைந்துள்ள தொழில்பயிற்சி நிலையத்துடன், தொடர்புகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# நல்லூர் ஆலய வளாகத்தில் அத்துமீறி வாகனத்தை நிறுத்திய தென்னிலங்கையைச் சேர்ந்தவரால் பரபரப்பு!





யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பொலிஸ் உயர் அதிகாரியின் சகோதரர் எனக் கூறிக் கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் தடுப்பு வேலிகளையும் தாண்டி ஆலய வளாகத்தினுள் தனது வாகனத்தை அடாத்தாக நிறுத்தியதால் ஆலயச்சூழலில் பரபரப்பு ஏற்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினுடைய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி உள்ள நிலையில் ஆலய சுற்று வீதியில் வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதோடு சிவப்பு வெள்ளை வேலிகளுக்குள் எவ்வித வாகனங்களும் அனுமதிக்காதவாறு பாதுகாப்பு தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று மதியம் பொலிஸ் உயர் அதிகாரியின் சகோதரர் எனக் கூறிக் கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த நபர் சிவப்பு வெள்ளை கொடிகள் கட்டப்பட்ட தடுப்பு வேலிகளையும் தாண்டி ஆலய முன்றலில் பக்தர்கள் பிரதட்டை அடிக்கக்கும் மணல்மேல் தனது காரை நிறுத்தியுள்ளார்.

ஆலய சூழலில் கடமையில் இருந்த யாழ்ப்பாணம் மாநகர சபையினுடைய பணியாளர்கள் குறித்த காரினை அகற்ற முற்பட்டபோதும் அங்கு கடமையில் இருந்த பொலீசார் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து மாநகரசபை பணியாளர்களையும் மீறி குறித்த காரினை நிறுத்த அனுமதித்துள்ளனர்.

மேலும் தென்னிலங்கையைச் சேர்ந்த குறித்த நபர் சிவப்பு வெள்ளைக் கொடி கட்டப்பட்ட ஆலய வளாகத்தில் பாதணியுடன் நடமாடியதாக நேரில் கண்ட பக்தர்கள் தெரிவித்தனர்.

இதனை அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்ப்பாண மாநகரசபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன், குறித்த வாகனத்தை ஆலய வளாகத்தில் நிறுத்த அனுமதித்த பொலிஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இவ்விடத்தில் வாகனத்தைவிட் எதற்காக அனுமதித்திர்கள் என வினாவியபோது "அவர் IG இன் சகோதரர் அவரை எப்படி நாம் மறிப்பது" என அங்கு கடமையில் நின்ற பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அங்கிருந்த பொலிஸார் சென்று குறித்த தென்னிலங்கைவாசியை அழைத்துவந்தார். அதனைத்தொடர்ந்து குறித்த தென்னிலங்கையைச் சேர்ந்தவர் உடனடியாக தமது வாகனத்தை அப்புறப்படுத்தினார்.

பக்தர்கள் அங்க பிரதிஸ்டை செய்கின்ற மணல்மேல் காரை நிறுத்தியமையை ஏற்கமுடியாது என ஆலயச் சூழலில் நின்ற பக்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மன்னாரில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் அன்ரனி சரோன் டயஸ் முதல் இடம்







04.09.2023

மன்னார் மாவட்டத்தில் 2022 ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் அன்ரனி சரோன் டயஸ் மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 801 ஆம் இடத்தையும் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த அன்ரனி சரோன் டயஸ் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களிலும் 3A தர சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதல் இடத்தை பெற்றுள்ளார்.

# கணிதப் பிரிவில் மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவன் தியாகன் தேவகரன் முதலிடம்

- மன்னார் நிருபர்
(5-09-2023)





2022 (2023) க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியிருந்தது.

அதனடிப்படையில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவன் தியாகன் தேவகரன் 3A சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

முதலிடம் பெற்ற மாணவன் தேவகரன் அவர்கள் அடம்பன் வண்ணாகுளத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

பாடசாலையில் ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் பண்புள்ள மாணவனாக கல்வி கற்று பாடசாலைக்கும் மடு கல்வி வலயத்திற்கும் பெருமை தேடி தந்துள்ளார்.

மேலும் அவரது உயர்வுக்கு பெற்றோர்களின் ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள் மிக முக்கிய காரணமாக இருந்துள்ளது என்று பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்தார்கள்.



# வவுனியா மாவட்டத்தில் விஞ்ஞான பிரிவில் வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரி மாணவி 02ம் இடம்!

வவுனியா மாவட்டத்தில் விஞ்ஞான பிரிவில் வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரி மாணவி கோணேஸ்வரன் மோகனபிரதா இரண்டாம் இடம்பெற்றுள்ளார்.

கடந்த 2022 (2023) ஆண்டுக்கான க.பொ.த உயர் தரப் பரீட்சைப் பெறுகள் 04-09-2023 மாலை வெளியாகின.

குறித்த பெறுபேற்றின் அடிப்படையில் வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரி மாணவி கோணேஸ்வரன் மோகனபிரதா விஞ்ஞான பிரிவில் 03 ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும், அகில இலங்கையில் 68வது இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை வெளியான உயர்தர பரீட்சை முடிவுகளில் சைவப்பிரகாச மகளீர் கல்லூரி விஞ்ஞான பிரிவில் மூவரும், கணித பிரிவில் இருவரும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளதுடன் வர்த்தக பிரிவில் பண்ணிரெண்டு பேரும், கலைப்பிரிவில் இருபத்தியொரு பேரும் ஏனைய பிரிவுகளில் ஆறு மாணவர்களும் பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகள் தாமதம்!



(5-09-2023)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் பகுதியில் இனம் காணப்பட்ட மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் 05-09-2023 அன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்ட நிலையில் அகழ்வு செய்வதற்காக தொல்பொருள் திணைக்களம் இணக்கம் கண்டு அதற்கான பாதீடுகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான நிதியினை இலங்கை அரசாங்கத்தின் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் ஜனாதிபதி செயலகம் ஊடாக நிதியை விடுவித்து கொடுத்துள்ளது.

இதற்கான நிதி கையாளல்களை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் நிர்வகிக்கும் நிலையில் அறிவிக்கப்பட்ட திகதியான 0509-2023 மனித புதைகுழி அகழ்வு முன்னெடுக்கப்படவில்லை.





இந்த நிலையில் இன்று குறித்த பகுதிக்கு திணைக்கள அதிகாரிகள் விஜயம் மேற்கொண்டுள்ள துடன் இது தொடர்பான அறிவிப்பினை முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவ் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் ஏற்பட்ட வானிலை சீரின்மை காரணமாக முன்னெடுக்கப்படவில்லை என்றும் 06-09-2023 காலை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பொலீசார், சட்ட வைத்திய அதிகாரிகள், தொல்பொருள் திணைக்களத்தினை சேர்ந்தவர்கள், தொல்பொருள் பேராசிரியர்கள், ஆகியோர் முன்னிலையில் அகழ்வு பணிகள் நாளை முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் – மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி!

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகின. அந்தவகையில் யாழ்ப்பாணம் வேம்டி மகளிர் கல்லூரி மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.

24 மாணவிகள் 3 ஏ சித்திகளை பெற்றுள்ளார்கள். 24 மாணவிகள் 2ஏ பி சித்திகளை பெற்றுள்ளார்கள். 14 மாணவிகள் 2ஏ சி சித்திகளை பெற்றுள்ளார்கள். ஒரு மாணவி 2ஏ எஸ் சித்தியை பெற்றுள்ளார். 15 மாணவிகள் ஏ 2பி சித்திகளை பெற்றுள்ளார்கள். 24 மாணவிகள் ஏ பி சி சித்திகளை பெற்றுள்ளனர்.


விலா கருணா பெரியோர் இல்லம் வழங்கும்
சந்தியாராகம் - 2023
GOLDEN
Super Singer
SEASON 5 GRAND FINALE
HELPING HANDS SENIOR CARE VILLA KARUNA
CREATIVE HEAD
16
SEP 2023
AT 4:30PM
THAMIL ISAI KALAAMANRAM
1120 Tapscott Rd.,Unit#3 Scarborough,ON, M1X 1E8
Music by
The WIND
Nothing but music !
Main sponsors
RAMACHANDRAN LAW Professional Corporation
Lucvaa KITCHENS
FUNERAL SERVICE
Chapel Ridge
CHRISTEEN SEEVARATNAM
Licensed Funeral Preplanner
416-258-6759
COMPUTEK COLLEGE
Trinity Enterprise
Event sponsors
Middlefield & Steeles
AKT
SUGSHE GROUP OF COMPANIES
Millennium Boutique
Fashion WORLD INC
Liberty@Kennedy Tax Office
Nallur Kumaran Inc.
opti-mart
Family Owned & Operated Since 1988
REVITALEYES
Dr. Mathuraa Sasitharan
SANTHA
ERAA
PASUMAI
KIRUBA GANESH
SPC
Finalists gift sponsors
Guna Ponnampalam
TAKE CONTROL OF YOUR BUSINESS
ARI A. ARIARAN
Dr. Sarah Antony
BHSc, BMBS, CCFP
Family Medicine Physician
Enhanced Skills in Obstetrics
MAHALALUXMI GOLD HOUSE
DURHAM
VJ Krish
416.984.9436
ABBA
ABBA Maintenance Services Ltd.
(Baba) Soma Kanagarasa
Email: abbams@bellnet.ca 92 Eastvale Drive Markham, Ontario L3S 4S2
ISAIYA JEWELLERS
Esa Para Esananda
MEDIA SPONSORS
எழுத்தாய் eet TV 24 HOURS TAMIL TELEVISION
தமிழ் Mirror
www.tamilmirror.lk
timeFM
east FM 102.7
உதயன்
www.uthayannews.ca
cmr
தமிழ் பண்பலை
101.3 FM & HD1
tamilsguide
செந்தாமரை Senthamarai
Krishna LIVE TELECAST
yugam radio
TICKETS $50
Dinner provided
FOR TICKET / MORE INFORMATION:
KIRUBA : 416 564 4366 / INDU/PARA: 416 282 4535 INDRANI : 416 200 6971

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எமது மகளான வைசாலியின், இடது கைகையை அகற்றியமைக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் — பெற்றோரால் கோரப்பட்டுள்ளது

பு. கஜிந்தன்

**எதிர்காலத்தில் இவ்வாறான மருத்துவ நிராகரிப்புக்களினால் உயிர் இழப்புக்கள் அவய இழப்புக்கள் ஏற்படா வண்ணம் எங்களுடைய சமூகத்தை பாதுகாக்கும்படி பாதிக்கப்பட்ட எங்களது குழந்தையின் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.**

எட்டு வயதான சிறுமியின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பெற்றோரால் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன் கடிதத்தின் பிரதிகளை சுகாதார அமைச்சு, வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட தரப்புகளுக்கும் அனுப்பபட்டுள்ளது.

அக்கடிதத்தில், எமது மகளான எட்டு வயதுடைய சாண்டில்யன் வைசாலியின், இடது கை மருத்துவ நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தனின் குழந்தைநல விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றபோது 12ஆம் விடுதியைச் சேர்ந்த வைத்திய நிபுணர், வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் வேண்டுமென்ற பிழையான செயலின் விளைவாக அதாவது 02.09.2023 ஆம் திகதியன்று மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

இது தொடர்பான விரிவான விடயங்கள் பின்வருமாறு:

எமது மகளான சாண்டில்யன் வைசாலிக்கு காய்ச்சல் ஏற்பட்டதன் காரணமாக நாம் எமது குழந்தையை வண்ணை மேற்கு வைத்தியசாலையில் (கெங்காதரன் ர்ழளிவையட) இல் 23.08.2023 அன்று வைத்திய ஆலோசனைக்காக குழந்தை நலமருத்துவ நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தனிடம் காட்டினோம்.

காய்ச்சல் குறையாமையினால் 24.08.2023 அன்றும் வண்ணை மேற்கு வைத்தியசாலையில் (கெங்காதரன் Hospital) இல் வைத்திய ஆலோசனைக்காக குழந்தையைக் காட்டினோம்.

அங்கு வழங்கப்பட்ட ஆலோசனையின்படி; தனியார் வைத்தியசாலையான Northern Hospital இல் 24.08.2023 ஆம் திகதியன்று குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தன் அவர்களின் சிகிச்சைக்காக Northern Hospital இன் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

24.08.2023 மற்றும் 25.08.2023 ஆகிய இரு நாட்களும் அங்கு தங்கி சிகிச்சை பெற்ற பின்னர் நோய்நிலையின் தன்மை அதிகரித்தமையாலும் கூடுதல் பராமரிப்புக்காகவும் குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தன் அவர்களின் ஆலோசனையின் பேரில் 25.08.2023 ஆம் திகதியன்று இரவு எமது மகள் Northern Hospital இலிருந்து மாற்றப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தன் அவர்களுக்குரிய 12ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

தனியார் வைத்தியசாலையிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டமை குழந்தைவைத்திய நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தன் அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே நடைபெற்றது.

Northern Hospital இல் Canula வைசாலியின் வலது கையில் மணிக்கட்டின் வெளிப்புறத்தில் இடப்பட்டு குறித்த Canula ஊடாக மருந்து ஏற்றப்பட்டிருந்தது. Northern Hospital இல் Canula வலது கையில் இடப்பட்டிருக்கையிலும் மருந்து ஏற்றப்பட்டபோதும் எவ்வித பிரச்சனையும் இருக்கவில்லை.

இதன்பின்னர் யாழ் போதனா வைத்தியசாலை 12ஆம் விடுதியில் வைத்து வெள்ளிக்கிழமை இரவு Northern Hospital இல் போடப்பட்ட Canula ஊடாகவே மருந்து ஏற்றப்பட்டது. பின்னர் அடுத்த நாள் 26.08.2023 ஆம் திகதி சனிக்கிழமை காலை அவருக்கு இடது கையின் மணிக்கட்டின் உட்பகுதியில் canula பொருத்தப்பட்டது.

Canula மூடியை திறந்து மருந்து ஏற்ற முயற்சித்த ஒவ்வொரு வேளையிலும் இரத்தம் பாய்ந்து நிலத்தில் சிதறியது. இது தொடர்பில் தாயாரான எனக்கு சந்தேகம் இருந்தமையினால் கடமையில் இருந்த வைத்தியரிடம் (HO) இதைக்கூறிய போது அது வழமை என எனக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

சனிக்கிழமை காலையிலிருந்து ளுயடைநெ இல் மருந்து கலக்கப்பட்டு குறித்த இடது கையில் போடப்பட்ட Canula வழியாக ஏற்றப்பட்டு வந்தது.

இதன்பின்னர் 27.08.2023 ஆம் திகதியன்று அதாவது ஞாயிற்றுக்கிழமை எமது மகள் உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இரவு 12.00 மணிக்குச் செலுத்தப்படவேண்டிய Clindamycin என்ற மருந்தினை குறித்த 12 ஆம் விடுதியைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர்

ஒருவர் இரவு 11.45 மணிக்கு Saline உடன் கலக்காது ஊசி மூலம் Canula இனுள் நேரடியாக செலுத்தினார்.

மேற்குறித்தவாறு மருந்து நேரடியாக Canula ஊடாக ஏற்றப்பட்டவுடன் உறங்கிக் கொண்டிருந்த எமது மகள் விழித்து எழுந்து வலியால் துடிக்கத் தொடங்கினார். இதனையடுத்து மகளுடன் இருந்த நான் (சாண்டில்யன் சர்மிளா) அங்கு கடமையிலிருந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவரிடம் இது குறித்து தெரிவித்தேன். அவர் Antibiotic மருந்தின் தன்மையால் அப்படித்தான் இருக்கும் என்று கூறிவிட்டார்.

தொடர்ந்தும் மகள் வலியால் துடித்தவண்ணம் இருந்ததால் மீண்டும் நான் விடுதியிலுள்ள தாதியர் நிலையத்துக்குச் சென்று அறிவித்ததையிட்டு முதலில் நான் கூறிய தாதிய உத்தியோகத்தரும் மருந்தினை ஏற்றிய தாதிய உத்தியோகத்தரும் வந்து மகளைப் பார்வையிட்டனர்.

இரு தாதிய உத்தியோகத்தர்களும் இணைந்து தனியே Saline மட்டும் Canula ஊடாக ஏற்ற முயற்சித்த போதும் வெறும் Saline இனைக் கூட அந்தக்கையில் போடப்பட்ட Canula ஊடாக ஏற்ற முடியவில்லை.

இதனையடுத்து 28.08.2023 ஆம் திகதியன்று அதிகாலை 4.00 மணியளவில் வைத்திய அதிகாரியும் தாதிய உத்தியோகத்தர்களும் வந்து பார்வையிட்டு குறித்த இடதுகையில் போடப்பட்ட Canula அகற்றப்பட்டது.

7.30 மணியளவில் Ward Round வந்த பெண் வைத்திய அதிகாரி ஒருவர் பிள்ளையின் கைவீக்கத்தை பார்த்து விட்டு பிள்ளையின் கையில் Mopping கொடுத்தார். பின்னர் காலை 10.00 மணியளவில் குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தன் அவர்கள் வந்து குளிர்ந்து நீலம் பாரித்து இருந்த கையினைபார்வையிட்டுச் சென்றார்.

இதனையடுத்து மீள வருகை தந்த குழந்தைநல வைத்திய நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தன் அவர்கள் குழந்தையின் அருகாமையிலிருந்தே உடனடியாக தொலைபேசியூடாக கதைத்ததையடுத்து வைத்திய நிபுணர் திரு. மதிவாணன் அவர்கள் வந்து கையினை பரிசோதித்து கையில் நாடித்துடிப்பு இல்லை என்பதையும் கையில் இரத்த ஓட்டத்தில் ஒட்சிசன் இல்லை என்பதையும் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தி CT Scan பரிசோதனைக்காக உத்தரவிட்டார்.

இதனையடுத்து அன்றைய தினம் அதாவது 28.08.2023 ஆம் திகதியன்று மதியம் CT Scan பரிசோதனை செய்யப்பட்டது. மீண்டும் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எடுக்கப்பட்டு இடது கையில் ஏற்படும் அதீத வலியைக் கட்டுப்படுத்துவதற்காக உணர்விழக்கச் செய்யும் ஊசி கையில் ஏற்றப்பட்டதாக கூறப்பட்டது.



அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு மீண்டும் சத்திரசிகிச்சைக் எடுக்கப்பட்டு கையில் அழுத்தத்தைக் குறைப்பதற்காக இழையத்தை வெட்டிச் செய்யப்படும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

இதன்போது கையில் இரத்தகட்டி உருவாகியுள்ளதாகவும், கையில் இதன்காரணமாக இரத்தோட்டம் தடைப்பட்டிருப்பதாகவும் இந்த சத்திரசிகிச்சை செய்யப்படவிருப்பதாக கூறப்பட்டது.

இரத்தக்கட்டியை கரைக்கும் Heparin எனப்படும் மருந்தும் தொடர்ச்சியாக ஏற்றப்படவிருப்பதாக வைத்திய நிபுணரால் தெரியப்படுத்தப்பட்டது. குறித்த சத்திரசிகிச்சையின் பின்னர் எமது மகள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை 29.08.2023 ஆம் திகதியன்று மதியம் மீளவும் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எடுக்கப்பட்டு இரத்தக்கட்டியைக் கரைப்பதற்கான சத்திரசிகிச்சை செய்யப்பட்டு தொடர்ந்தும்ர்நியசநை ஏற்றப்பட்டு வந்தது.

தொடர்ந்தும் அடுத்து வந்த இரு நாட்களுக்கு அதாவது 30.08.2023 மற்றும் 31.08.2023 அதாவது புதனும் வியாழனும் மருந்து ஏற்றப்பட்டு வந்தது. ஆயினும் இந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை என்பதோடு மகளின் கை பழைய நிலைக்குத் திரும்பவில்லை. மாறாக கையின் கறுப்பு நிறம் அதிகரித்துக் கொண்டு சென்றதோடுதொடர்ந்தும் குளிர்ந்த நிலையில் காணப்பட்டது.

01.09.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கு வருகை தந்த பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணரால் மேலதிக கிருமித்தொற்று நிலையையும் உயிராபத்தையும் தடுக்க எமது மகளின் இடது கை மணிக்கட்டுக்குக் கீழான பகுதி அகற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இதன்பிரகாரம் அடுத்த நாள் 02.09.2023 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில்சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எமது மகள் எடுக்கப்பட்டு இடது கை மணிக்கட்டின் கீழான பகுதிமுற்றாக அகற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எமது மகள் இன்னமும் அதிதீவிர சிசிக்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பில் பின்வரும் விடயங்களை தங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

1. எமது மகள் வைசாலி காய்ச்சல் காரணமாகவே விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

2. காய்ச்சலுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை தவறான முறையிலும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமலும் வழங்கப்பட்டுள்ளது.

3. Cannula வைத்தியரால் போடப்பட்டிருக்கவில்லை. தாதிய உத்தியோகத்தராலேயே குறித்த Cannula போடப்பட்டது.

4. அவ்வாறு தாதிய உத்தியோகத்தரால் போடப்பட்ட குறித்த Cannula சரியான முறையில் போடப்பட்டிருக்கவில்லை.

5. மருந்து உரிய முறையில் உட்செலுத்தப்படவில்லை. Saline உடன் கலந்து ஏற்றப்படவேண்டிய மருந்து Cannula ஊடாக நேரடியாக உட்செலுத்தப்பட்டது.

6. மருந்து அவ்வாறு நேரடியாக உட்செலுத்தப்பட்டதும் ஏற்பட்ட வலி மற்றும் தாக்கங்கள் குறித்து உடனடியாக தாயாரால் தாதிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் பாரதூரமான அலட்சியத்தாலும் கவனக்குறைவாலும் குறித்த கையின் நிலை குறித்து உடனடியாக கவனத்தில் எடுக்கப்படாமை, உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கபடாமை மேற்குறித்த நடவடிக்கைகள் மூலம் எமது எட்டு வயதான மகளின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டு எமது மகளின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குட்படுத்தப்பட்டு சவாலானாக மாற்றப்பட்டுள்ளது.

இது எமக்கும் எமது மகளுக்கும் நிரந்தர சேதத்தை உண்டுபண்ணியதோடு ஈடுசெய்யமுடியாத இழப்பு நேர்ந்துள்ளது. எமது மகளின் இந்நிலைக்கு 12ஆம் விடுதியின் தாதிய உத்தியோகத்தர்களும் வைத்தியர்களும் வைத்திய நிபுணரும் வைத்தியசாலை நிர்வாகமுமே காரணமாகும்.

குறித்த 12 ஆம் விடுதியில் சம்பவம் நடைபெற்ற போது உத்தியோகபூர்வமாக கடமையில் இருந்த House Officer, Senior House Officer குறித்த விடுதிக்கு பொறுப்பான குழந்தைநில வைத்திய சிகிச்சை நிபுணர் திரு. N.S. சரவணபவானந்தன், வைத்திய சாலை பணிப்பாளரான தாங்கள் என அனைவரும் பொறுப்புக்கூற வேண்டிய கடமைவாய்ந்த உத்தியோகத்தர் ஆவர்.

எனவே எமது மகளுக்கு நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக குறித்த தாதிய உத்தியோகத்தரை பணிநீக்கம் செய்ய வேண்டும் எனவும், குறித்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், விடுதிக்குப் பொறுப்பான வைத்திய சிகிச்சை நிபுணர் அனைவருக்கும் எதிராக உரிய விசாரணைக்கு உத்தரவிடப்படுவதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

பிள்ளைக்கு ஏற்பட்ட உடல் உளரீதியான மீள முடியாத தாக்கத்திற்காகவும் எமக்கும் எமது குடும்பத்திற்கும் ஏற்பட்ட மீள முடியாத தாக்கத்திற்காகவும் தங்களிடமிருந்து நீதியான விசாரணையையும் நியாயமான தீர்ப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

விசாரணை முடிவில் குறித்த சம்பவத்துக்கான (கை அகற்றப்பட்டதற்கான) சரியான மருத்துவ காரணத்தையும் எழுத்து மூலம் அறியத்தர வேண்டும் எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான மருத்துவ நிராகரிப்புக்களினால் உயிர் இழப்புக்கள் அவய இழப்புக்கள் ஏற்படா வண்ணம் எங்களுடைய சமூகத்தை பாதுகாக்கும்படி பாதிக்கப்பட்ட எங்களது குழந்தையின் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள குற்றவியல் மற்றும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளை மட்டுப்படுத்தாமலும், அதற்கு பங்கம் ஏற்படாதவாறும் இக்கடிதம் அனுப்பப்படுகிறது - என்றுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடமாகாண மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு ஐ.நா அமைப்பு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் — ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர்

பு. கஜிந்தன்

வடமாகாண மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் பூரண ஆதரவை வழங்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிட இணைப்பாளர் திரு மார்க் அன்றூ பிரான்ச் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் அன்றாட செயற்பாடுகள் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், மக்களின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்புகளை ஒழுங்கமைக்க ஐக்கிய நாடுகள் சபை பூரண ஆதரவை வழங்கும் எனவும் திரு. மார்க் அன்றூ பிரான்ச் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். திருமதி சார்ள்ஸ் அவர்களை 05.06.2023 மாலை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.





வடமாகாணத்தின் சமூக, பொருளாதார மற்றும் நல்வாழ்வு தொடர்பில் திருப்திகரமான போக்கு காணப்படுவதாகவும், எதிர்காலத்தில் இந்த செயற்பாடுகளின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதே ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிகழ்வுகள் குறித்து அவருக்கு விளக்கமளித்ததுடன், முப்பது வருடகால யுத்தத்தினால் பாதிப்புக்கு உள்ளாகி வாழ்ந்த வடபகுதி மக்கள் தற்போது சாதகமான நிலையை அடைந்து வருவதாகவும் இக்கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

வளர்ச்சியின் இலக்குகளை நோக்கி, அந்த அடித்தளத்தை வலுப்படுத்த எதிர்காலத்தில் சிறந்த ஆதரவை வழங்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் திரு. சமன் பந்துல உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீ பொன்னலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் இரதோற்சவம்





வரலாற்றுச்சிறப்புமிக்க ஸ்ரீ பொன்னலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் இரதோற்சவம் 6ம் திகதி பக்திபூர்வமாக இடம்பெற்றது.

மாயவன், ஸ்ரீதேவி, பூமாதேவி ஆகியோர்களுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, தேரேறி வெளிவீதியில் உலா வந்து கிருஷ்ண பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இந்த உற்சவத்தில் பல பாகங்களில் இருந்தும் வருகைதந்த பக்தர்கள் கலந்துகொண்டு, கிருஷ்ணப்பெருமானை தரிசித்து இஷ்டசித்திகளை பெற்றுச்சென்றதுடன் பல பக்தர்கள் தூக்குகாவடி எடுத்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொண்டனர்.

இவ் ஆலயத்தின் பிரம்மோற்சவம் கடந்த 22.08 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில், நாளை மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா இனிதே நிறைவடையும்.



# வரவு செலவுத் திட்டத்தில் மாற்றம் வராவிட்டால் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம்

வரவு செலவுத் திட்டத்தில் மாற்றம் வராவிட்டால் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து பாரிய போராட்டத்தை மேற்கொண்டு அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம் என அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் உப தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களுடைய சாமானம் தற்போது இருக்கின்ற நாட்டினுடைய சூழல், பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய நிலைமை மற்றும் கல்வித் துறை சம்பந்தமான பல விடயங்களை ஆராய்ந்து தற்போது போராட்டம் ஒன்றை முன்னெடுக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த இரு வருடங்களாக இந்த பாரிய பொருளாதாரம் நெருக்கடியுடன் எங்களுடைய உறுப்பினர்களாக இருக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய வரி பெருமளவில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் வேலை செய்யும் இடங்களில் போதிய அளவு வளங்கள் இல்லை, இதே நிலைமைதான் இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் முகம் கொடுக்கும் நிலைமையாக இருக்கிறது.

வாழ்க்கைச் செலவினுடைய அதிகரிப்பு வரிகளுடைய அதிகரிப்பு, இந்த நிலைமையில் அரசாங்கத்திடமிருந்து விதவிதமான உதவிகளும் காண முடியாத நிலை இருக்கிறது, எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பாரிய மாற்றம் தேவை என்பது எங்களுடைய கருத்து.

முக்கியமாக கல்வித்துறை சார்ந்த கொள்கைகளை எடுத்து பார்க்கின்ற போது பெரும் குறைபாடுகள் காணப்படுகிறது,

பொருளாதார நிலமை என்று பார்க்கின்ற போது மிகவும் குறைபாடாக இருக்கிறது, மக்களுடைய நிலைமையை கருதாமல் வெறுமனே சர்வதேச நாணய நிதியத்தின் உடைய கொள்கைகளையும், அதனுடைய இலக்குகளையும் வைத்துக் கொண்டுதான் பொருளாதாரக் கொள்கைகளை அணுகிக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக மின்சாரம், எரிபொருட்கள் உடைய விலை அதிகரிப்பு மற்றும் அரசமைப்புகளை தனியார் மயமாக்கும் நிலைப்பாடு வரவு செலவு திட்டத்தில் ஒரு சிக்கன அடிப்படையில் செலவுகளை குறைத்து பொது சேவைகளை சீர்குழையின் நிலைமை தற்போது காணப்படுகிறது.

தற்போதைய நிலைமைகள் முக்கியமான விடயம் இரண்டு மாதத்திற்கு முன்பு உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்கின்ற கொள்கையை மத்திய வங்கியால் முன்வைக்கப்பட்டு அரசாங்கமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது, அதன் அடிப்படையில் மக்களினுடைய ETF நிதி அடுத்த 16 வருடங்களில் ஏறத்தாழ 47 விகிதத்தால் குறையப் போகின்றது, இது மிகவும் ஒரு பின்னடைவாக இருக்கும். எங்களுடைய பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய யு.பி.எப் கூட 40 விகிதத்தால் குறைய கூடிய வாய்ப்பு உண்டு.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF JAFFNA TEACHERS' ASSOCIATION
UNIVERSITY OF JAFFNA

07.09.2023

Executive Committee 2023-2024

President
Prof.P.Iyngaran

General Secretary
Mr. V. Vijayabaskar

Vice President
Dr.S.Sooriyakumaran

Assistant Secretary
Dr. Akilan Kathirkamar

Treasurer

UTA Office
Students Complex
University of Jaffna
PO Box 57
Thirunelvely
Jaffna

ஊடக அறிக்கை
நாட்டின் கல்வித்துறையும் அரச பல்கலைக்கழகங்களும் எதிர்கொள்ளும் நெருக்கடி

இவைகள் எங்களுடைய அரசாங்கத்தினுடைய கொள்கைகளை கேள்விக்கு உட்படுத்தும் ஒரு விடயமாக இருக்கிறது, இதற்கு எதிராகவும் எங்களுடைய அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து கடைசி சில வாரங்களாக சில போராட்டங்களை கொழும்பில் மேற்கொண்டு இருக்கிறது.

கடந்த ஐந்து வருட காலத்திலும் மாணவர்களுடைய உள்வாங்கும் தொகை 29,000 தொடக்கம் 43000 ஆக அதிகரித்திருக்கிறது, அதாவது ஏறத்தாழ 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த 17 பல்கலைக்கழகங்களுக்கான அரசாங்கத்தினுடைய முதலீட்டு செலவு 0.16 - 0.08 விகிதமாக 50 விகிதத்தால் குறைக்கப்பட்டிருக்கிறது, பல்கலைக்கழகங்களுடைய முதலீட்டு செலவிற்கான ஒதுக்கீடு 50% குறைக்கப்பட்டிருக்கிறது, இவ்வாறான கொள்கைகளை தான் இந்த அரசாங்கம் முன்கொண்டு போகிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் பெரும் மாற்றம் வராவிட்டால் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து ஒரு பாரிய போராட்டத்தை மேற்கொண்டு கொள்கைகளில் மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம் என்பதை தெரியப்படுத்துகின்றோம் என தெரிவித்துள்ளார்.

# கொக்கு தொடுவாயில் மனித எலும்புக்கூடுகளுடன் துப்பாக்கி சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோக துண்டுகளும் மீட்பு!

மனித எலும்புக்கூடுகளுடன் துப்பாக்கி சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோக துண்டுகள் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது இரண்டாவது நாளாக இடம்பெற்று இன்றைய அகழ்வு பணியானது நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இரண்டாவது நாளாகவும் இன்று கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடைபெற்றிருந்து. இதன்போது மேலதிகமான மனித எலும்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்தும் நாளை அகழ்ந்தெடுக்கப்படும். இன்று வேறு சில முக்கியமான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முக்கியமாக துப்பாக்கி சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோக துண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. முக்கியமான ஆதாரங்களில் இதுவும் ஒன்று. அது தவிர கண்டெடுக்கப்பட்ட ஆதாரங்கள் பகுத்தறிந்ததன் பிற்பாடே அறியத்தரப்படும்.

எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் முழுவதுமாக இன்னும் எடுக்கப்படவில்லை பகுதியளவிலேயே எடுக்கப்பட்டுள்ளது. உடுப்புக்களில் சில தடயம் இருக்கின்றது இதனை விரிவாக ஆராய்ந்ததன் பின்னர் தான் இது தொடர்பாக கூறமுடியும். ஒன்று அல்லது இரண்டு தான் நாம் எண்ணிக்கையை சரியாக கூறமுடியாது ஏனெனில் முழுவதுமாக எடுத்ததன் பின்னர் தான் எத்தனை என கூறமுடியும்.

மனித புதைகுழிக்குள் இருந்து தான் துப்பாக்கி சன்னம் இரண்டு துண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. அது துப்பாக்கி சன்னம் என்றே சந்தேகிக்கப்படுகின்றது. அடையாளங்களும் இருக்கின்றது. அது பகுப்பாய்வு செய்ததன் பின்னர் தான் தெரிவிக்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

குறித்த சம்பவ இடத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஸ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், தடயவியல் பொலிஸார், விஷேட அதிரடி படையினர் முன்னிலையில் அகழ்வு பணி நடைபெற்றிருந்தது.

குறித்த அகழ்வு பணியின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாசந்திர பிரகாஷ், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# போராட்டம் செய்தால் கொலை அச்சுறுத்தலுக்கும் முகம் கொடுக்கிறோம் – மது எதிர்ப்பு போராட்டத்தில் தாயொருவர் ஆதங்கம்



போராட்டம் செய்தால் கொலை அச்சுறுத்தலுக்கும் முகம் கொடுக்கிறோம் என மது எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட தாயொருவர் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் அலுவலகம் அமைந்துள்ள பகுதிக்கு மிக அருகில் புதிதாக திறக்க திட்டமிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ள மதுபான நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களால் பூநகரி பிரதேச செயலாளருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது. புதிதாக திறக்க திட்டமிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ள குறித்த மதுபான நிலையத்தின் அனுமதியை இரத்து செய்யுமாறு மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டமையால் மது விற்பனை நிலையத்தினரால் தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட தாயொருவர் தெரிவித்துள்ளார்.



# ஒட்டுசுட்டானில் வாகன விபத்து: இரு இளைஞர்கள் பலி!

(06-09-2023)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஒட்டுசுட்டான், மாங்குளத்தில் 05-09-2023 அன்று உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் முள்ளியவளை - பொன்னகர் பகுதியை சேர்ந்த 23 மற்றும் 24 வயதான இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி ஆரம்பம்!

(06-09-2023)



முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் செவ்வாய்க்கிழமை (05) மேற்கொள்ளப்படும் என முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் கடந்த ஆகஸ்ட் (31) அன்று தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் 05-09-2023 அன்று குறித்த அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியவில்லை.

அதனடிப்படையில் குறித்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் 06-09-2023 அன்று காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த மனித புதைகுழி அமைந்த பகுதி குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன், குறித்த புதைகுழி பகுதிக்கு பாதுகாப்பு கூரைகள் அமைக்கப்பட்டு இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.



முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி, தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ, தொல்லியல் துறை சார்ந்தோர், சட்டத்தரணிகளான கே.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராசா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், தடயவியல் போலீசார், சமூக ஆர்வலர் அ.பீற்றர் இளஞ்செழியன், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் கி.சிவகுரு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்டவர்களின் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# மன்னாரில் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது – அவர்களிடம் இருந்து 5 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மீட்பு

- மன்னார் நிருபர் (06-09-2023)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றின் குளியல் அறைகளில் இருந்து திருடப்பட்ட ஒரு தொகுதி குளியல் அறை உபகரணங்களுடன் 2 சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை (5) மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான குளியல் அறை உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 58 வயதுடையவர்கள் என மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றின் குளியல் அறைகளில் இருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான குளியல் அறை உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் திங்கட்கிழமை (4) மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

குறித்த முறைப்பாட்டிற்கு அமைவாக மன்னார் தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும்,பிரதான பொலிஸ் பரிசோதகருமான சந்தன பிரசாத் ஜெயதிலக்க அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக உப பொலிஸ் பரிசோதகர் நிப்பூன் தலைமையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவை சேர்ந்த பொலிஸ் சாஜன் களான சிவ ராஜா (53207), முசாதிக் (62792), பொலிஸ் கொஸ்தபில்களான லியனகே (105297), ஹேரத் (105276), கருணாரத்ன (105221) ஆகியோர் இணைந்து மேற்கொண்ட துரித நடவடிக்கைகளுக்கு அமைவாக செவ்வாய்க்கிழமை (5) குறித்த இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதோடு அவர்கள் பதுக்கி வைத்திருந்த சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளது.



கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் குறித்த இரு சந்தேக நபர்களும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளதாக மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இவ்வாறான பல்வேறு திருட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சுதந்திர தின எதிர்ப்பு வழக்கில் முன்னிலையாகாமைக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பிக்கு பிணை

சுதந்திர தினத்தை அரசுக்கு எதிரான கரிநாளாக பிரகடனப்படுத்தி பேரணியில் பங்களித்தனர் என பொலிசாரினால் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் முன்னிலையாகாமைக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன் எம்.பி புதன்கிழமை (06.09.2023) மதியம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்னிலையான நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இலங்கையின் சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமான பேரணியில் பங்களித்தமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட சில அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்கு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டது.

அழைக்கப்பட்ட போது நீதிமன்றில் பிரசன்னமாகாமைக்காக செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறிகாந்த ஊடாக மன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மன்று ஆட்பிணையில் செல்வதற்கு செல்வம் அடைக்கலநாதன் எம்.பிக்கு அனுமதித்திருந்தது. இவ்வழக்கில் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் யாழ் மாவட்ட பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் பிணை ஒப்பமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தகவல் அறியும் உரிமை சட்டத்தை உதாசீனம் செய்த மடு வலய கல்விப் பணிப்பாளரை விசாரணைக்கு அழைத்த தகவல் அறியும் ஆணைக்குழு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



- மன்னார் நிருபர் (06.09.2023)

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக மடு வலய கல்வி பணிமனை தொடர்பில் கோரப்பட்ட தகவல் கோரிக்கைக்கு உரியவாறு பதில் வழங்காத மடு வலய கல்வி பணிப்பாளர் A.C வொலண்டைனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் தகவல் அறியும் ஆணைக்குழுவின் விசாரணைக்கு ஆஜராகுமாறு மடு வலய கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது தகவல் அறியும் ஆணைக்குழு.

மன்னார் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் அதிக பாடசாலைகளை கொண்ட வலயம் மடு வலயம் ஆகும். இங்கு ஆசிரியர் இடமாற்றம், கல்வி நடவடிக்கைகள், ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் அதிகம் காணப்படுகின்ற நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பில் தெளிவு பெறும் நோக்கில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பல தகவல்கள் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த தகவல் கோரிக்கை தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் மடு வலய கல்வி பணிமனையின் தகவல் அலுவலர் மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படாத நிலையில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் உட்பிரிவு 39.3 குறித்த பகிரங்க அதிகாரத்தை மீறியிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மடு வலய கல்வி பணிமனை மற்றும் அதன் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியான A.C வொலண்டைனுக்கு (வலயகல்வி பணிப்பாளருக்கு) எதிராக தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை உதாசீனம் செய்த வலய கல்விப் பணிப்பாளரை விசாரணைக்கு ஆஜராகுமாறு தகவல் அறியும் ஆணைக்குழு தலைவர் னு.ஊ திசநாயக்க ஒப்பமிட்டு 06-09-2023 அன்று கடிதம் அனுப்பியுள்ளார்.

மாகாண கல்விப் பணிப்பாளர் பெயரிட்டு ஆணைக்குழுவினால் விசாரணை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மடு வலய கல்விப்பணிப்பாளர் தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பில் அக்கறையீனமாக நடந்து கொண்டு வருகின்ற நிலையில் குறித்த முறைப்பாடு மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


Right to Information Commission
Notice to the Public Authority
Director-General
Right to Information Commission
D.C. Dissanayake
Director General
Right to Information Commission

# மன்னார் பேசாலையில் 2 ஆம் கட்ட காற்றாலை அமைக்க காணி சுவீகரிக்க முயற்சி – மக்கள் எதிர்ப்பு



- மன்னார் நிருபர் (06.09.2023)

காணி அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் தீவில் பேசாலை பகுதியில் காற்றாலை அமைக்கும் திட்டத்திற்கு காணியை அடையாளப்படுத்தும் நோக்குடன் மன்னார் பிரதேச செயலகத்தில் இருந்து அதிகாரிகள் அடையாள விளம்பரத்தை காட்சிப்படுத்தப்பட்ட போது காணி உரிமையாளர்கள், மக்கள் அவ்விடத்தில் எதிர்ப்பு தெரிவித்த சம்பவம் புதன்கிழமை (6) காலை இடம்பெற்றது.

இச்சம்பவமானது பேசாலை மேற்கு (மன்-55) கிராம அலுவலகப் பிரிவில் தனியார் காணி பகுதியில் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், காணி அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் தீவில் பேசாலை பகுதியில் காற்றாலை அமைக்கும் திட்டத்திற்கு காணியை அடையாளப்படுத்தும் நோக்குடன் மன்னார் பிரதேச செயலகத்தில் இருந்து அதிகாரிகள் புதன்கிழமை (6) காலை வருகை தந்து மன்னார் பிரதேச செயலாளரினால் அறிவுறுத்தப்பட்ட மும்மொழி கொண்ட அறிவுறுத்தல் விளம்பரம் சம்பந்தப்பட்ட காணியில் பார்வைக்கு ஒட்டப்பட்டது.

குறித்த அறிவித்தல் பிரசுரத்தில் "மன்னார் காற்று மின் செயற்றிட்டம் இரண்டாம் கட்டமாக தேவையான புதிய காற்றாலைகளை பொருத்துவதற்கும் மற்றும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை நிர்மானிப்பதற்கு மே இக் காணி சுவீகரிக்க படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை அறிந்த காணி உரிமையாளர்கள், பேசாலை பங்குத்தந்தை அருட்பணி அன்ரன் அடிகளார் உட்பட இக்கிராம மக்கள் சிலர் சம்பவ இடத்துக்குச் சென்று காணி அபகரிப்புக்கு எதிராக குரல் எழுப்பினர்.

இது தொடர்பாக அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் மின் காற்றாலை அமைப்பதற்காக காணி அமைச்சிலிருந்து குறிப்பிட்ட காணியை அளவீடு செய்வதற்கு நோட்டீஸ் போடுமாறு மன்னார் பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்த பட்டமையால் முதல் கட்ட நடவடிக்கையாக இது இடம்பெற்றுள்ளது.

ஆகவே இது தொடர்பாக காணி உரிமையாளர்கள் தங்கள் காணி என உரிமை கோரும் போது இப்பகுதி மக்களின் விருப்பு வெறுப்புகளை மன்னார் பிரதேச செயலாளர் ஊடாக எழுத்து மூலம் தெரிவிக்கும் பட்சத்தில் இது உயர் மட்டம் பரிசீலிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விவகாரம்

## சர்வதேச கண்காணிப்பின்றி அகழ்வு முன்னெடுக்கப்படுவதில் திருப்தியில்லை - ரவிகரன்



முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விவகாரம், சர்வதேச கண்காணிப்பின்றி இடம்பெறுவது திருப்தி அளிக்கவில்லை என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த அகழ்வுப் பணியில் தொல்லியல் துறையினர் மீதும் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி 06-09-2023 காலை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அந்த அகழ்வுப் பணிகளை பார்வையிட்ட பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான விடயத்தில், கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற ஆரம்பக்கட்ட அகழ்வுப் பணிகளில் 13 உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளிவந்தன.

அதன் பின்னர் அந்த அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டு, கடந்த 05 ஆம் திகதி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக அகழ்வுப் பணிகள் தாமதமாகி, 06ஆம் திகதி இந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த அகழ்வுப்பணி தொடர்பில் கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி முல்லைத்திவு நீதிமன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை சார்ந்தவர்களும் இந்த அகழ்வுப் பணிகளில் இணைத்துக்கொள்ள படவேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் இங்கு அவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் துறை சார்ந்தவர்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. தற்போது மக்கள் மத்தியில் தொல்லியல் துறையினர் மீது பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஏன் எனில் குருந்தூர்மலை விவகாரத்தில், தொல்லியல் துறை தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கண்களை ஒன்றை வழங்கி யிருந்தது.

அக் கட்டளையில் தொல்லியல் துறையினர் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மூன்று தடவைகள் மீறியதோடு, குருந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு ஒத்துழைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தொல்லியல் துறையினர் இந்த அகழ்வுப் பணி விடயத்திலும் சரியாக நடந்து கொள்வார்களென நாம் எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை இந்த மனிதப் புழி விவகாரத்தில் சர்வதேச கண்காணிப்பு தேவை எனவும், சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலேயே இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் எமது தமிழ் மக்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

நாங்கள் நீதிமன்றையும், சட்டவைத்திய அதிகாரிகளையும் மதிக்கின்றோம். ஆனால் அனைத்துத் தரப்பினரும் இந்த விடயத்தில் சரியாக செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாதுள்ளது.

குறிப்பாக இங்கு பொலிசார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரே இங்கு அதிகமாக காணப்படுகின்றனர்.

இந்நிலையில் மக்கள் சார்பாக அங்கு சட்டத்தரணிகள் மாத்திரமே புதைகுழி வளாகத்திற்குள் செல்ல முடியும். மக்களின் பிரதிநிதிகளாக வேறு யாரும் புதைகுழி பிரதேசத்திற்குள் செல்ல முடியாது.

எனவே எமக்கு சந்தேகங்கள் எழாதவாறு இந்த அகழ்வுப் பணிகள் இடம் பெறுவதுடன், உண்மைத்தன்மை வெளிப்பட வேண்டும்.

சர்வதேச மற்றும், ஐ.நாவின் கண்காணிப்புக் குழுக்கள் இல்லாமல் இந்த அகழ்வுப் பணிகள் முன் னெடுக்கப்படுவதில் எனக்குத் திருப்தி இல்லை என்பதையும், தொல்லியல் திணைக்களத்தினையும் நாம் நம்பப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் - என்றார்.

# முல்லைத்தீவு – மாங்குளம் பகுதியில் வெடிப்பு சம்பவம்!



முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பகுதியில் இன்ற இனம்காணப்படாத வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதுடன் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்திய சாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மாங்குளம் நீதிபுரம் பகுதியை சேர்ந்த இருவரும் விறகு எடுப்பதற்காக சென்ற போதே குறித்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மாரிமுத்து மணியம் (84 ) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவத்தில் படுகாயமடைந்த பார்த்தீபன் நிதர்சன் (06) எனும் சிறுவன் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு மாகாண ஆளுநரால் கோவிற்சந்தை பொது வர்த்தக வளாகத்தின் நிர்மாணப்பணிகள் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது




வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் யாழ்.கரவெட்டி கோவிற்சந்தை பொது வர்த்தக வளாகத்தின் நிர்மாணப்பணிகள் 06.09.2023 (புதன்கிழமை) ஆரம்பமானது. இந்த கட்டுமானத்திற்காக 35 மில்லியன் ரூபா தொகை செலவிடப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேசத்தில் கோவிற்சந்தை கிராம மக்கள் தற்காலிக கட்டிடத்தில் இதுவரையில் தமது வியாபார நடவடிக்கைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த தற்காலிக கட்டடங்களில் போதிய வசதிகள் இல்லாததால், அப்பகுதியில் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளும், நுகர்வோரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். இதனால் புதிய வணிக இடம் அமைப்பது மக்களுக்கு பெரும் தேவையாக உள்ளது.





புதிய வணிக வளாகம் அமைப்பதற்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையுடன் இணைந்து கோவிற்சந்தை பிரதேச மக்களும் கணிசமான தொகையை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இவ்வாறானதொரு அபிவிருத்தித் திட்டத்திற்கு பிரதேச மக்களிடம் இருந்து அதிகளவான பங்களிப்புகளை பெற்றுக் கொள்வது நாட்டிற்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளதாக அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் தெரிவித்தார்.

# வடமராட்சியில் இடம் பெற்ற உள்ளூர் உற்பத்தி சந்தையும், உணவு திருவிழாவும்



வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமான பருத்தித்துறையும், கரவெட்டி பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்தி பொருட்களின் விற்பனைச் சந்தையும் உணவு திருவிழாவும் நெல்லியடி மைக்கல் விளையாட்டுக் கழகமைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேசம் மற்றும் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற கைவினைப் பொருட்கள், தைத்த ஆடைகள், மற்றும் உள்ளூர் இயற்கை உணவுப் பொருட்கள், உட்பட விவசாய திணைக்களத்தினரால் நாற்றுக்கள் விற்பனையும் இடம்பெற்றன.



இதில் வடமராட்சிக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், என பலரும் சென்று பொருட்களை கொள்வனவு செய்தமை அவதானிக்க முடியும்.

# கடமை ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிக்கு கௌரவிப்பு நிகழ்வு

கிளிநொச்சி மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் குணரத்ன அவர்கள் கடமை புரிந்துள்ளார்.

இவர் பொலிஸ் சேவையில் இணைந்து 38 வருடங்களாக தன்னை முழுமையாக நாட்டு மக்களின் பாதுகாப்பு கடமையில் இணைத்துள்ளமையும் பல குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கும் பிரதானியாக கடமை புரிந்துள்ளார்.







இவர் தற்போது பொலிஸ் பணியிலிருந்து முற்றுமுழுதாக ஓய்வு நிலை பெற்று செல்கின்றமையால் இந் நிகழ்வில், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி ஹெட்டியாரச்சி, கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பொலிஸ் மா அதிபர் சமுத்திர ஜீவன் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர், இராணுவத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 07.09.2023 அன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக்கொண்டு பின்னர் தனியார் விடுதியில் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

# 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் – யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சிறந்த பெறுபேறுகள்!

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றையதினம் வெளியாகின. அந்தவகையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு,

இயந்திரவியல் தொழில்நுட்பம்

ரா.கிருபாகரன் 2ஏ. பி, அ.கனிஸ்ரன் 2ஏ பி, சி.தமிழழகன் பி 2சி

வர்த்தகப் பிரிவு

கொ.சஞ்சய் 3ஏ, வி.அனோஜன் 3ஏ, சி.முகமட் சஹ்ரான் 2ஏ பி, சி.நிருஜன் 2ஏ பி, ச.முகமட் ஆரீக் ஏ 2பி, யூ.நிகேஷ் பெல்சியன் ஏ பி சி, ஞா.கனிஸ்ரன் 3பி

கணிதப்பிரிவு

ந.கபீசன் ஏ 2பி

விஞ்ஞான பிரிவு

ப.கிரிசரன் 3பி, வி.டிலக்சன் பி 2சி

கலைப்பிரிவு

கே.அபின்சன் 2பி சி



JAFFNA CENTRAL COLLEGE

Mr.S.Indrakumar
Principal

Jaffna,
Srilanka

06.09.2023

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு - 2022

| இல | மாணவர் பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 1 | [illegible] | 2A,B | [illegible] |
| 2 | [illegible] | 2A,B | 4 |
| 3 | [illegible] | B,2C | 34 |
| வர்த்தகப்பிரிவு | | | |
| 1 | [illegible] | 3A | 38 |
| 2 | [illegible] | 3A | 53 |
| 3 | [illegible] | 2A,B | 69 |
| 4 | [illegible] | 2A,B | 76 |
| 5 | [illegible] | A,2B | 88 |
| 6 | [illegible] | A,B,C | 118 |
| 7 | [illegible] | 3B | 128 |
| கணிதப்பிரிவு | | | |
| 1 | [illegible] | A,2B | 147 |
| விஞ்ஞானப்பிரிவு | | | |
| 1 | [illegible] | 3B | 178 |
| 2 | [illegible] | B,2C | |
| கலைப்பிரிவு | | | |
| 1 | [illegible] | 2B,C | |

S.Indrakumar
Principal
Jaffna Central College
Jaffna



# ரூ.7.5 லட்சம் கோடி ஊழலை திசை திருப்பவே சனாதன பிரச்சினையை எடுத்துள்ளனர் பாஜக மீது அமைச்சர் உதயநிதி குற்றச்சாட்டு

இந்திய செய்திகள்

மணிப்பூர் கலவரம், ரூ.7.5 லட்சம் கோடி ஊழல் ஆகியவற்றை திசை திருப்பவே சனாதனத்தை பாஜகவினர் கையில் எடுத்துள்ளனர் என்று அமைச்சர் உதயநிதி குற்றம்சாட்டியுள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள்கலைஞர்கள் சங்கம் கடந்த 2ம் தேதி ஏற்பாடு செய்திருந்த ‘சனாதன ஒழிப்பு’ மாநாட்டில் பங்கேற்றுப் பேசினேன். காற்றில் கம்பு சுற்றும் பாஜக: நான் பேசிய பேச்சை, ‘இனப்படுகொலை செய்யத் தூண்டினேன்’ என்று திரித்து, அதையேமக்களிடம் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் ஆயுதமாகக்கருதி, காற்றில் கம்பு சுற்றிக்கொண்டு இருக்கின்றனர் பாஜக தலைவர்கள்.

அமித்ஷா போன்ற மத்திய அமைச்சர்கள், பாஜக முதல்வர்கள் என, யார் யாரோ என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றனர். நியாயமாகப் பார்த்தால், மதிப்புக்குரிய பொறுப்பில் இருந்துகொண்டு அவதூறு பரப்பும் அவர்கள் மீது நான்தான் கிரிமினல் வழக்கு, நீதிமன்ற வழக்குகளைத் தொடர வேண்டும். ஆனால், அவர்களுக்குப் பிழைப்பே இதுதான். அதனால் ‘பிழைத்துப் போகட்டும்’ என்று விட்டுவிட்டேன்.திமுகவின் 2 கோடி தொண்டர்களில் நானும் ஒருவன். நாங்கள் எந்த மதத்துக்கும் எதிரிகள் கிடையாது. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பதைக் கற்பிக்கும் மதங்கள் அனைத்தையும் நாங்கள் மதிக்கிறோம்.

ஆனால், இவை எதையும் புரிந்துகொள்ள விரும்பாமல், வரும் மக்களவைத் தேர்தலில் வெறும்



அவதூறை மட்டுமே நம்பி களமிறங்கியுள்ள ‘மோடி அண்டு கோ’வைப் பார்க்கும்போது, ஒருபக்கம் பரிதாபமாகவும் இருக்கிறது.கடந்த 9 ஆண்டுகளாக மோடி சும்மாவே இருந்துள்ளார். இடையிடையே பணத்தை மதிப்பிழக்கச் செய்வது, குடிசைகளை மறைத்து சுவர் எழுப்புவது, புதிய நாடாளுமன்றக் கட்டிடம் கட்டுவது, அங்கு செங்கோல் நடுவது, நாட்டின் பெயரை மாற்றி விளையாடுவது, எல்லையில் நின்றபடி வெள்ளைக் கொடி காண்பிப்பது என நகைச்சுவை செய்துள்ளார்.

‘சனாதனம் என்றால் என்ன’ என்பதை வீட்டில் பத்திரமாக அடுக்கி வைத்திருக்கும் புத்தகங்களில் தேடிக் கொண்டிருக்கும் பழனிசாமி, கோடநாடு கொலைகொள்ளை வழக்குகளிலும், ஊழல் வழக்குகளில் இருந்தும் தப்ப முயல்கிறார். அவர் நீண்டநாள் ஒளிந்து கொண்டிருக்க முடியாது. பிரதமர் மோடி, கரோனா நிதியாகத் திரட்டிய ‘பி.எம்.கேர்ஸ்’க்கு கணக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றபடி, ரூ.7.5 லட்சம் கோடி என்னவானது என்ற சிஏஜி கேள்விக்கும் பதில் அளிக்காமல், ஊரில் இருந்தால் மணிப்பூர் பற்றிக் கேள்வி கேட்பார்களே என்று பயந்து, நண்பர் அதானியுடன் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறார்.மணிப்பூர் கலவரம், ரூ.7.5 லட்சம் கோடி ஊழல் போன்றவற்றை திசை திருப்பத்தான் ‘மோடி அண்டு கோ’ இப்படி சனாதனக் கம்பை சுற்றிக்கொண்டு இருக்கிறது. இவர்களின் கைகளில் மொத்தமாக சிக்கியுள்ளதால், மோடியின் நாடகத்தையே இங்கே அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

ஒரு சாமியார் இடையில் புகுந்து, என் தலைக்கு ரூ.10 கோடி விலை அறிவிக்கிறார். ‘முற்றும் துறந்தவரிடம் எப்படி 10 கோடி’ என்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. பலர் என் மீது நாட்டின் பல்வேறு காவல் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் புகார் அளித்து வருவதாகத் தெரிகிறது. அதேநேரத்தில், அந்த சாமியாரை கைது செய்யக் கோரி, திமுகவினர் பல்வேறு காவல் நிலையங்களிலும் புகார் அளித்து வருவதாகவும், சாமியாரின் உருவ பொம்மையை எரிப்பது, கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் தெரிகிறது. அதுபோன்ற காரியங்களை திமுகவினர் தவிர்க்க வேண்டும். என் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை நான் சட்டப்படி எதிர்கொள்வேன். இவ்வாறு அறிக்கையில் உதயநிதி தெரிவித்துள்ளார்.

# பாரத் என பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர்களின் மனதை புண்படுத்தக்கூடாது: திமுக எம்.பி. கனிமொழி



“எல்லா திட்டங்களுக்கும் புரியாத பெயர்களை வைக்கும் ஒன்றிய அரசுக்கு, பாரத் என பெயர் மாற்றுவது சாதாரண ஒன்றாக தோன்றலாம். இப்படி பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர்களின் மனதை புண்படுத்தக்கூடாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்‘‘ என்று திமுக எம்பி, கனிமொழி கூறியுள்ளார்.சென்னையில் திமுக எம்பி, கனிமொழி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவரிடம் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றும் திட்டம் குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், ‘‘அரசியலமைப்புச் சட்டத்தில் அவ்வாறு இருப்பதாகக் கூறுவார்கள். இந்த இரண்டு வார்த்தைகளுமே அதில் உள்ளன. மேடைகளில் பேசுகிறவர்கள்கூட இந்த இரண்டு பெயர்களையும் பயன்படுத்துகிற சூழல்தான் இருந்து வருகிறது. ஆனால், எப்போதுமே பாரதப் பிரதமர் என்பதைவிட, Prime Minister of India என்று தான் அழைப்பிதழ்கள் கொடுக்கப்படும். அதேபோல, President of India தான். திடீரென்று, தேவையில்லாமல் புதிதாக ஒரு சர்ச்சையை ஏற்படுத்துகிற வகையில், பாரத குடியரசுத் தலைவர் என்பதும், இந்தியாவின் பெயரை பாரதம் என்று மாற்றப்போகிறோம் என்று கூறுவதற்குப் பின்னால் ஒரு அரசியல் இருக்கிறது.

அதை நாம் எதிர்க்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகிறோம். இண்டியா என்ற பெயரில், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தளத்தில் ஒரு கூட்டணியை உருவாக்கியிருக்கும் போது, அந்தப் பெயரே ஒன்றிய அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய சூழலில்தான் பெயரையே மாற்றியுள்ளனர். வரலாற்றை மாற்றுவது, பெயர்களை மாற்றுவது எனத்தொடங்கி, சட்டங்களுக்குக்கூட இந்தியில் பெயர் வைக்க ஆரம்பித்துவிட்டனர். எல்லா திட்டங்களுக்கும் புரியாத பெயர்களை வைக்கும் அவர்களுக்கு இதுபோல மாற்றுவது சாதாரண ஒன்றாக தோன்றலாம்.

எத்தனையோ விசயங்களில் மனதை புண்படுத்திவிட்டதாக கூறும் அவர்கள், இப்படி பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர்களின் மனதை புண்படுத்தக்கூடாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்‘‘ என்று அவர் கூறினார்.

# ரூ.9 கோடியில் சமூகநல இயக்குநர் அலுவலகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை காமராஜர் சாலையில் ரூ.9.82 கோடியில் கட்டப்பட்டுள்ள சமூகநல இயக்குநர் அலுவலகக் கட்டிடத்தை நேற்று முதல்வர்மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் மகளிரின் கல்வி, சுகாதாரம், குடும்ப வாழ்க்கை, பொருளாதாரம் மற்றும் சம உரிமைகளை உறுதிப்படுத்த சமூகநல இயக்ககம் செயல்பட்டு வருகிறது. பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை உறுதி செய்யும் தொட்டில் குழந்தை திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்,பெண்களின் கல்வியை ஊக்குவிக்கும் புதுமைப்பெண் திட்டம், திருமண உதவித் திட்டங்கள், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்



உள்ளிட்ட பல திட்டங்கள் சமூகநல இயக்ககத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சமூகநல இயக்ககத்துக்கு சென்னை, காமராஜர் சாலையில் தரை மற்றும் 2 தளங்களுடன், 26,044 சதுர அடி பரப்பில் ரூ.9.82 கோடியில் கட்டப்பட்டுள்ள சமூகநல இயக்குநர் அலுவலகக் கட்டிடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்துவைத்தார்.

இக்கட்டிடத்தில் சுமார் 120 பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணிபுரியும் வகையில் அலுவலகங்கள், 2 கூட்ட அரங்குகள், மின்தூக்கி வசதி உள்ளிட்டஅனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் அமைச்சர் பி.கீதாஜீவன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, சமூகநலத் துறைசெயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூகநலத் துறை ஆணையர் வே.அமுதவல்லி, கூடுதல் இயக்குநர் ச.ப.கார்த்திகா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தேர்தல் பணியை துரிதப்படுத்துங்கள் மநீம நிர்வாகிகளுக்கு கமல் அறிவுறுத்தல்

தேர்தல் பணியைத் துரிதப்படுத்த வேண்டும் என மக்கள் நீதி மய்யம் கட்சியினருக்கு அதன் தலைவர் கமல்ஹாசன் அறிவுறுத்தியுள்ளார் படப்பிடிப்பு தொடர்பாக அமெரிக்கா சென்றிருந்த மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன், கடந்த 4ம் தேதி சென்னை திரும்பினார். நேற்று முன்தினம் கட்சி நிர்வாகிகளை அவர் சந்தித்துப் பேசினார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி தலைமையகத்தில் நடந்த இச்சந்திப்பில், கட்சியின் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கமல் பேசியதாவது: மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் 200 நாட்களே உள்ளன. இதனால் தேர்தலுக்கான பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

அனைத்து நிர்வாகிகளுக்கும் வழங்கப்பட்ட வேலையைத் திறம்பட செய்து முடிக்க வேண்டும். தங்களுக்கான பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். கூட்டணி தொடர்பான விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1064



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
## கொக்குவில், யாழ்ப்பாணம்

1915 ஆம் ஆண்டு சைவப்பெருமகனாகிய கோபாலி கந்தையா அவர்கள், ஆறுதிருமுகங்களுடன் கூடிய சண்முகப்பெருமானது எழுந்தருளி விக்கிரகத்தையும், நடராஜப்பெருமானது எழுந்தருளி விக்கிரகத்தையும் ஐம்பொன்னால் வார்த்து, மகாமண்டபத்தில் வள்ளிதேவசேனா சமேத சண்முகப்பெருமானுக்குரிய சந்நிதானத்தையும் அமைத்து, கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார். இதே ஆண்டு ஆலயத்திலே கொடித்தம்பம் அமைக்கப்பெற்று துவஜாரோகணமாகி மகோற்சவம் அதிசிறப்புடன் நடைபெற்றுள்ளது. இக்காலத்திலே திரு. ஆ. சரவணமுத்து குடும்பத்தினரும், திரு. வைத்திலிங்கம் குடும்பத்தினரும் கொடியேற்றத் திருவிழாவை செய்து வரலாயினர். திரு. ஆ. சரவணமுத்து அவர்கள், மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு முன்பாக காங்கேசன்துறைவீதியை அடுத்துள்ள நான்கு பரப்புக்காணியை ஆலயத்திற்குத் தருமசாதனம் செய்தார். அவ்வாறே ஆலய மகோற்சவ விழாக்களையும் முன்னின்று நடத்திவரலானார். இவரைத் தொடர்ந்து இவரது மகன் இராசையா என்பவர் இப்பணிகளைச் செய்துள்ளார்.

சிவஸ்ரீ நீலகண்டக் குருக்களைத் தொடர்ந்து சிவஸ்ரீ அப்பாத்துரை குருக்கள், மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தான மகோற்சவ விழாக்களில் பிரதம குருக்களாக வருகை தந்து திருவிழாக்களை சிறப்பாக நடத்தியுள்ளார். கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், அன்பர்களின் முயற்சியினாலும், பெருமனதுபடைத்தோரது பக்திநிலையினாலும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களுடைய பேரன் திரு. சின்னத்தம்பி சண்முகம் அவர்கள் தமது சொந்தச் செலவில், திரு. தம்பியர் அவர்கள் மூலமாக அர்த்த மண்டப வாயிற் கதவினைத் தேக்க மரத்தில் அழகுற அமைத்துத் திருபணி செய்துள்ளார். இக்காலப்பகுதியில் பிரம்மஸ்ரீ செல்லத்துரை ஐயர் ஆலய நித்திய பூசைகளை பிரம்மஸ்ரீ சின்னப்பா ஐயருடன் சேர்ந்து சிறப்பாகச் செய்து வந்துள்ளார். புலவர்மணி த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள், தமிழ் உலகம் அறிந்த பெருந்தகை. இப் பெரியாரது சமய வாழ்ககையோடு இக்கோயில் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. மஞ்சவனப்பதி முருகன்மீது ஆராத பக்தி கொண்ட புலவர்மணி த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள், இந்தியாவிலே கல்விகற்றபின் 1920 ஆம் ஆண்டு கொக்குவில் வந்து தமது முதற் பிரசங்கத்தை மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலே நிகழ்தினார். மஞ்சவனப்பதி முருகன்மீது பதிகம்பாடி தமது நித்திய பாராயணத்தில் அப்பதிகத்தை பாடும் நியமமுடையவராக விளங்கினார். ஆலயத்திலே நடைபெறும் சமயவிடயங்களிலும் ஆர்வமுடையவராக தமது வாழ்நாளிலே பெரும்பங்கை இவ்வாலயப்பணிகளிலே செலவிட்டுள்ளார்.

"கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்பதற்கமைய, தாம் வாழும் இடங்களிலே கோயில்களை அமைத்துப் பேணி, தமது வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக் கொண்ட இனமாக சைவத் தமிழர் விளங்கியுள்ளனர். இவ்வாறான கொள்கைக்கேற்ப மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தையும் காலத்திற்குக் காலம் பல்வேறு முறைகளில் திருத்தியும், புதுப்பித்தும் பெரும் திருப்பணிகளை இவ்வூரவர்கள் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1927 ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ செல்லத்துரை ஐயர் மங்களம்மா குடும்பத்தினர், தமது புதல்வர் பிரம்மஸ்ரீ குமாரசுவாமி ஐயர் ஞாககார்த்தமாக, விநாயகப்பெருமான் எழுந்தருளி விக்கிரகத்தினை ஐம்பொன்னாலான மூர்த்தியாக உபயம் செய்துள்ளனர். திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களுடைய முன்னோர்கள், மஞ்சவனப்பதி ஆலயத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக விளங்கினர். இவர்கள் காட்டிய பாதையில் திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களும் கோயிற் திருப்பணிவேலைகளில் தம்மை ஈடுபடுத்தி வந்துள்ளார். 1934 ஆம் ஆண்டு ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களால் சந்தானகோபாலருக்கு ஆலயம் எழுப்பப்பட்டது. இவ்வாண்டில் வைத்திய கலாநிதி க. நடராசா அவர்களால், நடராஜர் ஆலயம் அமைக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் திரு. வீ. செல்லத்துரை அவர்களால் சண்டேசுவரர் ஆலயம் கற்கோவிலாகக் கட்டப்பட்தோடு, சண்டேசுவரர் சிலாவிக்கிரகமும் உபயம் செய்யப்பட்டது. இவ்வாறான திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு புனருத்தாரண மகாகும்பாபிஷேகமும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு வடகிழக்கில் உள்ள காணியை, திரு. பொன்னம்பலம் காசிப்பிள்ளை அவர்கள் ஆலயத்திற்கு தர்மசாதனம் செய்துள்ளார். இவ்வாறு முருக பக்தர்கள் முருகன்மீது கொண்ட ஆராத அன்பின் காரணமாக, மஞ்சவனப்பதி ஆலயத்தின் வளர்ச்சி தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. இவ்வாலயத்திலே, 1938 ஆம் ஆண்டுவரை முருகப்பெருமான் தேர்உலாவர, கட்டுத்தேர் மட்டுமே காணப்பட்டுள்ளது. முருகப்பெருமான் சித்திரத்தேரில் உலாவரவேண்டும் என்ற பெருவிருப்பு, திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்கள் மனதிலே உதித்தது. உடனடியாகவே சித்திரத்தேர் திருப்பணி வேலைகளை, தமது சொந்தச் செலவில் செய்யத் தொடங்கினார்.

மஞ்சவனப்பதி முருகன் ஆலய சித்திரத்தேர் வேலைகளைச் செய்வதற்கென, இந்தியாவிலிருந்து விஸ்வ ஸ்ரீ சுப்ரமணிய ஸ்தபதியார் குழுவினர் வருவிக்கப்பட்டனர். இக்குழுவினரை மஞ்சவனப்பதி தேவஸ்தானத்திற்கு அருகே இருப்பிடவசதி அமைத்துக்கொடுத்து, முருகப்பெருமானுக்கு சித்திரத்தேர் ஒன்றினை உருவாக்கினார். இவருடன் இணைந்து வைத்திய கலாநிதி. சே. பொன்னம்பலம் அவர்கள் சித்திரத்தேர் திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்ய முன்வந்தார். இத்தேரிலே கந்தப்புராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், மகாபாரதம், பாகவதம் ஆகிய நூல்களிலே காணப்படும் கதைகள் சித்திரரூபமாக அமைக்கப்பட்டன. இவ்வாறு கலையுணர்வும், அழகுணர்வும் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தேர், 1939 ஆம் ஆண்டு அடியவர்கள் வெள்ளமெனத் திரண்டிருக்க வெள்ளாட்டம் விடப்பட்டது. இதேவேளை முருகப்பெருமான் உலாவரப் பயன்படுத்திய கட்டுத்தேர், விநாயகப்பெருமானுக்குரிய தேராக மாற்றம் பெற்றது.

- வளரும்...

ரொறன்ரோ
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி



4 வயது (Junior Kindergarten) முதல் 14 வயது (8 ம் வகுப்பு) வரையிலான மாணவர்களுக்கான
தமிழ், சமய, பண்ணிசை
வகுப்புக்கள் 10.09.2023 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த 18 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது.

புதிய மாணவர்களுக்கான பதிவு www.varasiththi.com
இணையத்தளத்தில் விண்ணப்பிக்கலாம்.




வகுப்புக்கள் நடைபெறும் நேரம்
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை




Sri Varasiththti Vinaayagar Hindu College
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500

# மெய்மை குன்றா மொழிக்குத் துணை



யாழ்ப்பாண அரசின் தலை நகரமாகும் நல்லூரில் (நல்லூ ஊர்) எழுந்தருளி இருக்கும் நல்லைக் கந்தனின் திருவிழா உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழ் சைவர்களின் பெருவிழா.

தினமும் ஓம் ஓம் ஓம் என்று ஓதிக் கொண்டு கந்த புராணக் கலாச்சாரத்தில் வாழும் தமிழ் சைவர்களுக்குகுறிஞ்சிக் குமரன் என்றும் பெருந் துணையாக விளங்குகின்றார்.

நல்லூர் கந்தனின் தலப் பெருமை என்றும் உயர்வானது.

நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரே சொல்லு தமிழ் எங்கே சுடர் மிகு சைவம் எங்கே என்ற பெருமையுடன் அறிஞர்களையும், புலவர்களையும், வித்தகர்களையும், குணவான்களையும், அன்பர்களையும், பக்தர்களையும் கொண்டிருக்கும் நல்லூரில் அழகு என்ற சொல்லுக்கு முருகா என்ற பொருளில் அழகாகவும், அலங்காரமாகவும், அருளாகவும் எழுந்தருளி பக்தர்களை அருள் ஆட்சி செய்யும் கந்தப் பெருமானின் திருவிழா நல்லூரில் மட்டுமல்ல, யாழ் மாநகரில் மட்டுமல்ல உலகம் முழுவதும் எங்கெல்லாம் ஈழத் தமிழ்ச் சைவர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் பெருவிழா வாக் கொண்டாடப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

முருகப்பெருமான் ஞானப் பழத்திற்காக மயில் ஏறி உலகை சுற்றி வந்தார். இன்று நாம் அமைதியைத் தேடி, சமாதானத்தைத் தேடி, சமத்துவத்தைத் தேடி, கல்வியைத் தேடி, நீதியைத் தேடி, நிதியைத் தேடி கண்டங்கள் தாண்டி, மாகடல்கள் (சமுத்திரங்கள்) தாண்டி உலகெங்கும் ஓடுகின்றோம்.

கந்தா கடம்பா நீதியை, சமாதானத்தை, சுதந்திரத்தை, மனிதாபிமானத்தை, நேர்மையை, ஒற்றுமையை பொதுமக்களுக்கும், மக்கள் தலைவர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் கொடுத்து மக்கள் நிம்மதியாகவும், வளமாகவும் வாழ அருள் செய்யும் ஐயா.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல் வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளி காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார் மயில் வாகனனைச் சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

வளம் படைத்தோர், வளம் (செல்வம்) இல்லாதோர் என்ற வேறுபாடு இல்லாமல் இன்று வரை ஒரு ரூபாவுக்கு அர்ச்சனை செய்து வழிபடக்கூடிய ஒரு பெருங்கோயில் உலகில் உண்டு என்றால் அது எங்கள் நல்லைக் கந்தன் திருக்கோயிலே.

திருவிழாக் காலத்தில் வேலனின் அழகு, அலங்காரம், விதம் விதமான வாகனங்கள் (மயில், கடா, இடும்பன், குதிரை) ஊர்திகள் (மஞ்சம், கைலாச வாகனம், சப்பரம், தேர்) என எத்தனை விதமான கண்கொள்ளாக் காட்சிகளைக் கண்டு வேலனை ஆறுமுகப் பெருமானை பக்தர்கள் உள்ளம் குளிர வழிபடுகின்றார்கள். ஊடகங்கள் இவற்றை உலகெங்கும் ஒளிபரப்பி பெரும் பணி ஆற்றுகின்றன.

விழிக்குத் துணை திரு மென் மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா மொழிக்கு துணை முருகா வெனு நாமங்கள் முன்பு செய்த பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

கோபுரங்களின் அழகு, தெய்வங்களின் அற்புதத் தோற்றம், நேர்த்தியான நேரம் தவறாத வழிபாடு, சுத்தமான சூழல், ஆறுமுகப் பெருமானின், பழனி ஆண்டவனின் சண்முக தீத்தத்தின் அழகு என எண்ணில் அடங்கா அற்புதங்கள் தேவலோக காட்சியாகி பக்தர்களை மெய்மறக்கச் செய்கின்றது.

சிறப்பாக திருவிழாக் காலத்தில் ஆலய சூழலில் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்வதுடன், குழந்தைகளையும் களிப்படையச் செய்யும் வணிகங்களினால் பொது மக்களின் பொருளாதாரம் வளர்வதுடன், மாநகரத்தின் பொருளாதாரமும் வளர்ந்து, நாட்டுக்கும் பெருமளவான வெளிநாட்டு தனம் வர செல்வக்குமரனின் கண்காட்சி திருவிழா உதவுகின்றது.

காலத்திற்கு காலம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், வேறும் பல இனத்தவர்களால், மதத்தவர்களால் தமிழரின் கலை, கலாச்சாரம், பண்பாடு, மொழி, வாழ்க்கை, பொருளாதாரம் எல்லாம் அழிக்கப்பட்டு வந்தாலும் இன்றுவரை ஒரு இனம் தலை தூக்கி உறுதியாக நிற்கின்றது என்றால் அது இறைவன் அருள் அன்றி வேறில்லை.

நாளென் செய்யும் வினை தானென் செய்யுமெனை நாடி வந்த கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங் குமரேசன் இரு தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந் தோளுங் கடம்புமெனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

சைவத் தமிழர்கள் உலகின் எட்டுத் திசைகளிலும் இருந்து ஆவணி மாத கந்தனின் பெருவிழாவுக்கு நல்லூரை நாடி வருகின்றார்கள். ஊர் விட்டுப் போனாலும் உறவு விட்டுப் போகாது. தாய் நிலம் நோக்கி வரும் பக்தர்கள் தங்கள் பிள்ளைகளையும் அழைத்து வந்து ஈழத் தமிழரின் வாழ்க்கை முறையை, வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் என்பனவற்றை காண்பிக்கின்றார்கள்.

முத்தமிழ் கடவுளாகிய முருகனின் கோயில் சூழலில் உலகில் உள்ள பல நாட்டவர்கள், பல இனத்தவர்கள் பெருவிழாவை காணக் கூடி உள்ளார்கள் இதனால் பல மொழிகளின் ஓசைகளுக்கிடையில், கந்தனின் மணி ஓசையும் ஒலிக்கின்றது. எல்லோரும் தங்கள் தாய் மொழியில் பேசினால் நாங்கள் எல்லா மொழிகளுக்கும் தாய் மொழியாகிய சங்கத் தமிழ் மொழியால் ஒன்றிணைவோம்.

நீரால், நெருப்பால், கள்வரால், பகைவரால் கவரமுடியாத கல்விச் செல்வத்தை உலகின் அறிவை, நாகரீகத்தை அறிவியலை, தொழில் நுட்பத்தை, பண்பாட்டை, இன்னும் பலவற்றை எங்கள் ஈழத்தமிழினம் பெற்று வளர்ந்து வருவதற்கு எங்கள் காங்கேயா உங்கள் பாதங்களுக்கு கோடான கோடி வணக்கங்களும் நன்றிகளும்.

யாமோதிய கல்வியு மெம்மறிவுந்
தாமே பெற வேலவர் தந்ததனாற்
பூமேன் மயல் போயற மெய் புணர்வீர்
நாமே நடவீர் நடவீரினியே

ஔவையின் வாக்குப்படி எண்ணும் எழுத்தும் கண்ணென வாழ்ந்த இனம். நீரளவே யாகுமாம் நீராம்பல் தாம் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு இதனை மறவாமல் பிள்ளைகள் ஒழுக்கத்துடனும், பண்புடனும் கல்வி கற்று பெருவாழ்வு வாழ சுவாமிநாத உங்கள் அருளை வேண்டி நிற்கின்றது ஈழத் தமிழினம்.

ஐக்கிய அமெரிக்காவில் காவேட் (Harvard) பல்கலைக்கழகத்தில் மொழி ஆராட்சி செய்யும் வெள்ளை இன பேராசிரியர் உலகின் முதல் மொழி தமிழ்மொழி என்று தனது மாணவர்களுக்கு பாடம் நடத்துகின்றார். ஐக்கிய அமெரிக்காவில், கனடாவில், பிரித்தானியாவில் மேலும் பல நாடுகளில் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. கனடாவில் அரச பாடசாலைகளில் சர்வதேச மொழிகளில் (International Languages) ஒன்றாக தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

கனடாவில் ஐந்தாம் வகுப்பில் தமிழ் கற்கும் மாணவர் ஒருவர் தனது சக மாணவர்களுக்கு தமிழ் தான் உலகில் மூத்த மொழி என்று கூறினார். அதற்கு மற்ற தமிழ் மாணவன் டைனசோர் (Dynasore)காலத்தில் தமிழ் மொழி இருந்ததா? என்று ஆசிரியரிடம் கேட்டார். அதற்கு ஆசிரியர் டைனசோர் காலத்தில் மனிதர்கள் இருந்தார்களா? என்று பார்க்க வேண்டும். மனிதர்களால் தானே மொழியை பேச முடியும், எழுத முடியும் என்றேன். அதற்கு மற்ற தமிழ் மாணவன் டைனசோரே தமிழ்தான் பேசியது என்றார். இது நகைச்சுவையாக இருந்தாலும் பிள்ளைகளின் மனதில் மொழிப் பற்று எந்த அளவிற்கு ஆழமாக பதிந்திருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு (குறள் 595)

நூலகத்தை அழித்தால் தமிழினம் கல்வியை இழந்து விடும் என்று நினைத்தார்கள். ஆனால் இன்று எமது மக்களும், பிள்ளைகளும் இலட்சக் கணக்கான நூல்களையும், விதம் விதமான கல்வியையும் நினைத்துப் பார்க்க முடியாத அறிவையும், அறிவியலையும், தொழில் நுட்பத்தையும், தொழில்களையும் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்திருப்பது எங்கள் கடவுள் பக்தி, நேர்மை, நீதி, கடுமையான உழைப்பு என்பனவற்றிற்கு கிடைத்த கடவுளின் வரமாகும். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

கச்சியப்பர், அருணகிரியார், யோகர் சுவாமி போன்ற பல புலவர்களாலும், அறிஞர்களாலும் பாடப்பட்ட முருகனுக்கும் ஔவைக்கும் சிறப்பான உறவு உண்டு. சுட்ட பழம் வேண்டுமா? சுடாதபழம்வேண்டுமா? என்ற கதை உங்களுக்கு தெரியும். பெரிய புலவர்களின் பாடல்கள் மட்டுமல்ல, நாட்டார் பாடல்கள் பலவும் முருகனுக்கு உண்டு.நல்லூரானின் நாவல் பழ நாட்டார் பாடல் ஒன்று தாயார் கூறக் கேட்டிருக்கின்றேன். தம்பியடா சின்னக் குட்டி தங்கைச்சியை எங்க விட்டாய்? நல்லூரான் தோட்டத்திலே நாவல் பழம் பொறுக்க விட்டேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற எல்லாச் சிறப்புக்களையும் கொண்ட நல்லூர் கந்தனின் திருவிழாக் காலம் பக்தியும், கண்கொள்ளா காட்சிகளும் கொண்டு பக்தர்கள் அனைவரையும் மகிழ்ச்சிப் படுத்துவதால் எல்லாத் திசைகளிலும் இருந்து மக்கள் நல்லையம்பதி நோக்கி அலை அலையாக வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

குறிஞ்சிக் குமரன் மலைகளிலும், குன்றுகளிலும் (ஆறுபடை வீடுகள்) குடி கொண்டிருப்பதால் நல்லூர் கந்தனுக்கும் ஒரு குன்றும், ஆறும் இருந்தால் எப்படி இருக்கும் என்று மனக்கண்களில் நினைத்துப் பார்ப்பேன். நல்லைக் கந்தனின் புகழ் குன்று போல் உயர்ந்திருக்க, ஆறுமுகனை நாடி வரும் மக்கள் வெள்ளம் ஆறு போல் ஓடிவர எல்லாப் புகழும் நல்லைக் கந்தனுக்கே.

- ஜோதி மூர்த்தி. - Toronto, Canada



# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 17)

*(Continued from last week)*

As was pointed out by Lord Stowell in Ruding v. Smith [(1821) 2 Hag. Con. at p. 282.] when territory is acquired by conquest or cession "no small portion of the ancient law is unavoidably superseded. . .. The allegiance of the subjects and all the law that relates to it-the administration of the law in the sovereign and appellate jurisdictions-and all the laws connected with the exercise of the sovereign authority-must undergo alterations adapted to the change ". In the Cape Colony, of which Lord Stowell was speaking, Roman-Dutch law continued in force by virtue of a Proclamation almost contemporaneous with that applicable to Ceylon but which omitted any reference to " police ", " institutions " or " ministerial officers ". What he said, however, would in their Lordships' view apply also to Ceylon to abrogate any rule of law previously in force there under the government of the United Provinces if it was incompatible with the British concept of the exercise of sovereign authority by the Crown. It is therefore necessary to consider first whether the existence of a relationship which possessed any of the legal characteristics of a contract between the Crown and a person appointed by the Governor in Ceylon to serve in the civil administration of the territory would have offended against the fundamental Concept of the rights and immunities of the sovereign at the close of the eighteenth century.



In their Lordships' view there is no such incompatibility. In the eighteenth century the principal officers of the executive government of a colony were appointed directly by the Crown in England by letters patent. This method of appointment may well have been inconsistent with the creation of a contractual relationship between the Crown and the appointee, but the Proclamation was local in its ambit and would not affect the legal relationship between these officers and the Crown. It applied only to subordinate officers in the civil administration of the government of Ceylon who were appointed locally by the Governor and removable by him. It is now well established in British constitutional theory, at any rate as it has developed since the eighteenth century, that any appointment as a Crown servant, however subordinate, is terminable at will unless it is expressly otherwise provided by legislation; but as pointed out by Lord Atkin in Reilly v. The King [1 1 (1934) A. C. 176 at p. 180. 1**-J 10714 (1/70)] " a power to determine a contract at will is not inconsistent with the existence of a contract until so determined ". In Reilly's Case Lord Atkin, while finding it unnecessary to express a final opinion as to whether the relationship between the Crown and the holder of a public office was constituted by contract, remarked " that in some offices at least it is difficult to negative some contractual relations, whether it be as to salary or terms of employment, on the one hand, and duty to serve faithfully and with reasonable care and skill on the other". Their Lordships thus see nothing inconsistent with British constitutional theory in the Governor of Ceylon being empowered by the Proclamation of 1799 to enter into a contract on behalf of the Crown with a person appointed to an office in the civil administration of the colony as to the salary payable to him, provided that such contract was terminable at will.

It does not follow, however, even if the Governor was empowered to enter into contractual relations with a civil servant in the Colony as to the payment of salary, that the servant would have a right of suit against the Crown for salary unpaid. A general Crown immunity from suit in respect of obligations ex contractu if it existed in the eighteenth century in England might also give rise to the inference that notwithstanding the contractual nature of a civil servant's claim to salary in Ceylon the sovereign attribute of immunity from suit was not intended to be waived by the Proclamation. But by the eighteenth century it had been established that, although no writ could issue against the sovereign, monies due to the subject under a contract with the Crown could be claimed in the English courts by the Procedure of Petition of Right. Their Lordships have not been referred to any case as early as the eighteenth century in which a Petition of Right was brought by a civil servant for arrears of salary; but in 1820 it was taken for granted by Chitty in " The Prerogatives of the Crown " that a Petition of Right would lie " where the King does not pay a debt, as an annuity or wages etc. due from him ". This was a work of high authority which would be familiar to the judges of Ceylon in the first half of the nineteenth century. Stuart Robertson in his " Civil Proceedings by and against the Crown " published in 1908 states categorically that " payment for services rendered may be claimed by Petition of Right " and cites two such petitions brought in the eighteen sixties of which one was successful and the other settled. It was not until cases decided in 1926 and after that any doubt was cast upon this proposition. Their Lordships will advert to these cases later. It is at present sufficient to state that, as the English law stood at the time of the Proclamation, there was no sufficient ground in constitutional theory to justify the inference that the Crown must have intended to deprive a civil servant engaged in Ceylon of any remedy in the courts of that country for arrears of salary, if a remedy had previously been available under Roman-Dutch law as applied in the island.

If therefore under the Roman-Dutch law, as it was applied in Ceylon under the government of the United Provinces, a person holding office in the civil administration of that Government was entitled to a remedy in the courts for arrears of salary agreed to be paid to him, that remedy was preserved by the Proclamation and the plaintiff is entitled to avail himself of it as against the Crown.

It is not, however, essential that it should be demonstrable that such a remedy was in fact exercised before the British occupation, for although the Roman-Dutch law as applied in Ceylon under the Government of the United Provinces is the starting point of the " common law " of Ceylon, it is not the finishing point. Like the common law of England, the common law of Ceylon has not remained static since 1799. ID course of time it has been the subject of progressive development by a cursus curia (Samed v. Segutamby [1 1 (1924) 25 N. L. R. 481]) as the Courts of Ceylon have applied its basic principles to the solution of legal problems posed by the changing conditions of society in Ceylon. In their Lordships' view if long established judicial authority for a proposition of law not inconsistent with the British constitutional concept of the exercise of sovereign authority by the Crown can be found in the decisions of the Ceylon courts themselves there is no need to go back to see whether any precedent can be found for it in the jurisprudence of the Courts of the United Provinces or the doctrine of the Roman-Dutch jurists of the eighteenth century. Still less is it necessary to find a precedent for it in English common law. The absence of any supporting precedent for the proposition in Roman-Dutch law, as applied in the United Provinces, may be due to a number of reasons. It may have been " taken for granted " law in the United Provinces or it may deal with circumstances which did not exist there or did not attract the attention of writers on Roman-Dutch law in the eighteenth century ; or it may be a development of the common law of Ceylon itself either before or after 1799, of which the nascence and growth may be impossible to trace in the absence of any reports of decisions before 1833 and very incomplete reports thereafter until towards the end of the nineteenth century. Even a clear conflicting precedent in the eighteenth-century jurisprudence or doctrine of the United Provinces would not necessarily be a conclusive indication that a later decision of a Ceylon court is erroneous. As Wood Renton J. pointed out in Colombo Electric Tramway Co. v. Attorney-General [1 1 {1914) 16 N. L. R. 161 at p. 173. ] little is known as to the precise extent to which the doctrines of Roman-Dutch law which were applied in the United Provinces themselves were actually introduced into Ceylon while it was under Dutch rule, and if authority were found in the eighteenth century law of the United Provinces which was inconsistent with an old-established line of decisions by the courts of Ceylon, the inference may well be that the authority relates to a part of the law of the United Provinces which was regarded as unsuitable to conditions in Ceylon and was never introduced there.

(To be continued)



மலேசிய மடல்

# உலக அரசியல் அரங்கில் தமிழருக்குப் பெருமை:

## சிங்கையின் 9-ஆவது அதிபராக ஈழத்தமிழ் குடும்பப் பாராம்பரியத்தைக் கொண்ட தர்மன் சண்முக ரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ளார்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், செப்.02



தமிழர்கள் அதிகமாக வாழும் இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் இன்றைய சூழலில் தமிழர்கள் முக்கியமாக அரசியல் பொறுப்பு ஏதும் வகிக்காத சூழலில், மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதானது என்பதைப் போல சின்னஞ்சிறு தீவு நாடாக இருந்தாலும் உலக அளவில் பென்னம்பெரிய மாண்புடன் திகழும் சிங்கப்பூரின் 9-ஆவது அதிபராக தர்மன் சண்முகரத்தினம் என்னும் தமிழர் தேர்வு பெற்றிருக்கிறார்.

ஈழத் தமிழர் மரபினரான இவர்தம் குடும்பத்தார், யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

பத்து ஆண்டுகளாக இந்தியாவின் அமைச்சரவையில் ஒரேயொரு தமிழர்கூட முழுஅமைச்சராக பொறுப்பு வகிக்காத நிலையில், தமிழினத்திற்கு நேர்ந்து உள்ள இந்த அவமானக் காயத்திற்கு மருந்திடும் வகையில், தர்மன் சண்முகரத்தினத்தை குடியரசுத் தலைவராக சிங்கைவாழ் வாக்காளர்கள் பெருவாரியான வாக்குகள் பெரும்பான்மையில் தேர்ந்தெடுத்துள்ளனர்.

சிங்கப்பூர் குடிமக்களில் முக்கால் பங்கிற்கும் அதிகமாக சீனர்களாக இருந்தாலும் அந்த நாட்டை வழிநடத்தும் மக்கள் செயல் கட்சி சார்பில் களமிறங்கிய ஒரு தமிழர் வென்றிருக்கிறார். இவரை எதிர்த்து களம் கண்ட மற்ற இருவரும் சீனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கப்பூரை ஆண்டுவரும் மக்கள் செயல் கட்சியின் அடித்தளம் வலுவானது; சிங்கப்பூரின் தந்தையும் சிற்பியுமான லீ குவான் எங்-இன் பொன்னான ஆட்சிதான் இந்த அடித்தளத்திற்கு வித்திட்டுள்ளது.

அவரின் மகனார் லீ சியென் லூங்கும் சிறந்த ஜனநாயகவாதியாக இருந்தாலும், அவரின் தலைமையிலான இன்றைய மக்கள் செயல் கட்சிக்கு அண்மைக்காலமாக அவப்பெயர் ஏற்பட்டு வந்தது.

ஊழலை கடுகளவும் சகித்துக்கொள்ளாத சிங்கப்பூர் அரச நிருவாகம் தூய்மைக்கு பெயர்பெற்றது. அப்படி இருந்தும், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த ஈஸ்வரனும் ஓங் பெங் செங் என்னும் தொழிலதிபரும் ஊழல் காரணமாக பெரிதும் விமர்சிக்கப்பட்டனர்.



போதாக்குறைக்கு சிங்கை நாடாளுமன்ற சபாநாயகர் டான் சுவான் ஜின்-னிற்கும் நாடாளுமன்ற பெண் உறுப்பினர் செங் லீ ஹியூருக்கும் இடையில் இருந்த திருமணம் கடந்த உறவு, பச்சையாக சொல்ல வேண்டுமென்றால் கள்ள உறவு, சிங்கைவாழ் மக்களை சங்கடப்படுத்தியது.

ஈஸ்வரன், டான் சுவான் ஜின், மணமாகாத செங் லீ ஹியூர் மூவருமே மக்கள் செயல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், அந்தக் கட்சி சார்பில் களமிறக்-கப்பட்ட தர்மன் சண்முகரத்தினத்திற்கான ஆதரவு பாதிக்கப்படுமோ என்ற அச்சம், மக்கள் செயல் கட்சித் தலைவரும் பிரதமருமான லீ சியென் லூங்கிற்கு இருந்தது.

தர்மன் சண்முகரத்தினம் சிங்கையின் பிரதமராக வேண்டும் என்று, பெரும்பாலான சிங்கை மக்கள் ஆதரவு தெரிவித்திருந்தாலும், தர்மன் சண்முகரத்தினம் சற்று அடக்கமாகவும் நிதானமாக்வும்தான் இருந்தார். சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த தாம் பிரதமர் ஆனால், அது, மிகப்பெரும்பான்மை சமுதாயத்தினருக்கு நெருடலாக இருக்கும் என்பதை அவதானித்திருந்தார் தர்மன் சண்முகரத்தினம்.

தருமன் சண்முகரத்தினத்தை நன்கு அறிந்த பிரதமர் லீ, அவரை அதிபராக ஆக்கி பெருமைப்படுத்த முனைந்தது, கடைசியில் வெற்றியாக அமைந்து விட்டது.

இந்த வெற்றி, 2025 நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கை மக்கள், மீண்டும் மக்கள் செயல் கட்சியைத் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நம்பிக்கையை பிரதமர் லீ சியென்னுக்கு அளித்துள்ளது.



சிங்கையின் தற்போதைய அதிபர் ஹலிமா, வரும் 13-ஆம் நாள் ஓய்வுபெறுகிறார்.

தேசிய அளவிலும் உலக அளவிலும் பல பொறுப்புகளை வகித்தவரும் வகித்துவருபவருமான தர்மன் சண்முகரத்தினம், மிகச் சிறந்த அரசியல் தலைவர் மட்டுமல்ல பொருளியல் வல்லுநருமாவார்.

இப்படிப்பட்ட தமிழ்த் தலைவரின் தமிழியப் பாரம்பரியம், இவருடன் முற்றுபெறுமோ என்ற ஐயம் எழுகிறது.

தஞ்சையில் பிறந்து சிங்கையில் குடியேறிய தமிழவேள் கோ. சாரங்கபாணி, கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில், சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் பரந்த அளவில் தமிழ்த் தொண்டாற்றியவர். இந்த இரு நாடுகளும் ஒன்றாக இருந்த காலத்தில் உருவான மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை உருவான நேரத்தில், சமஸ்கிருதம் குடிபுக முனைந்ததை முறியடித்த பெருமகன் தமிழவேள் "கோசா".

அப்படிப்பட்டவருக்கு ஆறு மக்கள் பிறந்தாலும், அவர்களில் ஒருவர்கூட இன்று தமிழராக இல்லை காரணம், அவர் தமிழச்சியை மணம் முடிக்கவில்லை. அதைப்போல, இளைய தமிழவேள் என்று பாராட்டப்படும் ஆதி. குமணின் ஒற்றை மகனும் இன்று தமிழ்ச் சமூகத்துடன் ஒட்டவும் இல்லை உறவாடவும் இல்லை தமிழுடனும் தமிழருடனும் அவர் அந்நியப்பட்டிருப்பதற்குக் காரணம், ஆதி. குமணன் தமிழச்சியை மணம் முடிக்கவில்லை என்பதே.

அதைப்போலவே, தர்மன் சண்முகரத்தினமும் தன் இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டதால், அவர்தம் நான்கு மக்களிடமும் யாழ்ப்பாணத்து தமிழியக்கூறுகள் தொடருமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

**நக்கீரன்** - Nakkeeran
013-244 36 24


கனடாவின் மதிப்பு மிக்க எழுத்தாளர்
"வீணைமைந்தன்" கே.ரி. சண்முகராஜா
அவர்கள் எழுதிய நான்கு புத்தகங்களின்

அறிமுக விழா



"தமிழ் சினிமாவும் நடிகர் திலகமும்"
நடிகர் திலகம் ஐயாவின் 95 வது பிறந்தநாள் வெளியீடு
யாழ்ப்பாணம் மொன்றியால் நகரங்களில் வெளியான
வீணைமைத்தனின்
"மண்ணும் மனசும்"
"தமிழ சினிமாவில் மகாகவிபாரதி பாடல்கள்"
"மறக்கத்தெரியாத மனசு"

இடம் : தூயதாய் ஆரோக்கிய அன்னை ஆலய அரங்கு
காலம் : 23.09.2023 சனிக்கிழமை மாலை 6 மணி
அரங்கு முகவரி :131. BIRCHMOUNT ROAD, TORONTO (ONT) MIN3J7





தொலைபேசி
438 779 9697
416 732 1608

அனைவரும் வாருங்கள்,
நல்லாதரவு தாருங்கள்
வாசியுங்கள் ! நேசியுங்கள் !

# அன்பின் தொனி - 704

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**ஒப்புகொடுத்தல் (அற்பணிப்பு)** - Commitment

### 6. தேவநோடுவசனத்திலும், ஜெபத்திலும் செலவிடும் நேரம்
Daily spending time with God in the Word and prayer

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்தகனிகளைக் கொடுப்பதனால் என் பிதாமகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். **- யோவான் 15: 7-8**

### 7. கடவுளோடுநெருங்கி இருக்கும் ஒப்புவிக்கப்பட்டஐக்கியம்
Keeping Fellowship with God

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில் லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடையபாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.
**1 யோவான 1: 7-9**

### இயேசு எப்படி சீஷர்களை அழைத்தார்?

அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலை போட்டுக கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள். அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர் களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென் றார்கள். **- மத்தேயு 4: 17- 22**

### மிகுந்த ஆஸ்தியுள்ன உரு வாலிபன்
The Rich Young Ruler

அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடையும்படி நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே் நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி: எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக் உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தை யைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்.
**- மத்தேயு 19: 16-22**

தொடரும்...

## கடந்தவையும் கடப்பவையும் ~ (70)

உச்சி வெய்யில் தணிந்தபோதும் - அங்கு
வெக்கையோ கொஞ்சமேனும் குறைய வில்லை

அடர்ந்த மரநிழலில் நின்றுவிட்டு - மேலும்
தொடர்ந்து போனோம் பெரிய வாசலுக்கு - இன்றும்

கண்ணியமான காவலர் கணக்காக பேசிவிட்டு
உள்ளேபோக முகமலர்ந்து அனுமதித்தார்

வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் - அழகிய
கல்வித்தெய்வம் வரவேற்க அவளைச் சுற்றியுள்ள

நறுமலர்ச் செடிகளின் வடிவினையும் இரசித்தபடி - ஒருகாலம்
பெறுதற்கரிய நூல்களைக் கொண்ட பொக்கிசமாம் - யாழ்

நூலக உள் வாசலை நெருங்கவும் குறிப்பறிந்தவர்
போலவும் ஒருவர் தொடர்ந்து வந்து

பார்ப்பவர்க்கு தனியானபாதையொன்று இருப்பதாக
காட்டிச்செல்ல அப் பாதைவழி தொடர்ந்து சென்றோம்

படிப்பதற்கோ நூலை எடுப்பதற்கோ அல்லாமல்
படிப்பவரைக் குழப்புதற்கோ வந்தோம் எனச்

சங்கடம் ஒன்றும் சட்டென்று மனதில் - ஆனாலும்
எங்கள் பாதை இதுதானென்ற பெருமூச்சோடு

உள்ளுக்குள் நுழைந்த போது அவ்விடத்தில்
முன்னுக்கு இருந்தவர் கல்விக்கு மிக உகந்தவர்

அவரது 'அக்கினிச் சிறகுகளால்' என்னில் ஆழப்பதிந்தவர்
பெரியவர் இவர் எளிமையானவர் - மிக

திறமையான அறிவியலாளர் இவர் - விண்வெளித்
துறையில் பொறியியல் பயின்றவர் விஞ்ஞானியுமானவர்

ஏவுகணை நாயகன் இவர் இந்தியாவின்
குடியரசுத் தலைவராய் இருந்தவர்
பேச்சாற்றல் அதிகம் கொண்ட பேராசான்
அப்துல் கலாம் அவர்கள் சிரித்த முகத்துடன்

சிலையாக அங்கிருக்க அவரருகில் அவர் நாட்டுக்
கொடியும் சேர்ந்திருக்க அதைப் பார்த்த மாத்திரத்தே

அங்கிளையும் பார்த்தது அவருக்குப் புரிந்தது - இது
'இந்தியா கோணர்' என்றார்

நூல்களின் தன்மையின் அடிப்படையில் பிரிப்பதுண்டு
நாடுகளின் பெயர்களிலுமா என்ற போது?

கனக்க எல்லாம் சொன்ன அங்கிள்
'எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்' என்றார்

இந்த நூலத்தை வடிவமைத்தவர் இந்தியத்தமிழராம்
இங்குள்ள நூல்களில் பதினாறாயிரம் இந்தியா கொடுத்ததாம் - இப்பவும்

அங்கிருந்தும் வாசகர்கள் வருகிறாராம் தேடலுக்காய்
எங்களது காலத்தில் கிடைக்கவில்லை இந்த வாய்ப்பு

எங்கெல்லாம் தேடிப் போனோம்
பல்கலை நூலகத்தில் கிடைக்காத நூல்களுக்காய் - இன்று

ஒரு இலட்சத்து எண்ணாயிரத்துக்கு அதிகமாம் நூல்கள்
பெருமளவு கணனி வசதிகளும் உள்ளதுவாம்

பார்வையாளர் ஆனதனால் நூல்கள் முழுவதையும்
பார்ப்பதற்கு முடியவில்லை - ஆனாலும்

முடிந்தவரை பார்த்து வந்தோம்

பழைய பத்திரிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், நூல்களின் தொகுதிகள்
படிப்பவர் பகுதி, உரைகள் நடத்திடும் பகுதி இவற்றோடு
கணனிப் பிரிவும் தான்

வாசகர்கள் அதிகம் வருவார்கள் என
வாசலில் ஒருவர் சொன்னபோது - ஒருதரமேனும்

இருந்து வாசிக்க வேணும் என்றொரு விருப்பம்
இருப்பதற்கு நேரம் இல்லாது இருப்பவர்க்கே இந்த ஆசை...

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

## தனது ஓய்வூதிய பணத்தில் இருந்து திருக்குறள் போட்டிக்கு பணப்பரிசில் வழங்கிய மணி மாஸ்டரின் முன் மாதிரியான செயல்பாடு குறித்து அனைவரும் பாராட்டு



**- மன்னார் நிருபர் (07-09-2023)**

மணி மாஸ்டர் விருதுக்கான திருக்குறள் போட்டியின் பரிசலிப்பு விழா வியாழக்கிழமை (7) மதியம் 1.45 மணியளவில் மன்னார் நகர சபை கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.



மணி மாஸ்டரின் புதல்வரும் பொறியியலாளருமான விமலேஸ்வரன் தலைமையில் குறித்த பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தமிழ் மொழியை வளர்க்கும் வகையிலும் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையிலும் 4 பிரிவுகளில் குறித்த போட்டி இடம்பெற்றது.



முதல் இடத்தை பெற்ற 3 போட்டியாளர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், 2 ஆம் இடத்தை பெற்ற 3 போட்டியாளர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாவும், 3 ஆம் இடத்தை பெற்ற 3 போட்டியாளர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாவும், வழங்கப் பட்டுள்ளதோடு பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஏனைய போட்டியாளர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் பணப்பரிசில் வழங்கப்பட்டதோடு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் பணப்பரிசில்களில் 7.500 ரூபாய் வங்கியில் வைப்பில் இடப்பட்டு வங்கி புத்தகம் கையளிக்கப் பட்டதோடு, மிகுதி பணம் கையில் ஒப்படைக்கப்பட்டது.

மணி மாஸ்டர் அவர்களின் ஓய்வூதிய பணத்தில் இருந்து சுமார் 5 இலட்சம் ரூபாவும், அவரின் 4 புதல்வர்களும் இணைந்து 5 இலட்சம் ரூபா வையும் சேர்த்து குறித்த பரிசளிப்பு விழாவை நடத்தி அனைவருக்கும் முன்னுதாரணமாக செயல்பட்டுள்ளனர்.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி. ஜீ.டி. தேவராஜா, மடு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. ஏ.கே. வொலன்ரைன், மன்னார் உதவி வலயக்கல்வி பணிப்பாளர் கே. மனோரஞ்சன், மடு உதவி வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.ஏ. கலவண்ணன் மற்றும் பாடசாலை முதல்வர் களும் கலந்து கொண்டு பரிசில்களையும், சான்றிதல்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வார ராசிபலன்

**08-09-2023 வெள்ளி தொடக்கம் 14-09-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** பிரார்த்தனைகள் நிறைவேறும் வாரம். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதல்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக் கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். எதிர்ப்புக்கள் குறையும். பழைய பகை தீரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் அடைவீர்கள். அரசு வழியில் கவனம் தேவை. பொறுமையாக செயல்பட வேண்டும். சந்தோஷம் அலைமோதும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகள் தவிர்க்கவும். ஏற்றுமதி தொழில் லாபம் கிடைக்கும். பெற்றோர்கள் உடல் நிலையில் கவனம் தேவை. வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மனக்கசப்பு வந்து நீங்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,A




**ரிஷபம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். உள்ளம் மகிழும் காலம். பழைய பகை தீரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் தொல்லை உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தைரியம் கூடும். காதல் கைக்கூடும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நலமே விளையும் வாரமாகும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். சுபச்செய்தி இல்லம் தேடி வரும். தேகப்பலம் கூடும். மனக்கசப்பு நீங்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பணநடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். சகோதரியினால் நன்மை உண்டு. பாக்கியவான்களை சந்திப்பீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: காலபைரவர், அதிர்ஷ்ட எண்: 1,9,8,4
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,Z




**மிதுனம்:** மனிதநேயம் மிகுதியாகும் வாரம். முகப்பொலிவு கூடும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். இல்வாழ்வில் இனிமை தரும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தகுதிகள் மிகுதியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிகள் கூடும். தனவரவு பெருகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்ப வந்து நீங்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவி உறவு மேம்படும். சகோதரியினால் நன்மை உண்டு. கடன் சுமை குறையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. கலவரமான சூழ்நிலை காணப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். வெகுமதி கூடும். மற்றவர்களால் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,M




**கடகம்:** யோகமும், தியாகமும் கலந்த வாரம். இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திரு'டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும். வழக்குகள் வெற்றி தரும். திருமணத்தடை அகலும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் குறையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். ஆடம்பர நாட்டம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**சிம்மம்:** விரக்திகள் மறையும் வாரம். திருப்தி ஏற்படும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். சிந்தனைகள் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மற்ற இனத்தவரால் நன்மை உண்டு. தொழில் லாபம் உண்டு. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. பங்குச்சந்தையில் கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். உடல்பொலிவு கூடும். கர்மவினைகள் அகலும். பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் லாபம் தரும். முன்கோபம் தவிர்க்கவும். வர்த்தக தொழில் லாபம் தரும். பிரச்சனை முடிவுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,7,1,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**கன்னி:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். சொத்து சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்துறையில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. பொறாமைகள் விலகும். ஆபரணச்சேர்க்கை உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. உத்தியோகம் உயர்வு உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். மறைமுக எதிர்ப்பு விலகும். கவலைகள் ஒழியும். தகுதிகள் உயரும். தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். பாராட்டுப் பெறுவீர்கள். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மனோதைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. மெத்தனப் போக்கு மாறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**துலாம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். கலை ஈடுபாடு அதிகரிக்கும். பயணம் அனுகூலம் தரும். மெத்தனப் போக்கு விலகும். திட்டங்கள் நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. தன வரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். பொருளாதார வளம் சேர்க்கும். பழையக் கடன் வசூலாகும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால், அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். இடமாற்றம் உண்டு. தொழில் வளம் கூடும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கற்பகமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். தொழில் வளம் கூடும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள் கூடும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பாராட்டுக்கள் கிடைக்கும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி ஏற்படும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. முதுகில் வலி வந்து போகும். மனபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். அனுகூலமான தருணம். சந்தோஷம் அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி கிட்டும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். விவாகம் முயற்சி தரும். வியாபாரத் தடை ஏற்படும். வீண் வம்பு அகலும். ஆரோக்கியம் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். திட்டம் வெற்றி பெறும். ஸ்திர சொத்துக்கள் சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் உண்டு. பங்குச் சந்தை லாபம் உண்டு. கனவுகள் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. எள் தானம் ஏற்றம் தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். வழக்குகள் சாதகமாகும். தாய் நலனில் கவனம் தேவை. புதிய எண்ணம் நிறைவேறும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும். பொருளாதாரம் உயரும். வேலை வாய்ப்பு கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். ஆரோக்கியம் கூடும். அணிகலன் சேரும். அன்யோன்யம் கூடும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். பொறியியல் துறை லாபம் தரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 8,9,1,4
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,K

***(தொடர்ச்சி _38_ பக்கம்)***

*பாலை நிலம்* - எம் மண்ணின் மணம் கமழும் முழுநீளத்திரைப்படம்
செப்டம்பர் 17 2023 ஞாயிறு, நண்பகல் 1.30 இற்கு
Woodside Square Scarborough திரை அரங்கில் காண்பிக்கப்பட உள்ளது
அனுசரணை - மானிப்பாய் இந்து, மானிப்பாய் மகளீர் பழைய மாணவர் சங்கம் கனடா

# பனிவிழும் மலர்வனமாம் கனடாவில் ஓர் பாலை நிலம்




தாயகத்தில் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றான மானிப்பாய் இந்துக்கல்லூரி/மகளிர்கல்லூரி கடந்த 10ற்கும் மேற்பட்ட தசாப்தமாக பல கல்விமான்களை, விளையாட்டு வீரர்களை உருவாக்கிய அதேவேளை புகழ் பெற்ற கலைஞர்களையும் உருவாக்கியமை பலரும் அறிந்ததே. அந்த வகையில் எமது கல்லூரி பழைய மாணவரும் மானிப்பாயைச் சேர்ந்தவருமாகிய திரு. ரத்தினம் ராஜாமகேந்திரசிங்கம், இப்படத்தின் தயாரிப்பு முகாமையாளராகவும், முக்கிய பாத்திரமேற்று நடித்தவருமாய் இருப்பது இப்படத்தின் வெற்றிக்கு வழிகோலுகின்றது. கல்லூரியில் கல்விபயின்ற காலத்தில் இல்லங்களுக்கிடையிலான நாடக போட்டிகளில் நடித்து சிறந்த நடிகர் விருதையும் பெற்றுக்கொண்ட இவர் சிறந்த விளையாட்டு துறை வீரராகவும் கல்லூரியின் மாணவர் தலைவராகவும் prefect இருந்தமை குறிப்பிடத்தக்கது. இளைப்பாறிய வங்கி முகாமையாளராக இருந்த இவர் எற்கனவே 5 திரைப்படங்களில் நடித்த அனுபவச் செழுமை பாலை நிலத்தை பசுமையாக்குகின்றது என்றால் மிகையாகாது. பாலை நிலத்தில் அவரது அபார நடிப்பினை பார்த்த பல இயக்குனர்கள் தங்களின் படங்களிலும் அவரை நடிக்க வைத்துள்ளார்கள். இற்றைவரை அவர் 16 முழு நீள திரைப்படங்களில் நடித்து கல்லூரிக்கும் தாய் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் சினிமாத்துறைக்கு ஆற்றிவரும் பெரும் பங்களிப்பினை கருத்தில் கொண்டு அரச விருதாகிய "கலை ஞான சுடர்" விருது இவருக்கு 2019 இல் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அத்துடன் தமிழ் சங்கின் உயர் விருதாகிய "சாதனையாளர் விருதையும்" அவர் கடந்த வருடம் பெற்றுக்கொண்டார் திரைப்படத் துறையில் பல விருதுகளை வென்றெடுத்த இவர் அன்மையில் 14ஆவது நோர்வே தமிழர் திரைப்பட விழாவில் Special Jury Award இனை தனதாக்கிக் கொண்டார்.

மண்வாசனைமாறாது முகிழ்ந்த காதல், போர் முடிந்த பாலைநிலத்தின் பின்னணியில் மணம் வீசும் ஓர் சிறந்த திரைப்படம்.

ஜூட் சுகி யின் இயக்கத்தில் ஓர் வெற்றிப்படைப்பு. இதன் கதை, திரைக்கதை, ஒளிப்பதிவு எல்லாவற்றையும் அவரே பொறுப்பேற்றமை திரைப்படத்தை மேலும் மெருகூட்டுகிறது. இந்திய சினிமா துறையில் இவர்பெற்ற அனுபவத்தைக்கொண்டு முழுதும் எம்மண்ணின்கலைஞர்களை வைத்து, உலக தரத்திற்கு சற்றும் குறைவில்லாது இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளமை "எம்மால் முடியும் தம்பி" என்பதினை அடித்து முழக்குகிறது.

இத்திரைப்படம் மேலும் 3 விருதுகளை பெற்றுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. அவை சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருதை ஜூட் சுகியும், சிறந்த இசையமைப்பாளருக்கான விருதை பிரசாந் கிருஷ்ணபிள்ளை அவர்களும், சிறந்த நடிகைக்கான விருதை அபர்ணாவும் பெற்றுள்ளார்கள்.

முற்றுமுழுதாக எம் மண்ணில் பூத்த பல புதிய கலைஞர்களை உள்வாங்கி செவ்வனவே செதுக்கி புடம்போட்டு மிளிர வைத்த பெருமை இயக்குனர் ஜூட் சுகியையே சாரும்.

கதாநாயகனை முதன்மைப்படுத்தும் படங்களில் இருந்து வேறுபட்டு யதார்த்தமாக அமைகிறது அனைத்துப் பாத்திரங்களும் இப்படத்தில்.

குறிப்பாக ஒரு பார்வையால், சிறிய முகபாவனையால் சிலிர்க்கவைக்கும் எம் மண்ணிற்கே உரிய அந்தக் காதல், போரின் பின்பான பாலைநிலத்தில் பூத்து, காயாகிக் கனியானதா?

திரைப்படமே பதில்சொல்லும்.

பல ஈழத்துக் கலைஞர்களின் உடன் பிறப்பே வறுமைதான். திறமை இருந்தும் பின்தொடரும் பொருளாதார நெருக்கடி.

பாலை நிலம் அதை வெற்றிகொள்ள, மிகக்குறைந்த பொருட்செலவில் ஜூட் சுகியால் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவரது சொந்தப்பணமும் அவருடய அன்னை மனமுவந்தளித்த நன்கொடையுமே இதற்கு உதவியது.

இவ்விடத்தில் தனயனின் கலை ஆர்வத்திற்கு ஆதரவு நல்கிய ஓர் தாய் இக்காலகட்டத்தில் நிச்சயம் போற்றப்பட வேண்டியவளே. இப்பேற்பட்ட முயற்சிகள் மேலும் வளர வழிகோலுவது எம்மவர் கடமை.

இந்தியத் திரைப்படங்களையே பார்த்து பழக்கப்படுத்திக்கொண்ட பலர் உலகத்தரத்திற்கு சற்றேனும் சளைக்காத எம்வர் தயாரிப்புக்களை பார்வையிட்டு ஊக்கமளிப்பதில் என்ன தயக்கமோ யாம் அறியோம்.

முக்கியமாக நம்ஈழத்தவர் திரைப்படத் தயாரிப்பில் பல கலைஞர்கள் பங்கேற்கின்றனர், நடிகர்கள், தொழில்நுட்பக்கலைஞர்கள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் என்றுபலர், இவர்கள் அனைவருமே கலைத்துறைமேல் தாம் கொண்ட ஆர்வத்தால் பொருளாதாரம் பார்க்காது அர்ப்பணம் செய்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. இத் தயாரிப்புகளின் தரமோ தொழில்நுட்பமோ எந்தவிதத்திலும் மற்றைய நாட்டுத்தயாரிப்புகளுக்கு குறையாது இருப்பதென்பதும் பலரும் அறிந்ததே. மாற்றப்படவேண்டியது எம் மனமே.

தாயகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் துணியும் பலர் இவ்வழியும் நல்வழியென அறிந்து முன்வரல் ,விடியலுக்கு வழிகோலும்.

இது எமது மண் சார்ந்த கதை, மண்ணில் வாழ்ந்தவர்ளின் கதை, மண்ணில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களின் கதை, எனவே இத் திரைப்படத்தை பார்வையிட்டு,மண்ணின் வாசனையை நுகர்வதோடு அவர் மென்மேலும் வளர உதவிக்கரம் கொடுங்கள்.

மா. இ /மா. ம . ப. மா. ச. கனடா கிளையின் சார்பில்

**ஜெகா சுஜந்தன்**


## இவ்வார ராசிபலன்

*(37 பக்கத் தொடர்ச்சி)*




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். கடுமையான காலம். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளி நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். மனைவியின் மருத்துவச் செலவு உண்டு. விரக்திகள் மறையும். வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பண வரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். தேக ஆரோக்கியம் கூடும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிடைக்கும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: குங்குமகலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,D




**கும்பம்:** வெளியூர் பயணம் லாபம் தரும் வாரம். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். துணிவோடு செயல்படுவீர்கள். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். விளையாட்டு துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். தாய் வழி உறவில் கவனம் தேவை. பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 4,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,W




**மீனம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை கூடும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். வாயில் தேடி வரன் வரும். பணமும், பாராட்டும் சேரும். மங்கல செய்தியால் மனம் மகிழும். விலகி சென்றவர் விரும்பி வருவர். கனவுகள் பலிதமாகும். மருத்துவச் செலவு குறையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்களால் பலன் தரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொட்டது துலங்கும் காலம். தாராளமான தனவரவு உண்டு. குழப்பங்கள் நீங்கும். வழக்குகள் சாதகமாகும். வீண் வம்புகள் அகலும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். தாய் வழி உறவில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. திருமண முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,F

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP

MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa
லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1431 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 8, 2023

# இசையை முழு நேரத் தொழிலாகக் கொண்ட தாயகக் கலைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த புலம் பெயர் உறவுகளின் ஆதரவு வேண்டும்

## – தாயகப் பாடகர் சாந்தன் கோகுலன் உருக்கத்தோடு வேண்டுகோள்

“எமது தாயக மண்ணில் இசையை முழு நேரத் தொழிலாகக் கொண்ட தாயகக் கலைஞர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் உள்ளார்கள். அவ்வாறான கலைஞர்களுக்கு தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை. எனவே எமது தாயகக் கலைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த புலம் பெயர் தமிழ் உறவுகள் ஆதரவு நல்க வேண்டும். அவமர்களின் பலரை வெளிநாடுகளுக்கு அழைத்து சந்தர்ப்பங்கள் வழங்கவேண்டும். அத்துடன் நாம் தெனனிந்தியக் கலைஞர்களையும் மதிக்கின்றோம். அவர்களில் பலர் இசையே முழு நேரத் தொழிலாகச் செய்கின்றார்கள்.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)



# "ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா" வெள்ளிக்கிழமை 8ம் திகதி அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பமாகின்றது




உலகெங்கும் உள்ள தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குனர் ஆகியோர் எதிர்பார்த்து காத்திருக்கும் -ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா“ வெள்ளிக்கிழமை 8ம் திகதி அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பமாகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்ந்து விழாவிற்கு சமர்ப்பிக்கப்பெற்ற திரைப்படங்கள் 9ம் திகதி சனிக்கிழமையும் 10 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 11.00 தொடக்கம் திரையிடப்படவுள்ளன.

மேற்படி திரைப்பட விழாவிற்கு அனைத்து ஏற்பாடுகளை -ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா“ நிறுவனத்தின் தலைவர் செந்தூரன் தனது குழுவினருடன் இணைந்து செய்துள்ளார்.

**www.ttff.ca**
**info@ttff.ca**

# சிங்கப்பூரின் புதிய ஜனாதிபதியாக தர்மன் சண்முகரத்தினம் என்னும் தமிழர் தெரிவாகியுள்ளதைப் பாராட்டும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்



தமிழர்கள் அதிகமாக வாழும் இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் இன்றைய சூழலில் தமிழர்கள் முக்கியமாக அரசியல் பொறுப்பு ஏதும் வகிக்காத சூழலில், மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதானது என்பதைப் போல சின்னஞ்சிறு தீவு நாடாக இருந்தாலும் உலக அளவில் பென்னம்பெரிய மாண்புடன் திகழும் சிங்கப்பூரின் 9-ஆவது ஜனாதிபதியாக உயர்திரு தர்மன் சண்முகரத்தினம் என்னும் தமிழர் தெரிவாகியுள்ளதை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் வாழ்த்தி பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

# தமிழ்நாடு "இசைக் கவி" ரமணன் அவர்களை நேர்காணல் செய்த யுகம் வானொலி மற்றும் தமிழ்ஆரம் தொலைக்காட்சி ஆகியன



நாளை 9ம் திகதி சனிக்கிழமையன்று மாலை கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள “பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி“ என்னும் தலைப்பிலான இலக்கிய உரையை வழங்கவுள்ள தமிழ்நாடு “இசைக் கவி“ ரமணன் அவர்கள் தற்போது கனடா வந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை “இசைக் கவி“ ரமணன் அவர்களை நேர்காணல் செய்த யுகம் வானொலி மற்றும் தமிழ்ஆரம் தொலைக்காட்சி ஆகிய ஊடகங்கள் அவரைப் பாராட்டி மகிழ்ந்தன யுகம் வானொலி இணை அதிபர்கள் கணபதி ரவீந்திரன்- ரூபி யோகதாசன் மற்றும் “தமிழ் ஆரம்“ நிறுவனர் திரு கேதீஸ் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

# தமிழ்நாடு "இசைக் கவி" ரமணன் அவர்கள் கனடா உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கும் விஜயம் செய்தார்



நாளை 9ம் திகதி சனிக்கிழமையன்று மாலை கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள “பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி“ என்னும் தலைப்பிலான இலக்கிய உரையை வழங்கவுள்ள தமிழ்நாடு “இசைக் கவி“ ரமணன் அவர்கள் நேற்று வியாழக்கிழமை மாலை கனடா உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கும் விஜயம் செய்தார்.

அங்கு இசைக் கவி“ ரமணன் அவர்கள் கனடா உதயன் பத்திரிகையின் அச்சுப் பதிப்பு மற்றும் இணையவழி ஊடகப்பிரிவு ஆகியவை தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார். அனுமதிச் சீட்டுக்கள் தொடர்பான விபரங்களுக்கு 647 762 9512 மற்றும் 647 891 7725 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

Cheers
Best Regards,
Sheeba Elizbeth
Perfect Bookkeepers and Tax consultants Inc.
Suite 13B - 1211 Kingston Road, Pickering ON, L1V 6M5
Phone: 905-621-1409
Email: bookkeeperperfect@gmail.com
Website: www.perfectbookkeeper.ca
CBA
Canadian Bookkeepers Association
We help people with their Bookkeeping, loan, taxes needs, while they expand their business.